பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 18 வெள்ளிக்கிழமை (02.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:037

மாநகர சபை

# கண்மூடித்தனமான விமானத்தாக்குதல்!

# அப்பாவி மக்கள் 5 பேர் நேற்றுப் பலி!

## 28 பேர் படுகாயம்; குடியிருப்புகள் நாசம்

கிளிநொச்சி, டிசம்பர் 02

வன்னியில். பொதுமக்களின் குடியிருப்புகள் மீது விமானப் படை விமானங்கள் நேற்று பல தடவைகள் கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

பரந்தனுக்கு அருகே முரசுமோட்டைப் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் ஐந்து பேர்கோரமாகப் பலியாகினர். குழந்தைகள், பெண்கள் உட்பட 28 பேர்படுகாயமடைந்தனர். அப்பாவி மக்களின் குடியிருப்பு கள் பலவும் நாசமடைந்தன.



கொலையுண்டவர்களில் மூவரின் சடலங்கள்

முரசுமோட்டையிலுள்ள பொதுமக்கள் குடியிருப்புகள் மீது நேற்று மதியம் 1.45 மணியளவில் விமானங்கள் குண்டுகளைக் கொட்டித் தீர்த்தன.

பரந்தன் - முல்லைத்தீவு வீதியிலுள்ள மூன்றாம் நான்காம் மைல்கல் பகுதியில் அமைந்துள்ள பொதுமக்கள் குடியிருப்பு கள் மீதே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதன்போது 5 பேர் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர். காயமடைந் தவர்கள் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமுற்றோரை மீட்பதிலும் சிரமம் இப்பகுதியை நோக்கிக் கடுமையான ஆட்லறித் தாக்குதல்கள் இடம் பெறுவதன் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகத்துறை அமைச்சு ஜனாதிபதியிடம்

கொழும்பு, ஜன. 02

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஊடகத்துறை அமைச்சைப் பொறுப்பேற்றுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காட்சி மூலம் கிடைத்த பணத்தில் ஒருபகுதி சிறுவர், முதியோர் இல்லங்களுக்கு

### யாழ்.படைத்தளபதி சந்திரசிறி வழங்கினார்

யாழ்ப்பாணம், ஜன.2

யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட தொழில்சார் மற்றும் கல்விக் கண்காட்சி களியாட்டம் மூலம் கிடைத்த நிதி சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நேற்று பகிர்ந் தளிக்கப்பட்டது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தனில் இருதரப்பும் கடுஞ்சமர் இரணைமடுவும் இராணுவத்திடம்

கொழும்பு, ஜன.02

வன்னியில் படை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் பரந்தன் சந்தியையும்அதனைச் சுற்றி யுள்ள பகுதிகளையும் வியாழக்கிழமை தமது முழுமை யான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

''இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான கடும் மோதலுக்குப் பின்னர் கடந்த புதன் கிழமை அதிகாலை இராணுவத்தின் விசேட படைப்பிரி வினர் பரந்தனைக் கைப்பற்றினர். பத்து வருடங்க ளுக் குப் பின்னர் மீண்டும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## 2 நாள்களுக்குள் கிளிநொச்சியும் தம்வசம் வீழ்ந்துவிடும் என்கிறார் இராணுவத் தளபதி

கொழும்பு, ஜன.02

அடுத்த 48 மணித்தியாலங்களுக்குள் கிளிநொச்சி கைப்பற்றப்பட்டுவிடுமென இராணுவத் தளபதி சரத் பொன்சேகாநேற்று மாலை தெரிவித்துள்ளார்.

பரந்தன் இரணைமடு சந்தியைக் கைப் பற்றிவிட்டதாகஇராணுவம் அறிவித்துள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் குண்டுவீச் தமிழரைக் கொல்லும் அரசுக்கு இஸ்ரேலிய அரசைக் கண்டிக்க என்ன அருகதை?

### கூட்டமைப்பு எம்.பி. ஸ்ரீகாந்தா கேட்கிறார்



கொழும்பு, ஜன.02

தனது சொந்த நாட்டின் மக்களின் மீதே விமானகுண்டு வீச்சுகளை நடத்திக் கொண்டிருக்கும் அரசாங்கம், பலஸ் தீனத்தின் காஸா பிரதேசத்தின் மீது கடந்த சில நாள்க ளாக நடத்தி வந் திருக்கும் விமானக் குண்டு வீச்சுக்களை கடுமையாக கண்டித்திருக்கின்றது. இந் நிலையில் இஸ்ரேலிய அரசாங்கத்தை கண்டிப்பதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு என்ன அருகதை இருக்கின்றது?

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ஸ்ரீகாந்தா இவ்வாறு கேள்விஎழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:புதன்கிழமை கிளிநொச்சி முரசுமோட்டையில்இலங்கைவிமானப்படை விமானங்கள் காலையிலும் பிற்பகலி லுமாக இரண்டு தடவைகள் நடத்திய குண்டு வீச்சில் நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 18 பேர் காயமடைந்தும் உள்ளனர். இதனை சந்தேகத்திற்கு இடமில்லாமல் பல்வேறு (15 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் பொலிஸார் மீது கிளைமோர்த் தாக்குதல்

அம்பாறை, ஜன.02

அம்பாறை, சம்மாந்துறை, வீரச்சேனை வீதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட் டிருந்த பொலிஸார் மற்றும் ஊர்காவற் படையினர் மீது நேற்றுக்காலை 8.15 (16 ஆம் பக்கம் பார்க்க)

### விடுதலைப்புலிகளை அழிக்கும் போருக்கு

## பாகிஸ்தான் ஆயுத உதவி வழங்குகிறது இந்தியா ஏனைய உதவிகளைச் செய்கிறது

### கொழும்பு ஊடகம் தகவல்

கொழும்பு, ஜன.02

அரசாங்கம் தற்போது தமிழீழ விடு தலைப் புலிகளுக்கு எதிராக மேற் கொண்டுவரும்படையெடுப்புக்குதேவை யான ஆயுதங்கள் மற்றும் போர்க் கருவி கள் உள்ளிட்ட இராணுவ உதவிகளை பாகிஸ்தானும் இந்தப் போருக்குத் தேவை யான ஏனைய உதவிகளை இந்தியாவும் வழங்கி வருகின்றன.

கொழும்பிலிருந்து வெளிவரும் 'த மோனிங் லீடர்' இத்தகவலை வெளியிட்டி ருக்கிறது.

அப்பத்திரிகையில் அரசியல் பத்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ''கால வரையறை'' என்ற பொறிக்குள் சிக்கியுள் ளது. இப்போது அது மீண்டும் ஒரு கால (15 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமைத்துவ பயிலுநர் பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன.2

இலங்கை வங்கி முகாமைத்துவ பயிலுநர்களுக்கான நேர் முகப் பரீட்சை முன்னர் அறிவித்தபடி எதிர்வரும் 16ஆம் 18ம் திகதிகளில் இடம் பெறமாட்டாது என வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் அறிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சை இடம் பெறும் திகதி பின்னர் அறிவிக்கப் படும் என்றும் அவர் தெரிவித்தார். (01)

(முன்னர் வந்த செய்தி 11 ஆம் பக்கத்தில்)

## கல்வி உபகரணங்கள் நாளை வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன.2

இருபாலை கிழக்கு வசந்தபுரம் மடத்தடி ஆகிய பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் நாளை சனிக்கிழமை வழங்கப்படவுள்ளன.

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவின் ஏற்பாட்டில் இடம் பெறும் இந்த நிகழ்வு நிறுவன மண்டபத்தில் தலைவர் கோ.சிவசுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.மகேந்திரன் கலந்து கொள்வார். (01)

## வாசிப்பு மாத நிகழ்வு நாள்

யாழ்ப்பாணம், ஜன.2

சாவகச்சேரி நகரசபையின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வுகள் எதிர்வரும் ஆறாம் திகதி காலை 8.30மணிக்கு நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் கலந்து கொள்வார்.

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில் வழங்கலும் நகரசபையின் 'நகரணி' சிறப்பு மலர் வெளியீடும் இடம் பெறும்.

(1-207)

## மாநகரசபை பிரிவில் கிணறுகள் சுத்தம் செய்யும் திட்டம் நடைமுறையில்

யாழ்ப்பாணம், ஜன.2

இயற்கை அனர்த்தம் காரணமாக மாசடைந்த கிணறுகளை மக்களின் பங்களிப்புடன் இறைத்துச் சுத்தம் செய்யும் திட்டம் ஒன்றை யாழ்.மாநகரசபை முன்னெடுக்கவிருக்கின்றது.

இத்திட்டத்தின் மூலம் பயனடைய விரும்புவோர் மாநகரசபையின் நீர்வேலைப் பகுதியினருடன் கடித மூலமாகவோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ கேட்டுள்ளார்.

மேற்படி கிணறுகளை இறைப்பதற்கத் தேவையான மண்ணெண்ணெயை மாத்திரம் பயனாளிகளே வழங்கி உதவவேண்டுமென எதிர்பார்ப்பதாக அவர் கூறினார். (1)


### பாலர் முன்பள்ளி

ஆரம்பம்: 05.01.2009
இடம்: இல.04 செட்டித்தெரு, நல்லூர் (கைலாசர் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்)
1.குறிப்பு தரம் 1ற்கான எழுத்துக்கள் சொற்கள் பயிற்றுவிக்கப்படும்.
2. 25 மாணவர்களுக்கே அனுமதிகள் வழங்கப்படும்.
நிர்வாகத்தினர்.

### தேவை

எமது நிறுவனத்தின் கொப்பிக் கடைக்கு போட்டோ அன் வீடியோ, எடிட்டிங் வேலைகளில் அனுபவமுள்ளவர்கள் தேவை. பழகி பணிபுரிய விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும். அண்மையிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
"திருமுருகன்"
கந்தசாமி கோவிலடி, நீர்வேலி.

எமது இனியபுத்தாண்டு நல்வாழ்த்துகள்
ICT/GIT
By:- Mr.S.Pranavan
Computer for KIDS
By :- Mrs.R.J. Anushiya
ENGLISH LANGUAGE
Grade 6 -G.C.E (O/L) & A/L
Mr.K.Ramanathasan
தமிழ் மொழி
திரு.அ.நவநீதகிருஷ்ணன்
கணிதம்
திரு.க.நிரஞ்சன் திரு.அ.சுரேஸ்
அனைத்து வகுப்புகளும் நடைபெறுகின்றன.
புதிய பிரிவுகள் 03-01-2009 ஆரம்பம்
IECE 121/1 Arasady Road, Kanthermadam, Jaffna
Contact No:- 0212227845 Hot line - 0776154342



### யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

விலை மாற்றம்

01.01.2009 தொடக்கம் பாண், பணிஸ் வகைகளிற்குப் புதிய விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1 றாத்தல் பாண் | - 44.00 |
| 1சோடி கிறீம் பணிஸ் | - 24.00 |
| 1சேடி ரீ பணிஸ் | - 22.00 |
| கொம்பு பணிஸ் | - 14.00 |
| சங்கிலி பணிஸ் | - 22.00 |
| அடைக்கேக் | - 18.00 |

என்பதை விற்பனையாளர்கள், பாவனையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
செயலாளர்.


## மரண அறிவித்தல்கள்

### தம்பையா தங்கம்



கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பையா தங்கம் நேற்று (01.01.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன் தம்பையாவின் பாசமிகு மனைவியும் தம்பையா அருளானந்தம் (கனடா), பிரபாகரன் (ஜேர்மன்), கெங்காதரன், முரளி, தங்கேஸ்வரி (டென்மார்க்), குழந்தைவேல் பத்மாவதி (ஆசிரியை, யா/கம்பர்மலை அ.த.க.) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் ஊரிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்மா ஹாட்வெயர்ஸ்,*
*மல்லாமலை, கம்பர்மலை,*
*வல்வெட்டித்துறை.*

தகவல்:
திரு.திருமதி பத்மாவதி குழந்தைவேல்
(ஆசிரியை).

### திருமதி தையல்நாயகி கிருஷ்ணசாமி

(ஓய்வுபெற்ற பரிசாரகர், யாழ்.போதனா வைத்தியசாலை)



யாழ்.பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையல்நாயகி கிருஷ்ணசாமி நேற்று (01.01.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலுச் செட்டி கிருஷ்ணசாமியின் அன்பு மனைவியும் திருமதி பத்மசுலோசனாவின் அன்புத் தாயாரும் திருமதி லோசனாதேவி (ஜேர்மன்) அவர்களின் வளர்ப்புத் தாயும் M.A.பஞ்சநாதன் (ஓய்வுபெற்ற சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி, மக்கள் வங்கி, தலைமைக் காரியாலயம்), செல்வராசா (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி சாமினி (லண்டன்), P.N.சுதர்சன் (யாழ்.கனகரத்தினம் ம.ம.வி), கிருஷாந்தி (கொழும்பு பல்கலைக்கழகம்), ரவீந்திரன் (லண்டன்), பிரசன்னா (ஜேர்மன்), வியாசன் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் தனஞ்சயன் (லண்டன்), சஞ்சயன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2009) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M.A.பஞ்சநாதன்
(இளைப்பாறிய சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி, மக்கள் வங்கி தலைமைக்காரியாலயம்).

69 B, மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோவிலடி),
யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 2560


ஸ்ரீ வல்லிபுரேசன் துணை

### முதலாவது பிறந்ததின வாழ்த்துக்கள்



வர்மா
சிவன்கோவிலடி, ஆவரங்காலைச் சேர்ந்த
ஜனார்த்தனசர்மா - காயத்திரி
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்
ரிஷிவர்மன்
(வர்மா)



தனது முதலாவது பிறந்தநாளை, ஸ்ரீவல்லிபுர மாயவனின் திருவருளுடனும், நடராஜ இராமலிங்கேஸ்வரப்பெருமானின் நல்லாசிகளுடனும் இன்று (02.01.2009) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்புள்ள அப்பா அம்மா, பூட்டன்மார், பூட்டிமார், அப்பப்பா, அப்பம்மா, தாத்தாமார், பாட்டிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமா, மாமி, அத்தைமார், அண்ணன்மார், அக்காமார், மைத்துனர்மார், மைத்துனி, தம்பி, தங்கை இவர்களுடன் ஹரிஷ் அண்ணா, கிருஷ்ணா அண்ணா, ரிஷி அண்ணா மற்றும் உற்றத்தார், சுற்றத்தார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகிறார்கள்.

*சிவன் கோவிலடி,*
*ஆவரங்கால்.*

பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு J.P (அப்பப்பா)
(பிரதம குரு, ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்).


### தகவல் விஞ்ஞான டிப்ளோமா நேர்முகப் பரீட்சை நாளை

இலங்கை நூலகச்சங்கத்தின் ஏற்பாட்டில் நூலக தகவல் விஞ்ஞானடிப்ளோமா கற்கை நெறிக்கான நேர்முகப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

### சீருடை விநியோகம்

மட்டுவில்தெற்கு சரஸ்வதி வித்தியாலய மாணவர்களுக்கான இலவச சீருடைத்துணி நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு வழங்கப்படும்.சகலபாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் சமூகமளிக்குமாறு பாடசாலைஅதிபர்கா.குணசிங்கம் கேட்டுள்ளார்.


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி சுதா கஜேந்திரகுமார் L.L.B. (Colombo)
ATTORNEY- AT- LAW

விநாயகர் வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்த திருமதி சுதா கஜேந்திரகுமார் அவர்கள் 16.12.2008 அன்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா முன்னிலையில் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையிட்டு அவரை மனமாரப் பாராட்டுவதோடு, அவரை கற்பித்த ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், பெற்றோர், சட்டத்துறை சார்ந்த அனைவருக்கும் எங்கள் நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவிக்கின்றோம். அவர் மேலும் இத்துறையில் உயர்ந்து விளங்கிட எல்லாம் வல்ல ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் அருள் புரிவாராக.

வாழ்த்திப் பெருமையடைவோர்:
நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்தினரும், ஊர் வாழ் மக்களும்
விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.



IBMS இன் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
மாணவர்கள் நண்பர்கள்,நலன்விரும்பிகள், அன்பர்கள் அனைவருக்கும்
IBMS இன் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.
மலரும் இப்புத்தாண்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

IBMS இன் கணனிக்கற்கைநெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்.

Courses
1.Diploma in Microsoft Office
2.Diploma in Desktop Publishing
3.Diploma in InterNet Technology
4.Diploma in Hardware Technology
5.Diploma in Video Editing
6.Diploma in Computerized Accounting
7.Certificate in Microsoft Word
8.Certificate in Microsoft Excel
9.Certificate in Microsoft Access
10.Certificate in Adobe Pagemaker
11.Certificate in Adobe Photoshop
12.Certificate in CorelDraw

பிரிவு 1: 02/01/2009
பிரிவு 2: 03/01/2009
பிரிவு 3: 17/01/2009
பிரிவு 4: 21/01/2009
பகல் 10.00மணி

2008 O/L
பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே உங்கள் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரையுள்ள பொன்னான காலத்தை IBMS உடன் இணைந்து பயனுள்ளதாக்கிக் கொள்ளுங்கள்

மாணவர்கள்,அரச தனியார் நிறுவனங்களில் பணி புரிபவர்களின் வசதிக்கேற்ப பிரத்தியேக வகுப்புக்கள் எம்மால் ஒழுங்கு செய்து தரப்படும்

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
#209,மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம்
T.P.No:021 222 8232 FAX:021 222 6933
Branches : நெ.ம.ம.வி வீதி, நெல்லியடி, சங்கத்தானை சாவகச்சேரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இராணுவத் தீர்வின் மூலம் சமாதானம்; தெற்கின் முழு நம்பிக்கையும் இதுதான்!

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அரசுப் படைகள் தினசரி பெரு வெற்றியீட்டி வரு கின்றன எனப் பெருத்த எடுப்பில் கொழும்பு செய்யும் பிரசாரத்துக்கு தென்னிலங்கையில் பரவலாகப் பெரு வரவேற்பும் ஆதரவும் கிடைத்து வருகின்றன.

இதனால் இலங்கை இனப்பிரச்சினையை இராணுவ ரீதியில் தீர்க்கலாம் என்ற முழு நம்பிக்கை தென்னிலங்கையில் வலுப்பெற்றிருக்கின்றது.

அண்மையில் ஆய்வு நிறுவனம் ஒன்று நடத்திய புள்ளி விவரத் திரட்டல்களின்படி இனப்பிரச்சினையை இராணுவ ரீதியில் தீர்க்க முடியும் என்ற முழு நம்பிக்கை நாட்டின் மூன்றில் இரண்டு பங்கு மக்களுக்கு இப்போது ஏற்பட்டிருப்பது தெளிவாகியுள்ளது.

இராணுவ ரீதியில் இனப்பிரச்சினையைத் தீர்க்கலாம் என 67 வீதத்தினரும், தீர்க்க முடியாது என்று ஆக 25 வீதத்தினரும் பதிலளித்திருக்கின்றார்கள்.

அதுவும் இராணுவ ரீதியில் - 2009 ஆம் ஆண்டிலேயே - இனப்பிரச்சினையைத் தீர்த்து விட முடியும் என்று 57 வீதமானோர் முழுமையாக நம்புகின்றனர் என அந்த ஆய்வறிக்கை கூறுகின்றது.

அது மாத்திரமல்ல. இப்படி இராணுவ ரீதியில் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு, யுத்த நடவடிக்கைகள் முடிவுற்றதும் நாட்டுக்கு நிரந்தர அமைதி கிட்டிவிடும் என 53 வீத மக்கள் முழுமையாக நம்புகின்றனர் என்றும் அந்தப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

தென்னிலங்கைச் சிங்களத்தின் இந்தக் கருத்தைத்தான் "2009 ஆம் வருடம் இராணுவத்தின் வெற்றி ஆண்டு" என அண்மையில் பிரகடனம் செய்திருந்தார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் கூறியமை போல தென்னிலங்கையின் - சிங்களத்தின் மனவமைப்பின் - அரசியல், பெரும் போராகப் பேய்வடிவம் எடுத்து நிற்பதையே இக்கருத்துகள் பிரதிபலிக்கின்றன.

அன்பையும் அறத்தையும் போதித்த புத்த பகவானைப் போற்றி வழிபடுவோரின் தேசத்தில் இனக் குரோதமும், அடக்குமுறை ஆர்ப்பரிப்பும், போர் வெறிப் பிரகடனமுமே தலைவிரித்தாடுகின்றன. போர்வெறிப் பேரிகைகளும், யுத்த சந்நதங்களுமே இங்கு முழங்குகின்றன. போரைக் கைவிட்டு, அமைதி வழியில் பிரச்சினையைத் தீர்த்து, சமாதானத் தீர்வை எட்டுக என்று குரல் கொடுக்க தென்னிலங்கையில் எவரும் தயாரில்லை.

சிங்களத்தின் அரசியல்வாதிகளில் இருந்து ஆன்மீகவாதிகள் வரை - பத்திரிகையாளர்களில் இருந்து பாமரர்கள் வரை - அனைத்துத் தரப்பினரதும் மூளையத்தை இத்தகைய போர்வெறித் தீவிரக் கருத்தாதிக்கமே பற்றிப் பீடித்து விழுங்கி நிற்கின்றது.

ஈழத் தமிழர்களுக்கு நியாயத் தீர்வு வழங்குவது குறித்துப் பேச ஆளுங்கட்சியோ, அதன் தலைவர்களோ தயாரில்லை. பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் தலைவர்கள், தமிழர்கள் மீதான சிங்களத்தின் அடக்குமுறைக் கெடுபிடியை உறுதிப்படுத்துவதற்காகத் தமிழரின் தேசியத் தனித்துவத்தை அங்கீகரிக்க மறுத்து, ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என அடம் பிடிக்கின்றனர்.

மறுபுறத்தில், தீர்வுத் திட்டம் என்ற பேச்சே வேண்டாம், தமிழர் பிரதேசத்தைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து கைப்பற்றி, அரசின் பிடிக்குள் கொண்டுவந்தால் - அந்த இராணுவத் தீர்வே - இனப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளியாகி விடும் என பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் வடிவங்களான காவி நிறக் கும்பலும், சிவப்பு நிறக் கட்சியும் வலியுறுத்தி நிற்கின்றன.

இன்னொரு புறத்தில், இதுவரை சமாதானத் தீர்வுக்கு ஆதரவாக நின்ற பிரதான எதிர்க்கட்சியோ, அரச படைகளின் இராணுவ வெற்றிகள் பற்றிய அறிவிப்புகளைக் கண்டதும் அதில் எடுபட்டு, இனி யுத்தநிறுத்தத்துக்கே இடமில்லை என்று கூறுமளவுக்குத் தன்னையும் போரியல் தீவிரத்துக்குள் ஆழ்த்திக் கொண்டுவிட்டது.

இந்த ஒட்டுமொத்த நிலைப்பாட்டின்படி தென்னிலங்கையின் மூளையத்தை இராணுவ வெறியும், யுத்த மமதையும் முற்றாகப் பற்றிக் கொண்டுவிட்டன என்பது தெளிவாகின்றது.

அதுமட்டுமல்ல, தென்னிலங்கையின் சிங்கள அரசியல் கட்சிகள் அனைத்துமே அடிப்படையில் தமிழின விரோதப் போக்குடைய பேரினவாதக் கட்சிகளே என்பதும் வெளிப்படையாகத் தோற்றுகின்றது.

சர்வதேச சமூகத்தை ஏமாற்றி, உலகின் கண்களில் மண்ணைத் தூவுவதற்காக - இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு என்ற - கபட நாடகத்தைக் கொழும்பு அங்கம் அங்கமாக அரங்கேற்றி, காலத்தை இழுத்தடித்து வந்தாலும் -

உண்மையில் தமிழர்களின் உரிமைக்கான எழுச்சியை ஆயுத முனையில் - போரியல் ரீதியில் - அடக்கி, ஒடுக்கி, தொடர்ந்தும் தென்னிலங்கையின் அடிமைத் தளையில் தமிழர் தாயகத்தை அடக்கி வைப்பதே சிங்களக் கட்சிகளின் ஒரே எண்ணமாகும்.

அத்தகைய எண்ணம் நிறைவேறும் சூழலை நோக்கி நிலைமை முன்னேறுவதுதான் தமிழர்களுக்குத் தாங்கொணா துன்பச் சுமையாக அமைந்திருக்கின்றது.

# சமய வழிபாடுகளுடன் கழிந்த புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.2

குடாநாட்டில் புத்தாண்டு நேற்று மிகவும் அமைதியாக சமய வழிபாடுகளுடன் கழிந்தது.

நேற்றுக் காலையில் கிறிஸ்தவ ஆலயங்களில் புத்தாண்டு விசேட ஆராதனை வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்த ஆராதனை நிகழ்வில் பெருமளவிலான கிறிஸ்தவ மக்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன் புத்தாண்டை முன்னிட்டு இந்து ஆலயங்களிலும் விசேட அபிஷேகம் மற்றும் பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

நேற்றைய இந்த புத்தாண்டை குடாநாட்டில் மக்கள் மிகவும் அமைதியாகவும் எளிமையான முறையிலும் கொண்டாடினார்கள். பிரதான கிறிஸ்தவ தேவாலயங்களில் காலையில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டனர். (1-224)



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கண்காட்சியின் போது கிடைத்த நிதியை சிறுவர், முதியோர் இல்லங்களுக்கு யாழ்.மாவட்ட தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி நேற்று வழங்கினார்.
சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களுக்கான நிதியை வழங்கும் போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: லக்ஸ்மன்)

# குடாநாட்டு மக்களின் சுபீட்சத்துக்கு உதவுவதே எமது நோக்கம் – யாழ்.தளபதி

யாழ்ப்பாணம், ஜன.2

குடாநாட்டில் கல்வி பொருளாதார வசதிகளை மேம்படுத்தி மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு உதவுவதே எமது நோக்கம் என யாழ்.படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

யாழ்.நகரில் நடைபெற்ற கண்காட்சியில் கிடைத்த நிதியை சிறுவர் முதியோர் இல்லங்களுக்கு கையளிக்கும் நிகழ்வில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வில் பேசிய தளபதி சந்திரசிறி மேலும் கூறியதாவது:

கடந்த மாத இறுதியில் நடைபெற்ற இக் கண்காட்சிக்கு தென்னிலங்கையில் இருந்தே முழுத் தொகையும் கிடைத்தது. இந்தப் பகுதியில் உள்ள மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதில் தென்பகுதி மக்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர். அவர்களால் வழங்கப்பட்ட நிதியில் கண்காட்சிக்கான செலவுகள் போக மிகுதியாக ரூபா 7 லட்சம் உள்ளது. அதனையும் இப் பகுதியைச் சேர்ந்த முதியவர்கள், சிறுவர்களின் நலனுக்கு பயன்படத்த வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். தென்பகுதி மக்களின் அபிலாசையும் அதுவே. அதையொட்டி இந்தத் தொகையை நாங்கள் இந்த அமைப்புகளுக்கு வழங்குகின்றோம். சிறுவர்களும் முதியோர்களும் மகிழ்சியாக வாழ வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்-என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.51 ஆவது படைப்பிரிவின் மேஜர் ரஞ்சித் உட்பட படையினர் பலர் கலந்து கொண்டனர்.

# வேலணை அபிவிருத்திக்கு 4 திட்டங்கள் முன் மொழிவு

யாழ்ப்பாணம், ஜன.2

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட பிரதேச அபிவிருத்தியை முன்னெடுக்கும் வகையில் 4 பெருந் திட்டங்களை முன்மொழிந்து யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

ரூபா 145 மில்லியனுக்கான இந்தத் திட்டங்களே கருத்திட்ட எண்ணக்கருப்படிவம் மூலம் தயாரிக்கப்பட்டு வேலணை பிரதேச சபை செயலாளரால் யாழ்.அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அக் கருத்திட்டங்கள் வருமாறு:

* வேலணையில் கருத்தரங்கு மண்டபமும் நவீன நூலக கட்டடத் திட்டத்துக்குமான 2 மாடிக் கட்டடம் -ரூபா 20 மில்லியன்.
* புங்குடுதீவு உப அலுவலக கட்டடம் அமைப்பதற்கான திட்டம்- -ரூபா 18 மில்லியன்.
* நயினாதீவு கடல் அரிப்பைப் பாதுகாப்பதற்கான கருத்திட்டம் ரூபா - 87 மில்லியன்.
* நயினாதீவு உப அலுவலகத்திற்கான கருத்திட்டம்-ரூபா 20 மில்லியன்

(1-95)

# வலி. வடக்கில் ஆறு மயானங்கள் பிரதேச சபையால் பிரகடனம்

யாழ்ப்பாணம், ஜன.2

வலிகாமம் வடக்கில் ஆறு மயானங்கள் வலி.வடக்குப் பிரதேச சபையினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

மயான அபிவிருத்தி யாப்பு விதியின் படி நேற்று முதல் இந்தப் பிரகடனம் நடைமுறைக்கு வருவதாக அப் பகுதி பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் பராமரிப்பில் உள்ள ஆறு மயானங்களிற்கு மயான அபிவிருத்தி சபை அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் வலி. வடக்கு பிரதேச சபையினால் உருவாக்கப்பட்டுள்ள மயான அபிவிருத்தி யாப்பின் விதியின் படி மயானங்களின் பராமரிப்பு, அவற்றின் அபிவிருத்தி நடவடிக்கை என்பன அந்த மயான அபி விருத்திச் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த மயான அபிவிருத்தி யாப்பு விதியின் படி நேற்று முன்தினம் தொடக்கம் மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்வதற்கு அல்லது இறந்த மிருகங்களை புதைப்பதற்கு சேவைக் கட்டணத்தை உரிய மயான அபிவிருத்திச் சபையிடம் செலுத்திய பின்னரே தகனஞ் செய்ய அல்லது புதைக்க அனுமதி வழங்கப்படும்.

எனவே இந்த நடவடிக்கைக்கு பொது மக்கள் ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக் கொள்வதுடன் உரிய சேவைக் கட்டணத்தினை செலுத்தாது மயானத்தில் தகனஞ் செய்தல் அல்லது புதைத்தல் மயான யாப்பு விதிகளுக்கு முரணான நடவடிக்கையாகக் கொள்ளப்படும்.

மயான விவரம் வருமாறு:

கொட்டுப்பனை மயானம்-அளவெட்டி, கட்டுப்பிட்டி மயானம் - தெல்லிப்பழை, கேணிப்பிட்டி மயானம் - பன்னாலை, பிள்ளையங் காடு மயானம் - குட்டியப்புலம், மல்லாகம் இந்து மயானம் - மல்லாகம், தம்மளை மயானம் - அளவெட்டி. -என்றுள்ளது. (1-29)

# விபத்தில் மாணவர் நேற்றுக் காயம்

யாழ்ப்பாணம், ஜன.2

மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டு பாடசாலை மாணவன் காயமடைந்தார்.

இந்த சம்பவம் நேற்று காலை மீசாலையில் இடம் பெற்றது.

வீதியோரத்தில் காணப்பட்ட கல்லின் மீது மோட்டார் சைக்கிள் சில்லு ஏறிய போது இச்சம்பவம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

மீசாலையைச் சேர்ந்த இ.மாலவன் (வயது 9) என்னும் மாணவன் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (1-207)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 19 | 03.01.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | ஸப்தமி |
| | பி.இ.01.09வரை |
| நட்சத்திரம்: | பூரட்டாதி |
| | காலை 6.53 வரை |
| | உத்தரட்டாதி |
| சுபநேரம்: | 03.31 - 05.01 |
| ராகுகாலம்: | 09.31 - 11.01 |

# ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு புதிய கட்டடம் அமைக்கத்திட்டம்

ஊர்காவற்றுறை, ஜன.2

ஊர்காவற்றுறையின் பிரதேச சபையின் தலைமை அலுவலக கட்டிடம் அமைப்பதற்கு சுமார் ஒன்பது லட்சம் எண்பதாயிரம் ரூபா செலவில் காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

சுருவில் வீதியில் சிவன்கோயிலுக்கு அருகாமையில் இந்தக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

புதிய கட்டடம் அமைப்பதற்கான மதிப்பீட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அது பூர்த்தியடைந்ததும் கட்டட வேலைகளுக்கான நிதி உதவி பெறுவது குறித்து ஆராயப்படும் என்றும் பிரதேச சபையின் செயலாளர் ஏ.கணேசானந்த ராஜா தெரிவித்தார்.

தற்சமயம் ஊர்காவற்றுறை பிரதேசசபை தலைமை அலுவலகம் தனியார் கட்டிடம் ஒன்றிலேயே நீண்ட காலமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். (1-127)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுக் களியாட்ட விழாவில் தீ! தாய்லாந்து விடுதியில் 59 பேர் பலி!!

பாங்கொக், ஜன. 02

தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் புத்தாண்டு களியாட்ட விழா நிகழ்ந்துகொண்டிருந்த இரவுக் களியாட்ட விடுதியொன்றில் ஏற்பட்ட தீ விபத்துக்கு 59 பேர் பலியாயினர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

சாந்திகா என்னும் இந்த இரவு களியாட்ட விடுதி, மத்திய பாங்கொக்கிலுள்ள தோங்லோர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. தீக்குப் பலியானோரின் சடலங்கள் வெள்ளைப் புடைவையால் சுற்றப்பட்டு, விடுதியின் முன்னாலுள்ள நடைபாதையில் வைக்கப்பட்டிருந்தன.

இக்களியாட்ட விடுதி மிகவும் பிரபல்யம் பெற்றது. தாய்லாந்து மக்களாலும், சுற்றுலாப் பயணிகளாலும் இது நிரம்பி வழியும். இங்கு ஏற்பட்ட தீ விபத்து தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

''தகவல் அறிந்து விரைந்த எங்களால், பகீரதப் பிரயத்தனத்தின் மத்தியில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இல்லையேல், ஏனைய பகுதிகளுக்கும் சுலபமாக பரவியிருக்கும். தீக்குப் பலியானோரின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம்'' என தீயணைப்புப் படை அதிகாரி பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

''நாங்கள் அனைவரும் நடனமாடிக்கொண்டிருந்தோம். மேடைக்கு எதிர்புறத்திலிருந்து தீப் பிழம்பு எழும்பி வந்து கொண்டிருந்தது. எல்லோரும் கூச்சலிட்டவாறு முண்டியடித்துக் கொண்டு ஓடினார்கள். நாங்களும் ஓடினோம்'' என பெண்ணொருவர் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

''நள்ளிரவுக்குப் பின்னர் இத் தீவிபத்து ஏற்பட்டது. அச்சமயம், புத்தாண்டையொட்டி, விடுதிக்கு வெளியிலும், அயல் பகுதிகளிலும் வாண வேடிக்கைகளும் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. வாணவேடிக்கையாலோ, மின்சாரக் கசிவினாலோ இவ்விபத்து நேர்ந்திருக்கலாம்'' என அயல்வாசிகள் குறிப்பிட்டார்கள்.

''பட்டாசுகள் கொளுத்தப்பட்டதால், மேடைக்கு முன்னால் தீப்பற்றிக்கொண்டது என பதறியடித்துக்கொண்டு விடுதியை விட்டு வெளியேறியோர் தெரிவித்தனர்'' என பாங்கொக்கில் வசிக்கும் பிரிட்டிஷ்காரரான அன்றுவோங் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

''பாரிய சத்தம் கேட்டது. மின்சார வெடிப்பு என நினைத்தேன். மக்கள் ஓடத் தொடங்கினார்கள். தீ விரைவாகப் பரவிக்கொண்டிருந்தது'' என நேரில் கண்ட மற்றொருவரான டொஸ்மேடி என்பவர் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

''இந்தக் களியாட்ட விடுதியின் முன்புறத்தில் ஒரே ஒரு நுழைவாயிலே உண்டு. அதனால், உடனடியாக வெளியேற முடியாத பலர் பரவி வந்த தீக்கு இலக்காகினர். எரிகாயங்கள், மூச்சுத் திணறல்கள், நெரிசலுக்குள் சிக்குண்டமை ஆகியவற்றால் இவர்கள் பலியாகியுள்ளார்கள்'' என பொலிஸ்காரரொருவர் கூறினார்.

இந்த விடுதி இரு மாடிகளைக் கொண்டது. விபத்து நிகழ்ந்த பகுதியில் சடலங்கள் கருகிக் கிடந்தன. சில சடலங்கள் உருக்குலைந்திருந்தன என மீட்புப் பணியாளர்கள் அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்கள்.

காயமடைந்தவர்களுக்கு அருகிலுள்ள பாங்கொக் மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டது. பலத்த எரிகாயங்களுக்குள்ளானோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் கூறினார்கள்.

''இந்த இரவு களியாட்ட விடுதி மிக விசாலமானது. நூற்றுக்கணக்கானோர் இருப்பதற்கான வசதிகளைக் கொண்டது'' என பாங்கொக்கிலுள்ள பி.பி.ஸி. நிருபர் ஜொனாதன் ஹெட் குறிப்பிட்டார்.

## உலக அரங்கில்

## இஸ்ரேல் - பலஸ்தீன யுத்த நிறுத்தத்துக்கான லிபியாவின் யோசனையை நிராகரித்தது ஐ.நா.

நியூயோர்க், ஜன. 02

இஸ்ரேலிய - பலஸ்தீன வன்முறைகளுக்கு முடிவு கட்டும் பொருட்டு, உடனடி யுத்த நிறுத்தத்துக்கு வழிகோலும் லிபியாவின் வரைவுத் திட்டம், ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தோல்வி கண்டுவிட்டது.

இந்த வரைவுத் திட்டம் தொடர்பாக, பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு, வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. எனினும், அமெரிக்க, பிரிட்டிஷ் தூதுவர்கள் இதனை ஏற்க முன்வராமையால், வாக்கெடுப்பு தோல்வி கண்டது.

''பலஸ்தீனம் மீது இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்கள் குறித்து வரைவுத் திட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. அத்தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறும் கோரிக்கை விடுக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. எனினும், இஸ்ரேல்மீது மேற்கொள்ளப்படும் பலஸ்தீனரின் தாக்குதல் குறித்து ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை'' என இத்தூதுவர்கள் தெரிவித்துவிட்டார்கள்.

இவ்வரைவுத் திட்டம் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையைக் கடுமையாகக் கண்டித்துள்ளது. அத்துடன் உடனடி யுத்த நிறுத்தத்துக்கும் அறைகூவல் விடுத்துள்ளது. ஐ.நாவுக்கான பலஸ்தீன தூதுவர் ரிஜாத் மன்சூரும் யுத்த நிறுத்த அறைகூவலை வலியுறுத்தினார். எனினும், அமெரிக்காவும், பிரிட்டனும் இது ஒரு தலைப்பட்சமான அணுகுமுறை என நிராகரித்துவிட்டன.

இஸ்ரேலிய தூதுவர் கப்ரில்லா சலீவ் தமதுரையில், ''பயங்கரவாதத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள அவசியமான நடவடிக்கைகளை இஸ்ரேல் தொடர்ந்தும் மேற்கொள்ளும். தற்காப்பு நடவடிக்கையைக் கைவிடுமாறு நிர்ப்பந்திக்க முடியாது'' என்றார்.

எந்த ஒரு பிரேரணையையும் வீட்டோ மூலம் நிராகரிக்கக்கூடிய அதிகாரம் கொண்ட நிரந்தர உறுப்பு நாடுகளில் ஒன்றான அமெரிக்காவின் ஐ.நா.வுக்கான தூதுவர் இந்த வரைவுத் திட்டத்தை அங்கீகரிக்க மறுத்துவிட்டார்.

''இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்குமிடையில் இப்பிணக்கு தலைதூக்கவில்லை. இஸ்ரேலுக்கும் ஹமாஸ்களுக்குமிடையே ஏற்பட்டுள்ளது. எனவே, இவ்விரு சாராரும் தாங்களாகவே போர் நிறுத்தத்துக்கு உடன்படவேண்டும். ஐ.நா.வால் திணிக்கமுடியாது'' என்றும் தெரிவித்துக்கொண்டார்.

''கடந்த ஐந்து நாள்களாக இஸ்ரேலின் வான்வழித்தாக்குதல்களும், ஹமாஸ்களின் ரொக்கெட் தாக்குதல்களும் தொடர்கின்றன. இந்நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் பொருட்டு, இப்பிராந்தியத்துக்கு விஜயம் செய்யவுள்ளேன்'' என பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் சர்கோஷி தெரிவித்துக்கொண்டார்.

''ஐ.நா. பாதுகாப்புச் சபையின் கூட்டத்துக்குப் பின்னர், இஸ்ரேல் அமைச்சரவை புதன்கிழமை கூடி தற்போதைய நெருக்கடிகள் தொடர்பாக ஆராய்ந்தது. இதில் இஸ்ரேல் பிரதமர் ஒல்மேர்ட் பேசுகையில், ''யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதற்கு இது சாதகமான சூழ்நிலை இல்லை'' என்றார். அதேவேளை, இஸ்ரேலின் தாக்குதல் நீடிக்கும் என்பதையும் அவர் நிராகரிக்கவில்லை.

''சாதகமான நிலை ஏற்பட்டால்,இராஜதந்திர பரிகாரத்துக்கு வழியுண்டு. அதேவேளை, இஸ்ரேலின் தென்பகுதி பாதுகாப்பை நாம் உத்தரவாதப்படுத்திக் கொள்ளவேண்டும். இது குறித்து நாம் பரிசீலிப்போம்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''காஸா மீது நாங்கள் வெறுமனே தாக்குதல்களை ஆரம்பிக்கவில்லை. தொடர்ச்சியான ரொக்கெட் தாக்குதல்களையொட்டியே அத்தகைய பதில் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளோம்'' என்றும் அவர் மேலும் விளக்கினார்.

## புத்தாண்டுக் கொண்டாட்டத்தை இரத்துச் செய்தது எமிரேட்ஸ் அரசு

### காஸா மக்களின் துயரைப் பகிர்ந்துகொள்ள!

துபாய், ஜன . 02

இஸ்ரேலின் விமானத்தாக்குதல்களால், பேரழிவுக்குள்ளாகியுள்ள பலஸ்தீன காஸா பகுதி மக்களின் துயரைப் பகிர்ந்துகொள்ளும் பொருட்டு, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், புத்தாண்டுக் கொண்டாட்டங்களை இரத்துச் செய்துள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் மன்னர் ஷேக் முஹம்மது பின் அல்-மக்தூமும், பிரதமரும் இதற்கான அறிவிப்பை விடுத்துள்ளனர் என அதிகாரபூர்வ செய்தி நிறுவனமான 'வாம்' தெரிவித்தது.

சுற்றுலாப்பயணிகளின் சுவர்க்கப்புரி என வர்ணிக்கப்படும் துபாயில் இம்முறை புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ளமையால், தங்களுக்குமிகுந்த வருவாய் இழப்பு ஏற்படும் என ஹோட்டல் உரிமையாளர்கள் கவலை தெரிவித்தார்கள்.

துபாயில், புத்தாண்டின்போது, கண்கவர் வாண வேடிக்கைகளும், உல்லாச ஹோட்டல்கள் உட்பட அனைத்து ஹோட்டல்களிலும் ஆடம்பர விருந்து நிகழ்ச்சிகளும் இடம் பெறுவதுண்டு. புதிய அறிவிப்பால் இவை இரத்துச் செய்யப்படுகின்றன என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

## தெற்காசியாவில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு கூட்டுப்படை அமைக்க பங்களாதேஷ் யோசனை

''தெற்காசிய பிராந்தியத்தில் பயங்கரவாதத்தை ஒடுக்க கூட்டு அதிரடிப் படையொன்றை அமைக்கலாம்'' என பங்களாதேஷ் நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றியீட்டியுள்ள அவாமி லீக் கூட்டணியின் தலைவியும், முன்னாள் பிரதமருமான ஷேக் ஹசீனா யோசனை கூறியுள்ளார்.

பங்களாதேஷில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், 300 ஆசனங்களில் 262 ஆசனங்களை ஈட்டி, இம்முன்னணி அமோக வெற்றி பெற்றுள்ளது. ஷேக் ஹசீனா, புதன்கிழமை பத்திரிகையாளர் மாநாடொன்றில் உரையாற்றினார்.

அவர் தம் உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

''பயங்கரவாதிகளுக்கு பங்களாதேஷ் ஒருபோதும் தஞ்சமளிக்காது. அண்டைய நாடுகளுக்கு எதிரான பயங்கரத் தாக்குதல்களை மேற்கொள்ளும் நோக்கில் பங்களாதேஷுக்குள் தீவிரவாதிகள் நுழைவதை நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். அண்டைய நாடுகளுடனான எமது உறவைத் தொடர்வதே, புதிய அரசின் செயற்திட்டமாக இருக்கும்.

''நாங்கள் ஆட்சிபீடமேறிய காலகட்டங்களில் பயங்கரவாதத்தை ஒடுக்குவதில் அசிரத்தை காட்டியதில்லை.

இனி ஆட்சி அமைக்கும்போதும் இந்நிலை நீடிக்கும். அண்டை நாடுகளுடனான நல்லுறவும் தொடரும். தெற்காசியப் பிராந்தியத்தில் பயங்கரவாதத்தை ஒடுக்கக் கூட்டு அதிரடிப் படையொன்றை அமைக்கலாம்.

''பயங்கரவாதத்தை ஒடுக்குவதும், இப்பிராந்தியத்தில் மேம்பாட்டுப் பணிகளைச் செயற்படுத்துவதும் எமது தலையாய பணிகளாக இருக்கும். பயங்கரவாத விடயத்தைப் பொறுத்த மட்டில் இப்பிராந்திய நாடுகளுக்குள் ஒன்றையொன்று குற்றஞ்சாட்டி சாடுவது வழக்கமாகி விட்டது. தெற்காசிய அதிரடிப்படை உருவாக்கப்பட்டால், இந்நிலை நீடிக்காது'' என்றார்.

## பங்களாதேஷ் புதிய பிரதமர் 5ஆம் திகதி பதவியேற்பு

பங்களாதேஷ் புதிய பிரதமராக இரண்டாவது முறையாக எதிர்வரும் 5 ஆம் திகதி அவாமி லீக் தலைவி ஷேக் ஹசீனா பதவியேற்கவுள்ளார்.

அவர் பங்களாதேஷ் அதிபர் இயாஜுதின் அகமதுவை புதன்கிழமை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

ஹசீனா விரும்பும் நாளில் அவர் பிரதமராக பதவி ஏற்கலாம் என அதிபர் அகமது கூறியுள்ளார், என அதிபர் மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பங்களாதேஷில் கடந்த டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 300 தொகுதிகளில் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் தலைமையிலான கூட்டணி 262 இடங்களைப் பெற்று அமோக வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

## 35 இஸ்லாமிய அமைப்புகள் மீது தடை விதிக்கின்றது இஸ்ரேல் அரசு

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் செயற்பட்டு வரும் 35 இஸ்லாமியக் குழுக்களை தீவிரவாதக் குழுக்களாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. அல்-குவைதா, தலிபான் அமைப்புகளின் துணைக் குழுக்களாக இந்த 35 குழுக்களும் செயற்பட்டு வருகின்றன என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேல் பாதுகாப்பு அதிகாரிகள் விரிவாக ஆலோசனை நடத்தி இந்த அமைப்புகளை தீவிரவாத குழுக்களாக அறிவிக்கும்படி பரிந்துரை செய்திருந்தார்கள். இதை ஏற்று இஸ்ரேலிய அரசு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. தீவிரவாதக் குழுக்களுக்கு நிதி உதவி செய்வதற்கு எதிராக நடத்தப்படும் சர்வதேச போராட்டத்தில் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் பெறும் என்றும் கூறப்படுகிறது.

இவற்றில் [illegible] என்ற அமைப்பு, அமெரிக்காவின் வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் பத்திரிகையின் நிருபர் டேனியல் பேர்ல் கொலையுடன் தொடர்பு உடையதாகும்.

## சோமாலியாவிலிருந்து வெளியேற எதியோப்பிய துருப்புகள் ஆயத்தம்

மொகடிஷ்ஷு, ஜன. 02

எதியோப்பிய துருப்புகள் சோமாலியாவில் நிலை கொள்வதற்கான கால எல்லை அண்மித்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், இத்துருப்புகள் வெளியேறுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

மெத்தைகள், பாவனைப் பொருள்கள், தனிப்பட்ட உடைமைகள் ஆகியவற்றை இத்துருப்புகள் ட்ரக்குகளில் ஏற்றுவதில் ஈடுபட்டுள்ளன. இத்துருப்புகளால் இருவருடங்களுக்கு முன்னர், தலை நகரான மொகடிஷ்ஷு, இஸ்லாமிய தீவிரவாதப் போராளிகளிடமிருந்து மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

சோமாலியாவின் தென் பிராந்தியத்தை பல்வேறுபட்ட இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களும், தேசியக் குழுக்களும் தத்தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன. அரசு துருப்புகள் மொகடிஷ்ஷுவிலும், பெய்டோ நகரிலும் பல பகுதிகளை மாத்திரமே தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன.

இஸ்லாமிய தீவிரவாதக்குழுக்களுக்கு எதிரான போராட்டத்தில், சோமாலிய துருப்புகளுக்கு உதவும் பொருட்டே எதியோப்பிய துருப்புகள் இங்கு வரவழைக்கப்பட்டன. அதேவேளை, சோமாலியாவின் பல்வேறு பகுதிகளில் தீவிரவாதக் குழுக்கள் அரச படைகளுக்கு எதிரான போராட்டங்களைக் கைவிடவில்லை.

''எதியோப்பிய துருப்புகள் நாட்டைவிட்டு வெளியேறினாலும், அரச படைகளுடன் எங்கள் போராளிகள் தொடர்ந்தும் போராடுவார்கள். இதில் பின்வாங்கமாட்டோம்'' என இஸ்லாமிய கடும்போக்குத் தலைவர் ஷேக் முக்தார் ரோபோ ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார்.

''இஸ்லாமிய சட்டத்தை சோமாலியா எங்கும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதே எமது குறிக்கோள். இதனை அடையும் வரை போராட்டம் நீடிக்கும். எதியோப்பியப் படைகள் வெளியேறினாலும், அரச படைகளுடனான போராட்டம் தொடரும்'' என்றும் அவர் கூறினார்.

''சோமாலியாவின் இதர பகுதிகளில் நிலைகொண்டுள்ள எதியோப்பிய துருப்புகள் வெளியேறினாலும், தலைநகரான மொகடிஷ்ஷுவிலுள்ள அந்நாட்டுத் துருப்புகள் தற்போது வெளியேறுவதற்கான அறிகுறிகள் கிடையா'' என நகர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

''எதியோப்பியா அளித்துள்ள வாக்குறுதிப்படி தலைநகரில் நிலைகொண்டுள்ள அந்நாட்டுத் துருப்புகள் இவ்வருட இறுதியில் வெளியேறலாம்'' என்றும் அவர் கூறினார்.

மிதவாத இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களோடு பேச்சுகள் நடத்த சோமாலிய பிரதமர் முன்வந்துள்ளார். இதனால், தமக்கும் பிரதமருக்குமிடையே ஏற்பட்ட பிணக்கை அடுத்து, ஜனாதிபதி அப்துல்லா யூசுப் தம் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வாகனச்சாரதி பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம்,ஜன.2

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தின் வாகனத்தில் ஆயுதங்கள் மறைத்து வைத்திருந்ததாகத் தெரிவித்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நால்வரில் வாகனச் சாரதி பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழுவின் வாகனம் திருத்த வேலைகளுக்காக மானிப்பாயில் உள்ள 'கராஜ்' ஒன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தவேளை அதில் ஆயுதங்கள் இருந்ததாகத் தெரிவித்து அதன் சாரதி உட்பட நால்வர் மானிப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் அனைவரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் குறித்த வாகனச் சாரதியைப் பிணையில் விடுதலை செய்யுமாறு சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுச் செய்திருந்தார். இதனையடுத்து இவரைப் பிணையில் விடுதலை செய்யுமாறு மல்லாகம் பதில் நீதிவான் கேசவன் உத்தரவிட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கு மீண்டும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஏனைய மூன்று சந்தேக நபர்களையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (50)

## யாழ்.தபாலகத்தில் பயிற்சிக் கல்லூரி

நல்லூர்,ஜன.2

யாழ்ப்பாணம் பிரதம தபாலக வளாகத்தில் தபால் ஊழியர்களுக்கான பயிற்சிக் கல்லூரி நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வடபிரதேச பிரதி தபால்மா அதிபர் வீ.குமரகுரு மேற்படி பயிற்சிக் கல்லூரியைத் திறந்துவைத்தார். (203-111)

# இராணுவச் சாவடிகளுக்கு அருகே கட்சி அலுவலகங்கள்; அதனால் யாழ்.குடாநாட்டு மக்கள் பெரிதும் பாதிப்பு!

## நிலைமையை விளக்கி ஜனாதிபதிக்குச் சங்கரி கடிதம்

கொழும்பு,ஜன.2

யாழ்ப்பாணத்தில் இராணுவச் சோதனைச் சாவடிகளிற்கு அருகில் அரசியல் கட்சியொன்றின் அலுவலகங்கள் காணப்படுவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் குறித்து சுட்டிக்காட்டியுள்ள அவர் இவற்றைத் தீர்ப்பதற்கு எவருமில்லையென குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தின் உண்மை நிலைவரம் குறித்து அறிவதற்காக ஒருவரில் தங்கியிருக்கவேண்டாம் எனத் தனது கடிதத்தில் ஆனந்தசங்கரி ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பத்திரிகையை பலவந்தமாக பொதுமக்களிடம் திணித்தல், தடுப்புக்காவல் உத்தரவுகள், காணாமற்போதல் உட்பட யாழ். மக்கள் எதிர்நோக்கும் பலவிடயங்கள் குறித்து சுட்டிக்காட்டியுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

யாழ்ப்பாண மக்கள் பல விடயங்கள் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளனர். அவற்றில் சிலவற்றை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இராணுவச் சோதனைச் சாவடிகளிற்கு அருகில் அரசியல் கட்சியொன்றின் அலுவலகங்கள் காணப்படுவது யாழ்.மக்களின் முக்கிய கவலையாக உள்ளது.

இது தங்களது நடமாட்ட சுதந்திரத்தை பாதிப்பதாக அவர்கள் கருதுகின்றனர். குற்றச் செயல்களில் ஈடுபட்ட பின்னர் சில குற்றவாளிகள் தப்பிச்செல்ல முற்படுவதற்கும் இது காரணமாகவுள்ளது.

அரசியல் கட்சியொன்று அங்குமிங்கும் அலுவலகங்களை வைத்திருப்பதற்கும் (ஆயுதமேந்திய உறுப்பினர்களுடன்) இதன்மூலம் பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாக அனுமதிப்பதற்கும், உரிய காரணம் இல்லை.

அரசியல் கட்சியொன்று தனது வாரப் பத்திரிகையை வாங்குமாறு கட்டாயப்படுத்துவது குறித்து பொதுமக்களிடம் குற்றச்சாட்டொன்று காணப்படுகின்றது.

ஒரே பத்திரிகையை ஒரே குடும்பத்தின் பல உறுப்பினர்கள் கொள்வனவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகின்றது.

சோதனைச் சாவடிகளிலுள்ள இராணுவத்தினரால் இவ்விடயத்தில் எதுவும் செய்யமுடிவதில்லை.

சந்தேக நபர்களிற்கு எதிரான தடுப்புக் காவல் உத்தரவும் பலரிற்கு அநீதியையும், அசௌகரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வயது முதிர்ந்தவர்கள், அப்பாவிப் பெண்கள் போன்றோர் நீண்டகாலத்திற்கு தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

மேலும் எவரிற்காவது உதவினார்கள் என்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டாலும் உண்மையில் அநேகமாக இவர்கள் அப்பாவிகளாகவே காணப்படுகின்றனர்.

கடந்த சில வருடங்களாக யாழ். குடாநாட்டில் பெருமளவான ஆண்கள், பெண்கள் இளையவர்கள், முதியவர்கள் எனப் பலர் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டுள்ளனர். இவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற விவரங்கள் இல்லை.

சில அரச அதிகாரிகளால் இவர்கள் சட்டபூர்வமாகவோ, சட்ட விரோதமாகவோ தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற எதிர்பார்ப்பும் பலரிடம் காணப்படுகின்றது. அவர்களது எதிர்பார்ப்பு சகல சந்தர்ப்பங்களிலும் சரியாக அமையாது.

அரச அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் குறித்த விவரங்களை பகிரங்கப்படுத்துமாறு இதனுடன் சம்பந்தப்பட்டவர்களிற்கு அறிவுறுத்தவேண்டும்.

இதன் மூலம் மன உளைச்சலிற்கும் மனவேதனைக்கும் முடிவு கட்டலாம்.

தங்களது பிள்ளைகள் உயிருடன் உள்ளனரா அல்லது பாதுகாப்பாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா என்பதையே பல பெற்றோர்கள் அறிய விரும்புகின்றனர்.

விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து தப்பி அரச கட்டுப்பாட்டுப்பகுதிக்கு வருபவர்கள் துன்புறுத்தப்படமாட்டார்கள் என்ற உறுதிமொழியை அரசு நிறைவேற்ற வேண்டும். - என்று அந்தக் கடிதத்தில் உள்ளது. (சி)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜன.2

கைதடி சைவ ஐக்கிய சங்கத்து ஓதுவார் குழுவினரால் பல இடங்களில் திருவாசக முற்றோதல் நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மூர்த்தி யாவத்தை கந்தசுவாமி ஆலயத்திலும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீசச்சிதானந்தா ஆச்சிரமத்திலும், 5ஆம் திகதி குருநாதசுவாமி ஆலயத்திலும், 6ஆம் திகதி தக்கடியன்புல வைரவர் ஆலயத்திலும், 9ஆம் திகதி இணுங்கித்தோட்ட கந்தசுவாமி ஆலயத்திலும், 10ஆம் திகதி கயிற்றசிட்டி கந்தசுவாமி ஆலயத்தில், 11ஆம் திகதி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்திலும் நடைபெறவுள்ளன. (204)

# காரைநகர் சிவன் கோயிலில் மார்கழித் திருவாதிரைத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜன.2

காரைநகர் சிவன் கோயில் மார்கழித் திருவாதிரைத் திருவிழா நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத்தினங்கள் இத்திருவிழா இடம்பெறவுள்ளது.

உற்சவ காலங்களில் தினமும் காலை 7 மணிக்கு மூல மூர்த்திகளுக்கு விசேட அபிசேகமும் முற்பகல் 10 மணிக்கு திருவெம்பாவை ஓதலுடன் மணிவாசகர் திருவீதி உலா வருதலும், 11.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து சுவாமி வீதி உலா வருதலும் இடம்பெறும்.

இந்த உற்சவங்களில் கைலாச வாகன உற்சவம் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், பஞ்சரத பவனி 9ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், நடேசர் அபிஷேகம் அன்று இரவு 2 மணி தொடக்கமும் இடம் பெறவுள்ளது.

ஆலயத்திற்குச் செல்லும் அடியவர்களின் நலன்கருதி யாழ்.பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து இலங்கைப் போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலையினாலும், தனியார் போக்குவரத்துச் சபையினாலும் ஆலயம் வரை நேரடி பஸ்சேவைகள் நடத்தப்படவுள்ளன. (203-250)

# எரிபொருள் விலைக்குறைப்பு மஹிந்த அரசின் கண்துடைப்பு

## கடுமையாகச் சாடுகின்றது ஐ.தே.கட்சி

கொழும்பு,ஜன.2

அரசால் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலைக்குறைப்பு நடவடிக்கைக்கு ஐக்கிய தேசியக் கட்சி கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

அரசு மிகக்குறைந்தளவில் விலைகளைக் குறைத்து இந்த நாட்டு மக்களை ஏமாற்றுவது மட்டுமல்லாது 2009 ஆம் ஆண்டையும் பிழையாக வழிநடத்துகிறது என்று அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலகவே இதைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

உலக சந்தையில் எரிபொருள்களின் விலைகள் எந்தளவு வீழ்ச்சியடைந்திருக்கின்றன என்று இந்தநாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

அப்படி இருந்தும் கூட இம் மக்களை முட்டாள்கள் என நினைத்துக்கொண்டு அரசு ஏமாற்றியுள்ளது.

பெற்றோலின் விலையை 100 ரூபாவாகக் குறைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால், அரசு அந்தத் தீர்ப்புக்கு எதிராக இரண்டு ரூபாவால் மாத்திரம் பெற்றோல் விலையைக் குறைத்துள்ளது.

ஓட்டோக்களுக்கு மாத்திரம் வழங்கப்படும் பெற்றோல் ஒரு லீற்றருக்கு 20 ரூபாவைக் குறைத்துள்ளது. நாள் ஒன்றுக்கு நான்கு லீற்றர் மாத்திரம்தான் இந்த விலையில் பெறமுடியும்.

ஆனால், மோட்டார் சைக்கிள்களுக்கு எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை. அதேபோல் சமையல் எரிவாயுக்களின் விலைகளும் மிகக் குறைந்தளவிலேயே குறைக்கப்பட்டுள்ளன.

உலக சந்தையில் ஏற்பட்டிருக்கும் விலைக்குறைப்புக்கு ஏற்ப இவற்றின் விலைகள் குறைக்கப்படவில்லை.

மத்திய மற்றும் வடமேல் மாகாணசபைத் தேர்தலில் தோற்றுவிடுவோம் என்ற அச்சத்தின் காரணத்தாலேயே அரசு திடீரென இந்த விலைக்குறைப்பை மேற்கொண்டுள்ளது.

இது ஒரு கண்கட்டுவித்தை. மக்களை முட்டாளாக்கும் அரசின் இந்த நடவடிக்கைக்கு நாம் எமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். நியாயமான முறையில் விலைகள் குறைக்கப்பட வேண்டும் என்று நாம் அரசுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம். - என்றார். (சி)

# யாழ்.போதனா வைத்தியசாலையின் 'எக்ஸ் கதிர்' இயக்குநர் நேர்முகத் தேர்வு

## எதிர்வரும் திங்களன்று நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ்.போதனா வைத்தியசாலையின் 'எக்ஸ் கதிர்' இயக்குநர் நேர்முகத் தேர்வுக்கு 23 பேர் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வைத்தியசாலைப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

எம்.நந்தகுமார் - ஊரிக்காடு, வல்வெட்டித்துறை, என்.எடிசன் - மானிப்பாய், ஜி.கிருஸ்ணகுருபரன் - இமையாணன், உடுப்பிட்டி, ஆர்.தர்சன் - அரியாலை, ஆர்.ஜனார்த்தனி - யாழ்ப்பாணம், ஏ.சபேசன் - இணுவில் தெற்கு, ஆர்.ரஜீவன் - இணுவில் தெற்கு, எஸ்.பிரதீபன் - யாழ்ப்பாணம், கே.சிஜிதா - பட்டிமடு, தம்பலகாமம், பி.அசோக்தா - அரியாலை, எஸ்.துளசிராம் - உடுப்பிட்டி, எஸ்.சியாமினி - முல்லைத்தீவு, எஸ்.ரீகன் - மானிப்பாய், கே.பிரபாங்கனி - மட்டுவில் தெற்கு, கே. சதீஸ் - வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, ஏ.சபேசன் இணுவில் தெற்கு, எம்.ஏ.சகி ருள் இஸ்றத் - ஏறாவூர்-03, ஏ.எல்.முகமட் பஸ்மின் - ஓட்டமாவடி-03, வி.எம்.நஜீம் - ஏறாவூர் - 06, எஸ்.பிரதீபன் - யாழ்ப்பாணம், எஸ்.பிரதீபன் - முல்லைத்தீவு, எஸ்.சண்முகவதனி - கொக்குவில் கிழக்கு. (203)

## சீருடை விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.2

இடைக்காடு மகாவித்தியாலயத்தில் சீருடை விநியோகிக்கப்படவுள்ளதால் மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (203)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.2

தரம் 5 புதிய பாடத் திட்டச் செயலமர்வு வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இடம் பெறவுள்ளது.

தீவக வலயத் தில் தரம் - 5 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

## காரைநகரில் கிணறுகள் துப்புரவு

காரைநகரில் 'நிஷா' புயல் மற்றும் கடும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிணறுகளை இறைத்து சுத்தம் செய்யும் பணியில் காரைநகர் பிரதேச சபை ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட கிணறுகளை இறைத்து சுத்தம் செய்ய விரும்பும் பொதுமக்கள் காரைநகர் பிரதேச் சபையுடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச சபைச் செயலாளர் இரா.லோகநாதன் அறிவித்துள்ளார். (203-250)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஜன.2

அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளையொட்டி நடத்தும் 1[illegible]பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் கால் இறுதி ஆட்டத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் எதிர் மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழகம்.
* இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகம் எதிர் சுன்னாகம் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம்.

(203-96)

# உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.2

'றுகுணு' கப்பல்மூலம் யாழ்.மாவட்டத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ள உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் ஆகியன மாவட்டத்திலுள்ள 24 ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாகவும் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் எடுத்துவரப்பட்ட உருளைக்கிழங்கும், பெரிய வெங்காயமும் மக்களின் தொகைக்கேற்ப ப.நோ.கூ.சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பொருள்களுக்கான வழங்கற் கட்டளைகளை ப.நோ.கூ.சங்கங்கள் மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் பெற்று, பொருள்களை கோண்டாவில் களஞ்சியத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அரசாங்க அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலி.கிழக்கு உள்ளூராட்சிவார இறுதிநாள் நிகழ்வை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.
கிடுகு பின்னல், தலையணைச் சண்டை, கயிறிழுத்தல் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள்
*(படங்கள்: கோப்பாய்ச் செய்தியாளர்)*

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## விளையாட்டு விஞ்ஞான அலகு
## மூன்றாம்வருட உடற்கல்வி உயர்டிப்ளோமா பரீட்சை - 2007/2008

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அல கின் மூன்றாம் வருட உடற்கல்வி உயர் டிப்ளோமா பரீட்சைகள் 19.01.2009 தொடக்கம் 30.01.2009 வரை நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன்.

பதில் பதிவாளர்
01.01.2009 (ச/556438)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலையின் சிற்றூழியர்
கு.தயாபரன் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி இராஜேஸ்வரி குமாரசாமி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்,

பாடசாலைச் சமூகம்,
*யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை - நாயன்மார்கட்டு*

(81345)

## மரண அறிவித்தல்கள்

### S.K.தியாகராசா

*பிரபல புகையிலை வர்த்தகர்*
*[உரிமையாளர் - லக்ஷ்மி ஸ்ரோர்ஸ், கல்கமுவ]*



காரைநகர், களபூமி, தன்னையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை தியாகராசா நேற்று (01.01.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன் (ஆசிரியர், மா/ரந்தெனிகம முஸ்லிம் வித்தியாலயம், மாஹோ), ஜெயரூபன், ஜெயக்குமார், ஜெயமோகன் (லட்சுமி ஸ்ரோர்ஸ், கல்கமுவ), திருச்சாந்தி, ஞானதர்சினி (A/L 2008 கணிதப்பிரிவு, யாழ்.இந்து மகளிர் கல்லூரி), விசயரூபி (A/L 2010 கலைப்பிரிவு, யாழ்.இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற க.பீதாம்பரம் மற்றும் பரிமளம் ஆகியோரின் சகோதரரும் S.ஆறுமுகம் (பிரபல வர்த்தகர் - பாலாவோடை), பீ.தங்கம்மா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04.01.2009 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைநகர் களபூமி தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி,*
*ஆறுகால்மடம்,*
*ஆனைக்கோட்டை.* (81365)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

### கந்தையா சுப்பிரமணியம்

*(முன்னாள் கணக்குப்பிள்ளை)*



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், 81, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட V.K.சுப்பிரமணியம் 30.12.2008 செவ்வாய்க்கிழமை காலை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிப்பிளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற பூரணாம்பிகையின் அன்புக் கணவரும், செல்வமலர், உதயராணி (பிரான்ஸ்), பிரேம்ராணி, இன்பராஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகரத்தினம், ரகுபதி இந்திரன்(பிரான்ஸ்), ஞானரெத்தினம், சுமதி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜரூபன், அஜந்தா, தனுஷன், ரசிந்தன், விசிந்தன், உதயபாலன், சயந்தன், சாரூகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2009) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டைக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பபடும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.

*இல.81, பாற்பண்ணை வீதி,*
*திருநெல்வேலி.* (81368)

தகவல்
குடும்பத்தினர்.

## அறிவித்தல்

அரச திணைக்களங்களில் கடமை புரிகின்ற கீழ் உழைப்பு பட்டதாரிகள் அனைவரையும் நாளை (03.01.2009) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலுக்கு வருகை தருமாறு அழைக்கின்றோம்.

சக கீழ் உழைப்பு பட்டதாரிகள்.

## விற்பனைக்கு

அட்லஸ், றிச்சாட், றெனோல்ட், லக்கி சகல கட்டுக் கொப்பிகளும் மலிவான விலையில் கல்வியங்காட்டில் உள்ள புத்தகக் கடையில் பெற்றுக்கொள்ளலாம்.- சன் புக் சென்ரர்.

# பொது அறிவுப் போட்டி முடிவுகள்

ஆனைக்கோட்டை, ஜன.2

மானிப்பாய் பொது நூலகத்தால் அண்மையில் வாசிப்புத் திறனையும் தேடலையும் ஊக்குவிக்கும் முகமாக நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மானிப்பாய் பொது நூலகத்தைச் சேர்ந்த வாசகர்கள், அங்கத்தவர்கள் ஆகியோரிடையே ஒரு பிரிவாகவும், மானிப்பாய் பிரதேசத்துக்கு உட்பட்ட பெரிய பாடசாலைகளுக்கிடையில் வேறொரு பிரிவாகவும் மேற்படி பொது அறிவுப் போட்டி நடத்தப்பட்டிருந்தது.

வாசகர்கள், அங்கத்தவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டியில் நவாலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த சிவராம ஜெயம் அனுராஜ் முதலாம் இடத்தைப் பெற்றார்.

பாடசாலை மாணவர்களிடையே நடத் தப்பட்ட போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் கிருஸ்ணசாமி துளசிதரன் முதல் இடத்தைப் பெற்றார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி செல்வி பிரம்மியா சிவலட்சணம் ஆறுதல் பரிசையும் சுதுமலை வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த சிவலட்சணம் சுகிராஜ், சுதுமலை மேற்கைச் சேர்ந்த ஜாலினி நவரட்ணம், அரசடி வீதி, கட்டுடையைச் சேர்ந்த மகேஸ் வரன் புலேந்திரன் ஆகியோர் சான்றிதழ்களும் பெற்றனர்.

வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதி [illegible] வழங்கப்பட்டன.

(203-20)

## வாசகர் திருமுகம்

### 'உ' அட்டைக்கு சில சங்கங்களில் நிவாரணம். ஏனையவை உதாசீனம் செய்வது எதற்காக?

அண்மையில் யாழ்.குடாநாட்டில் மாபெரும் பேரழிவுகளைச் செய்த 'நிஷா' புயலின் கொடுமையால் ஏற்பட்ட பாதிப்புகள் இன்னமும் தீராத, தீர்க்கப்படாத நிலையில் உள்ளன.

இந்த நிஷாவின் கொடுமையால் சகலருமே பாதிக்கப்பட்டனர். ஆனாலும் ''உ'' அட்டை உடையவர்களைத் தவிர ஏனையவர்களுக்கு நிவாரண உதவிகள் பலவகைகளாலும் வழங் கப்பட்டு வருகின்றன. ஆனால் ''உ'' அட்டை உடையவர்களை இதுவரை எந்தக் கணக்கிலும் எடுக்கவில்லை. 'நிஷா' அழித்த போது எந்தவிதமான பாகுபாடும் பார்க்காமலே அழித்தது. இத்த ஐக்ய அழிவுகளுக்கு நட்டஈடு அல்லது நிவாரணம் வழங்கப்படும்போது மட்டும் ''உ'' அட்டை உடையவர்களை புறந்தள்ளி வைப்பது எந்த வகையில் நியாயம்???

கடந்த வாரம் முதல் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. (அரிசி,மா, சீனி) போன்ற பொருள்கள். இவற்றில் பிரச்சினை என்னவெனில் மானிப்பாய், சுன்னாகம், தெல்லிப்பழை ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது சங்க பகுதியில் வதியும் ''உ'' அட்டை உடையவர்களுக்கும் மேற்படி நிவாரணப் பொருள்களை வழங்கி வருவதாகத் தெரிகிறது. அளவெட்டி - மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் உட்பட மேலும் பல சங்கங்கள் ''உ'' காட் வைத்திருப்பவர்களை மறந்தும் கூட ஞாபகப்படுத்திப் பார்க்கவில்லை. இதற்கு என்ன காரணம்? சட்டம் சகலருக்கும் பொதுவானது. அதேபோல மாவட்ட செயலகம் மூலமாகவே நிவாரணப் பொருள்கள் சங்கங்களுக்கு வழங்கப்படும் நிலையில் ஒரு சங்கம் கொடுக்கலாமென்றால் ஏனைய சங்கங்கள் நித்திரை கொள்வதற்கு உரிய விளக்கத்தினை வழங்க அதிகாரிகள் முன்வர வேண்டும்??

''உ''காட் உடையவர்களில் குறைந்த சம்பளம் பெற்றுக் கொள்பவர்களுக்காவது இழப்பீட்டு- நட்டஈடு- கிடைக்க வழி கிடைக்குமா? நட்ட ஈட்டுக்குரிய படிவங்களை கேட்டால் கூட கிராம சேவை அலுவலர்கள் தரமறுக்கின்றனர். காரணம் உதவாத காட் என்று சொல்லப்படும் ''உ'' அட்டைக்கு ஏதும் வழங்க முடியாது என்று கூறி வருகின்றனர்.

நிவாரணம் வழங்குவதிலும் சங்கங்களுக்கு இடையில் நிலவும் முரண்பாடுகளையும் களைந்து உரிய நடவடிக்கை எடுக்க எவரும் முன்வரமாட்டார்களா??

**பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் சார்பில் - ப.உதயகுமார்.**

## மரண அறிவித்தல்

### யோக்கியசிங்கம் சுதர்சன்



4ஆம் கட்டை, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோக்கியசிங்கம் சுதர்சன் கடந்த செவ்வாய்க்கிழமை (30.12.2008) அகால மரணமானார்.

அன்னார் திரு.திருமதி யோக்கியசிங்கம் தம்பதியரின் அன்பு மகனும், திரு.திருமதி மூர்த்தி தம்பதியரின் அன்பு மருமகனும், நிர்மலாவின் அன்புக் கணவரும், திரிஷா, சந்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுஜியின் அன்புச் சகோதரனும், அன்ரனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காக்கைதீவு இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*4ஆம் கட்டை,*
*ஆனைக்கோட்டை.* (81362)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம்' நூல் வெளியீட்டு விழா இன்று

யாழ்ப்பாணம்,ஜன.2

''சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம்'' தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வெளியீட்டுவிழா கலாநிதி க.குணராசா தலைமையில் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்குவார். வாழ்த்துரையை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுருகனும் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக மொழியியல் மற்றும் ஆங்கிலத் துறைத் தலைவர் கலாநிதி சுபேதினி ரமேஸும் நிகழ்த்துவர்.

நூலின் முதற்பிரதியை தொகுப்பாசிரியைகளில் ஒருவரான கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ். கொமர்ஷல் வங்கியின் முதன்மை முகாமையாளர் ச.இரவீந்திராவுக்கு வழங்குவார். மதிப் பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் கலாநிதி கலைவாணி இராமநாதன் நிகழ்த்துவார்.

(202-201)

## பனிக்காலம் நிலவுவதால் நோய்கள் பரவும் நிலை

கோப்பாய், ஜன.2

தற்போது ஏற்பட்டுள்ள பனியுடன் கூடிய குளிர் மற்றும் பகல் வெப்பநிலை அதிகரிப்பால் பல்வேறு நோய்களால் மக்கள் பீடிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக சிறுவர்கள், முதியோர்கள் காய்ச்சல், தடிமல் மற்றும் தொய்வு வருத்தங்களால் பீடிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-72)

# தீவகப் பிரதேச விசாயிகள் பலரும் புகையிலைச் செய்கையில் மும்முரம்

யாழ்ப்பாணம், ஜன.2

தீவுப் பகுதியில் விவசாயிகள் புகையிலை பயிர்ச்செய்கையில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வெள்ள அனர்த்தத்திற்கு பின்னர் தற்போது தோட்ட நிலங்கள் சீர் செய்யப்பட்டு விவசாயிகள் புகையிலை நாற்று நடும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

புகையிலை பயிர் நாற்றுக்கு தட்டுப்பாடும் பற்றாக்குறையும் நிலவி வரும் நிலையில் தீவுப் பகுதி விவசாயிகள் வடமராட்சிப் பிரதேசத்துக்குச் சென்றே இந்த நாற்றுக்கல... கொள்வனவு செய்து வருகின்றனர் என விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் குடாநாட்டில் ஏற்பட்ட வெள்ளத்தினால் புகையிலை நாற்று மேடைகள் அழிவடைந்தன.

தற்போது குளிர்காலம் ஆகையால் புகையிலைச் செய்கைக்கு வேண்டிய நாற்றுகளுக்கு பெரும் கிராக்கியும் நிலவி வருகின்றது. (202-224)

# வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் கீழ் 25 வருடத்திற்கு மேல் சேவையாற்றியோர் கௌரவிப்பு

கோப்பாய், ஜன.2

வலி.கிழக்குப் பிரதேச சபையின் கீழ் 25 வருடங்களுக்கு மேல் கடமை புரிந்த 5 ஊழியர்களும் மற்றும் 3 முன்பள்ளி ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டுள் ளனர்.

வலி.கிழக்குப் பிரதேசசபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்விலேயே இவர்கள் கௌரவிக்கப்பட்டனர். கௌரவிக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

**ஊழியர்கள்**

சி.கிருபாமூர்த்தி(சித்த மருத்துவ மருந்துக் கலவையாளர்), திருமதி ம.இராசமணி(சித்தமருத்துவ மருந்தாளர்), சி.லோகநாதன்(காவலாளி), க.தங்கராஜா (சுகாதாரத் தொழிலாளி), வை.கனகேஸ்வரன் (வருமான மேற்பார்வையாளர்)

**முன்பள்ளி ஆசிரியர்**

திருமதி அமிர்தாம்பிகை வெள்ளயஸ் கிரிநாதன், திருமதி மு.கமலாதேவி, செல்வி வெ.பவளம். (203-72)

## வலி.கிழக்கு பிரதேச சபையால் 67 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள்

கோப்பாய், ஜன.2

வலி.கிழக்குப் பிரதேச சபையால் இந்த ஆண்டில் சுமார் 67லட்சம் ரூபா செலவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தளபாடக் கொள்வனவு, வீதிகள் திருத்தம், சித்த மருந்துகள், உபகரணங்கள் கொள்வனவு, நூல்கள் கொள்வனவு ஆகியன மேற்கொள்ளப்படவுள்ளன. (203-72)

# யாழ்.ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தில் நியாய விலையில் கோழி இறைச்சி

யாழ்ப்பாணம், ஜன.2

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதுவருடத்தை முன்னிட்டு கொழும்பில் இருந்து விமானம் மூலம் தருவித்த கோழி இறைச்சிப் பொதிகளை நுகர்வோருக்கு நியாயவிலையில் விநியோகித்து வருகின்றது.

சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

சுத்தம் செய்யப்பட்ட பிறிமா தயாரிப்பு கோழி இறைச்சி பைக்கற்றுக்கள் சங்கத்தின் கூட்டுறவு நகர் விற்பனை நிலையங்களில் நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சுத்தம் செய்யப்பட்ட ஒரு கிலோ புறொயிலர் கோழி இறைச்சி கிலோ அறுநூறு ரூபாவுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் விமானம் மூலம் தருவிக்கப்பட்ட 'கேக்' தயாரிப்பு பொருள்களும் கொழும்பு விலைக்கே நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (202-224)

# 'நிஷா'மழையால் பாதிக்கப்பட்டோருக்கு எரிவாயு அடுப்புகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜன.2

குடாநாட்டில் நிஷா புயல் மற்றும் வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவென ஒருதொகுதி எரிவாயு அடுப்புகள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நவம்பர் மாதம் ஏற்பட்ட அனர்த் தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவென அனுப்பப்பட்ட இந்த எரிவாயு அடுப்புகள் தற்போது யாழ்.செயலகத்தினால் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு கோண்டாவில் களஞ்சிய சாலையால் இருந்து விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

பிரதேச செயலங்களுக்கு சுமார் பத்து வரையே இவை வழங்கப்பட்டுள்ளமையால் இந்த அடுப்புகளை யாருக்கு விநியோகம் செய்வது என்று தெரியாது அதிகாரிகள் திண்டாடும் நிலைமையும் காணப்படுகின்றது.

எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டால் அதற்கான எரிவாயுவை எப்படி பெறுவது என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

எரிவாயு கொள்கலன் 4, ஆயிரம் ரூபா தொடக்கம் 4 ஆயிரத்தி ஐநூறு ரூபா வரையும் எரிவாயு 4 ஆயிரம் ரூபா வரையும் விற்பனை செய்யப்படுகிறது.

இந்த நிலையில் எரிவாயு அடுப்பு எந்தளவுக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு குடிசைகளை கூட இழந்துள்ள வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கு உடனடித் தேவைக்கு பயன்பாடு உடையதாக அமைய முடியும் என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றார்கள். (203-68)

# தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கு விஞ்ஞான பாட உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஜன.2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு விஞ்ஞான் பாட உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வைத்து இவை வழங்கப்படவுள்ளன.

இன்று வலயத்தைச் சேர்ந்த வகை 1 ஏபி, வகை 1சி, தரம்1 தொடக்கம் தரம் 8 வரையான வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகள் தரம் 1 தொடக்கம் தரம் 9 வரையான வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளுக்கும்-

நாளை வகை II, வகைIII ஆகியவற்றைச் சேர்ந்த பாடசாலைகளுக்கும் வழங்கப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

## படவரைஞர்களின் பதிவை புதுப்பிக்குமாறு அறிவுறுத்து

கோப்பாய், ஜன.2

வலி.கிழக்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட படவரைஞர்களை 2009ஆம் ஆண்டுக்குரிய பதிவைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியானவர்களிடமிருந்து புதிய விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் பிரதேச சபை செயலாளர் த.நடராசா தெரிவித்துள்ளார். (203-72)

# மட்டுவிலில் திருடர் தொல்லை

யாழ்ப்பாணம், ஜன.2

மட்டுவில் பகுதியில் அண்மைக் காலமாக திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பகலில் அப்பகுதியில் நடமாடும் திருடர்கள் இரவு வேளைகளில் வீடுகளிலும் தோட்டங்கிளிலும் பொருள்களைத் திருடி வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மேய்ச்சலுக்காக மாடுகளைக் கட்டிவிட்டுத் திரும்பிய பெண் அணிந்திருந்த தாலிக்கொடியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அபகரிக்க முற்பட்டனர்.

இவ்வேளை குறிப்பிட்ட பெண் கூக்குரலிடவே திருடர்கள் தப்பியோடி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-207)




## தென்மராட்சி வலய சுகாதாரமும் உடற்கல்வியும் ஆசிரியர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், ஜன.2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கடந்த மாதம் நடத்தப்பட்ட செயலமர்வில் கலந்து கொண்டவர்களை இன்று வலயக் கல்வி அலுவலகத்திற்கு வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

# கட்டாக்காலிகளால் பயிர்கள் அழிவு

யாழ்ப்பாணம், ஜன.2

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் மாடுகள், ஆடுகள், பன்றிகள் ஆகியவற்றினால் பயிர்கள் தினமும் அழிக்கப்பட்டு வருகின்றன.

மேய்ச்சலுக்காக விடப்படும் கால்நடைகள் நெற்பயிர்கள் மற்றும் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகளை அழித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

கால்நடைகளை வளர்ப்போர் அவற்றினைக் கட்டி வளர்க்குமாறும், கட்டாக்காலியாக பயிர்களை அழிக்கும் கால்நடைகள் பிடிக்கப்பட்டு விவசாயத் திணைக்கள சட்டங்களின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென இந்தப் பகுதி விவசாய சம்மேளத்தினர் அறிவித்துள்ளனர். (203-207)

## வெள்ள அனர்த்தத்தால் பாதீனியம் பரவியுள்ளது

கோப்பாய், ஜன.2

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தையடுத்து வலி.கிழக்குப் பிரதேசத்தில் புதிதாக பல இடங்களில் பாதீனியம் பரவியுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

விவசாய நிலங்கள், வீதி ஓரங்கள், மைதானங்கள், ஆலய வீதிகள் போன்ற இடங்களில் இவை படர்ந்துள்ளன.

இக்களைகளை அழிப்பதற்காக பிரதேசத்தின் பல தரப்பினரும் முயற்சிகள் எடுத்திருந்த போதிலும் மழை வெள்ளம் ஏற்பட்டதால் முற்றாக அழிக்க முடியாமல் போய் விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (203-72)



யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் நேற்று இடம்பெற்ற புதுவருட நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் 2008 ஜூன், ஜூலை , ஓகஸ்ட் மாதங்களில் நடத்தப்பட்ட 'ஜெயஸ்ரீ' சீட்டிழுப்பில் பரிசு பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

வங்கியின் முகாமையாளர் வீ.எஸ்.முதலி, உதவிப் பிராந்திய முகாமையாளர் எஸ்.ஹென்றி ஆகியோர் உரையாற்றுவதை முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

மக்கள் வங்கியின் வடவலய முகாமையாளர் ரி.கே.[illegible] வாடிக்கையாளர் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதை மூன்றாவது படத்திலும் மக்கள் வங்கியின் உத்தியோகத்தருடன் பரிசு பெற்றோரை நான்காவது படத்திலும் காணலாம்.

(படங்கள்:லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நெஞ்சமதில் நீங்காத
## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்
### இருபத்தி நான்காவது பிறந்தநாள் நினைவலைகளும்



அமரர்
**ஜெயவரதராசா ஐங்கரதாசன்**

மலர்வு: 24.01.1985
உதிர்வு: 27.12.2006

திதி: சஷ்டி (02.01.2009)

பூப்போல பொலிவுடன் பிறந்தாயே
பூப்போல் உன் ஆயுளும் குறுகியதே
நேற்று நடந்ததுபோல் நெஞ்சு வலிக்கிறதே
தேறும் வழியின்றி கண்ணீர் வடிகிறதே
உனது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


பற்பைவளவு,
வதிரி, கரவெட்டி. (81349)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## இரண்டாம் வருட நினைவஞ்சலி

அமரர் பொன்.
**கனகரத்தினம்**

தோற்றம்
15✱11✱1950



மறைவு
02✱01✱2007

வருடங்கள் இரண்டு ஓடிவிட்ட வேளையிலும்
வாட்டுதையா உன் நினைவு விழியிரண்டும் கண்ணீரில்
வடலியடைப்பு மண்ணின் வேரான விளையாட்டு வீரனே
நொந்து போன சிந்தைகளுக்கு ஆறுதல் தந்தவனே
வெள்ளையப்பா உன் பெயர் போல மனமும் வெள்ளையடா
கள்ளமில்லாச் சிரிப்பும் அழகு முகமும் காணத் தவிக்கின்றோம்
நீ வருவாயா மீண்டும் இம்மண்ணில் பிறக்கமாட்டாயா? (81293)

பொ.தர்மரத்தினம் (சகோதரன்)
அரசடி வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

இந்துக் கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.

## எமது குல விளக்கின் ஓராண்டு நினைவுகள்



திருமதி
**காத்தலிங்கம் தையல்நாயகி**

தோற்றம்: 04.11.1928

மறைவு: 14.01.2008

திதி: சஷ்டி
(02.01.2009)

அன்புச் செல்வங்கள் பலபெற்று
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் பல கண்டு
அனைவரும் நன்றாய் வாழ அல்லும் பகலும்
கற்பூரமாய் உருகி உழைத்திட்ட தெய்வமே!
எம்மைவிட்டு மறைந்து ஓராண்டு சென்றாலும்
நம் ஜீவன் உள்ளவரை உன் நினைவுகள் நீங்காது.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
இலங்கையிலும் வெளிநாட்டிலும் வசிப்பவர்களான
சகோதரிகள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்.
நெற்கொழு கிழக்கு, கொம்மந்தறை, வல்வெட்டித்துறை. (81313)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

சிறாம்பியடி, யாழ்.வீதியில் தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிடப் பட்டவர்கள் உரிய ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

T.குகதாசன், இல.32, சந்தனமாதா கோவில் ஒழுங்கை, சுண்டுக்குளி. (81361)

## அணி ஒழுங்குத் தெரிவுகள் இன்று இடம்பெறும்

வலி.வடக்கு,ஜன.2

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான 2009ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளுக்கான அணி ஒழுங்குத் தெரிவுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலாளர் திருமதி ச.மஞ்சுளாதேவி தலைமையில் இடம்பெறவுள்ளன.

பதிவுசெய்யப்பட்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளையும் தவறாது அணித் தெரிவுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி விளையாட்டு அலுவலர் செல்வி சி.மனோன்மணி கேட்டுள்ளார். (203-68)

## கால்நடை கூ.சங்கத்துக்கு கட்டடம் அமைக்க காணி தேவை

சித்தங்கேணி,ஜன.2

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கால்நடைக் கூட்டுறவுச் சங்கத்திற்கென நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. அதற்குத் தேவையான காணியை வழங்கி உதவுமாறு விவசாய சம்மேளனத்தினரிடமும் நலன்விரும்பிகளிடமும் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கோரியுள்ளார்.

இக்கட்டடம் அமைப்பதற்கு 4 பரப்புக் காணி தேவையாகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (202-112)

## விளையாட்டுப் பொறுப்பாசிரியர் கூட்டம் 5ஆம் திகதியன்று

யாழ்ப்பாணம்,ஜன.2

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் இவ்வருடம் நடத்தப்படவுள்ள விளையாட்டுக்கள் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

பாடசாலைகளில் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

## சிரமதானம் மூலம் துப்புரவு

யாழ்ப்பாணம்,ஜன.2

தென்மராட்சிப் பிரதேச பொது அமைப்புகள் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

கடந்த வாரம் இலங்கை செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி கிளையினரும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைத் தொண்டர்களும் வைத்தியசாலை வளாகத்தில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

அதற்கு முன்னர் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை ஊழியர், நகர சபையினர் ஆகியோர் இணைந்து வைத்தியசாலை வளாகத்தைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்திருந்தனர். (203-207)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 19.04.1977
உதிர்வு: 30.12.1996

செல்வன்
**அருணாசலம் சிவச்செல்வன்**
(சிவா)

தினம் தினம் உன் நினைவு எம் மனதில்
ஈராறு ஆண்டுகள் கடந்திட்ட போதும்
சிவா நீ எம்மைவிட்டுக் கலைந்து
சென்ற நாளை கண்ணீருடன் நினைவு
கூருகின்றோம்.

காளிகோயில் வீதி,
கொடிகாமம். (81298)

குடும்பத்தினர்.

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 23.05.1941



இறப்பு: 21.12.2001

திதி: சஷ்டி (02.01.2009)

அமரர் **பொன்னம்பலம் விஜயரட்ணம்**
(இ.போ.ச.சாலைப் பரிசோதகர், கோண்டாவில்)

அன்பான அப்பாவே!
ஏழு ஆண்டுகள் சென்றால் என்ன
என்றும் உங்கள் நினைவால் வாடுகின்றோம். (81347)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 24.02.1934

மறைவு: 05.12.2008



**திருமதி நற்குணராசம்மா செல்வரத்தினம்**

அன்பினை சொரிந்து பண்போடு
எம்மைஎல்லாம் வளர்த்தீர்கள்
நீங்கள் எங்கு சென்றாலும்
உங்கள் நினைவோடு.

நாளை (03.01.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'சிவகிரி', இராஜ வீதி,
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி. (81349)

சி.செல்வரத்தினம் J.P.
(ஓய்வுபெற்ற அதிபர்)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேன்மைபெற வைக்கும் விநாயக சஷ்டி நோன்பு



சைவ மக்களாகிய நாம் வணங்கும் தெய்வங்களுள் விநாயகர் மிக்க முதன்மையும் சிறப்பும் உடையவராகத் திகழ்கின்றார். இவ்விநாயகரை வழிபட்டுத் தொடங்கும் எக்காரியமும் இடையூறின்றி நிறைவேறும் என்பது சைவசமயத்தவர் மத்தியில் நிலவும் பொதுவானதொரு நம்பிக்கையாகும்.

தெய்வம் என்பதை அகக்கண்ணால் சிந்தனையானன் கண்ட முதல் தோற்றம் விநாயப்பெருமானின் திருவடிவமேயாகும். விநாயகப்பெருமான் திருவவதாரஞ் செய்த நாள் ஆவணித் திங்கள் வளர்பிறை நான்காம் நாளாகிய சதுர்த்தி நாளாகும்.

இப்பெருமானுக்கு கணநாதன், கணபதி, கணேசன், விக்கினேஸ்வரன், பிள்ளையார், கஜமுகன், கஜராஜன் எனப் பல பெயர்களிட்டு சைவ சமயத்தவர் ஏற்றிப் போற்றித் துதித்து வருகின்றனர்.

இவ்விநாயகரை வணங்கி ஆன்மாக்கள் இகபர ஈடேற்றம் பெறும் பொருட்டு மூன்று முக்கிய விரதங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. அவை சுக்கிரவாரம், சதுர்த்தி விரதம், சஷ்டி விரதம் என்பவையாகும்.

இவற்றுள் சுக்கிரவாரம் எனப்படுவது வாரம்தோறும் வருகின்ற வெள்ளிக்கிழமையாகும். இவ்வெள்ளி விரதத்தை வைகாசி மாதம் வளர்பிறையில் வருகின்ற வெள்ளிக்கிழமை தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் தவறாமல் மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து சிறப்பு விரதமாகக் கூறப்படுவது சதுர்த்தி விரதமாகும். ஆவணிமாத சதுர்த்தி விரதம் மிகச்சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இவ்விரு விரதங்களும் வாரம் தோறும், மாதந்தோறும் அனுஷ்டிக்கப் பட்டுவரும் வேளையில் வருடம் ஒரு தடவை அனுஷ்டிக்கப்படுவதும் 21 நாள் கொண்டதும், கைமேல் பலன் தருவதுமான விரதம் விநாயசஷ்டி விரதமாகும்.

நினைந்த காரியசித்தி, தடைநீக்கம் என்பவையே பொதுவாக விநாயக விரத நோக்கமாகக் கருதப்பட்டாலும் குமார சஷ்டி விரதம், பெருங்கதை விரதம் என பலபெயர் கொண்ட விநாயகசஷ்டி விரதமானது உயர்ந்த பலன் கொடுக்கும் உன்னத விரதமாகும்.

இவ்விரதம் 'கார்த்திகை மாத தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை சஷ்டி வரை 21 நாள்கள் அனுஷ்டிக்கப்படும். இவ்விரதத்தை நினைவு கூர்ந்து ''சஷ்டி தொட்டு சதயம் விட்டு'' எனும் பழமொழி வழக்கில் இருந்து வருகிறது.

முன்பொரு சமயம் மஹாவிஷ்ணு பொய் கூறியதால் தமக்கேற்பட்ட சாபம் நீங்க விநாயகரை வணங்கி சாப நீக்கம் பெற்றார்.

இச்சாபம் நீங்கப்பெற்ற தினமாகிய மார்கழி மாத வளர்பிறை சஷ்டி நாளே விநாயக சஷ்டி ஆகும். இந்நாளை இறுதியாகக் கொண்ட இருபத்தொரு நாள் விரதத்தைப் பெருங்கதை விரதமென்பர். முன்பொரு சமயம் விக்கிரமாதித்த மன்னனின் மனைவியான இலக்கண சுந்தரி என்பவள் தான் அனுஷ்டித்து வந்த விநாயகசஷ்டி [illegible] இடையில் கைவிட்டு அந்த விரதகாப்[illegible]யும் கழற்றி வீசிவிட்டாள். அன்றிலிருந்து அவள் பல்வகை கஷ்டங்களையும் அடைந்து மன்னனால் விலக்கப்பட்டு காட்டை அடைந்தாள் என வரலாறு கூறுகிறது.

அவள் கழற்றி வீசிய காப்பு ஓர் அவரைக் கொடி மீது வீழ்ந்தது. அவ் அவரைக் கொடி அளவின்றிச் செழித்து வளர்ந்தது. அந்த அவரைக் கொடியில் கிடந்த விரதக் காப்பைக்

## ஞானக்கதிர்

கண்டெடுத்த பணிப்பெண்ணொருத்தி தான் அதனைக் கையில் கட்டி விரதமனுஷ்டித்தாள் அவ்விரத பலனாக அவள் மன்னனை மணந்து அரண்மனை சேரும் பாக்கியம் பெற்றாள்.

காட்டில் அலைந்த இலக்கண சுந்தரி அங்கொரு மூதாட்டியின் அறிவுரைப்படி விநாயக சஷ்டி விரதத்தை மறுபடி தொடங்கி முறைப்படி நோற்றாள். அந்நாளில் காட்டிற்கு வந்த மன்னன் களைப்புற்று தண்ணீர்த் தாகத்தினால் இவளிருந்த குடிலை நாடினான். அங்கு இலக்கண சுந்தரியைக் கண்டு மறுபடி அவளை அழைத்து மணம் செய்து சென்றான்.

இவ்வாறு உயர்ந்த மகிமை கொண்ட இவ்விரதத்தை முதல் இருபது நாளும் மத்தியானம் ஒரு பொழுது மட்டும் போசனம் செய்யும் ஒழுங்கில் அனுஷ்டிக்க வேண்டும். இரவு வேளை பால், பழம் அல்லது பலகாரம் உணவாகக் கொள்ளலாம். தினமும் விநாயகருக்கு இளநீர், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை என்பவற்றை [illegible] பெருங்கதை, விநாயகபுராணம் முதலியவற்றை படித்தும், கேட்டும் விநாயக அகவல், விநாயகர் கவசம் போன்றவற்றை பாராயணம் செய்தும் வழிபாடு செய்தல் வேண்டும். இறுதி நாளன்று விசேட[illegible] வழிபாடு செய்து உபவாசமிருந்து [illegible]ள் பாராயணம் செய்ய வேண்[illegible].

இவ்விரத ஆரம்[illegible]ில் இருபத்தோரிழையிலான விரத[illegible]பினை ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் கட்டிக் கொள்வர். இவ்விரதத்தை மேற்கொள்வதால் ந[illegible]மக்கட்பேறும் செல்வச்சிறப்பும் தொழில் [illegible]ருத்தியும் கிட்டும்.

மேலும் இவ்வி[illegible]தை மேற்கொண்டு அத்திரி மகரிஷி சந்திரனையும் துர்வாசரையும் பிள்ளைகளாகப் பெற்றார். குபேரன் சங்கநிதி, பதுமநிதி ஆகியவர்களை பெற்றார். பிரம்மா சிருஷ்டித் தொழிலில் திறமை பெற்றார். இச்சிறப்புக்கள் பெற்று உய்யும் வண்ணம் இருபத்தொரு வருடம் இவ்விரதம் அனுஷ்டித்த பின் உத்தியாபனம் செய்யலாம். இயலாதவர்கள் ஏழு வருடமாவது கைக்கொள்ளலாம்.

**கு.எழிலவன் (கோப்பாய்)**

# நெருக்கடி நிலைகளில் இருந்து யாழ்ப்பாண சமூகம் மீண்டெழ கிராம மட்ட அமைப்புகள் அவசியமானவை

எந்த ஒரு சமூகமும் வளர்ச்சிப் பாதையில் பயணித்தாலன்றி 'சமூக அபிவிருத்தி' என நாம் சாதாரணமாகக் குறிப்பிடும் சமூக - பொருளாதார - அறிவியல் மேம்பாடு இடம்பெறமாட்டாது.

ஒரு சமூகம் கடைப்பிடிக்கும் அபிவிருத்திப்பாதை நாளடைவில் சம்பந்தப்பட்ட சமூகத்தின் வளமான, நிலையான சமூக - பொருளாதார - அறிவியல் மேம்பாட்டிற்கு இட்டுச்செல்ல வேண்டும் என்பது தற்கால சமூகவியலாளர்களின் கருத்தாக அமைந்துள்ளது. அதே நேரம் நாம் கையாளும் அபிவிருத்தி அணுகுமுறைகள் நாம் வாழும் இயற்கைச் சூழலுடன் இணைந்து பிணைந்ததாகவும் இயற்கைச் சூழ்நிலையை தொடர்ந்து பேணிப் பாதுகாப்பதாகவும் எமது எதிர்கால சந்ததியினர் தங்களது தேவைகளை அடைவதற்குத் தடைகளை ஏற்படுத்தாத வழியில்/வகையில் எமது தற்கால தேவைகளைச் சமாளிப்பதற்கு ஏதுவாக அணுகுமுறை கையாளப்பட்டு எமது இலக்குகள் அடையப்படக் கூடியதாகவும் அமைய வேண்டும் என்பது தற்கால சமூகவியல் சிந்தனையாளர்களின் நிலைப்பாடாகவும் உள்ளது.

### சமகால பின்னணி

எமது யாழ்ப்பாண சமூகம், இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக முகம் கொடுக்கும் சுமுக நிலையற்ற அசாதாரண சூழ்நிலையில் சமூகத்தின் அவ்வப்போதைய தேவைகளைச் 'சமாளிக்கும்' வகையிலேயே தனது காலத்தைப் போக்கி வருகின்றது. அதாவது ''நெருக்கடி நிலை முகாமைத்துவம் (Grisis Managment) என்ற குறிக்கோளின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றது.

## பயனாளிகளாக மட்டுமன்றி செயலூக்கமுள்ள பங்காளிகளாகவும் மக்கள் மாற்றமுற மக்கள் அமைப்பு அலகுகள் உதவுகின்றன

இந்த அடிப்படையிலேயே எமது அரச நிர்வாக அலகுகள் பெரும்பாலும் செயற்படுகின்றன.

### சமகால அரச நிர்வாக அலகுகளும் அமைப்பொழுங்கும்

### *இடம்சார் நிர்வாக அலகுகள்*

எமது தற்கால அரச நிர்வாக அமைப்பு, ஒரு மாவட்டத்தில், பின்வரும் அலகுகளைக் கொண்டதாக உள்ளது.

* கிராம மட்டம்
* பிரதேச மட்டம்
* மாவட்ட மட்டம்.

இந்தக் கட்டமைப்பு 'இடர்சார்' அபிவிருத்தி அணுகுமுறையை இலக்காகக் கொண்டது. இத்தகைய கட்டமைப்பு.நிர்வாக அணுகுமுறையை பரவலாக்க இடமளிக்கின்றது. சமூக அமைப்பு, சமூக ஒருமைப்பாடு, சமூக பண்பாடு, பிரதேச நிலப்பயன்பாடு, பிரதேச வளப்பயன்பாடு போன்ற அம்சங்களைக் கருத்தில் எடுப்பவர்கள் தற்போதுள்ள பிரதேச மட்ட, கிராம மட்ட அலகுகளில் மாற்றங்கள் செய்யப் பட வேண்டும் என்ற வாதங்களை முன் வைக்கின்றார்கள். அதே நேரம், நகரை அண்டிய பகுதிகளில் மக்கள் செறிவையும் கருத்தில் எடுத்து பிரதேச மட்ட அலகுகளில் பொருத்தமான மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்படுகின்றது.

மேற்படி வாதங்களின் அடிப்படையில் ஒரு சில பிரதேச, கிராம மட்ட அலகுகளில் மாற்றம் செய்யப்படுதல் விரும்பத்தக்கது என்ற கருத்து ஆய்வாளர்களிடையே அரச நிர்வாகிகளிடையே இருக்கின்றது.

### அதிகாரப் பரவலாக்கம்

சமூக அபிவிருத்தி என்ற குறிக்கோளை மையமாக வைத்தே அரச நிர்வாகம் (அதிகாரம்) கடந்தகால மாவட்ட மட்ட நிலையிலிருந்து பிரதேச மட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது.

ஆயினும் இன்றைய நிலையிலும் துறைசார் நிர்வாக அலகு (அதிகாரம்) இடம் சார் நிர்வாக அலகுடன் (பிரதேச மட்டம்) இணைந்து செயற்படுவதற்கு ஏதுவாக மாற்றம் செய்யப்படவில்லை - அதாவது துறைசார் நிர்வாக அதிகாரம் பரவலாக்கப் படவில்லை.

இந்த நிலைமை நிர்வாக முடிவுகளையும் அபிவிருத்தி முயற்சி முன்னெடுப்புகளையும் பிரதேச மட்டத்தில் மேற்கொள்வதற்குத் தடையாக உள்ளது எனலாம்.

### நிதி ஒதுக்கீடுகளும் வழிகாட்டல்களும்

* உள்நாட்டு இனப்பிரச்சினையைக் காரணம் காட்டி அரசியல் மயப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டுப் பின்னணியில் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நிதி ஒதுக்கீடுகள், குறிப்பாக துறைசார் அபிவிருத்தி முயற்சிகளுக்கான ஒதுக்கீடுகள் மட்டுப்படுத்தப்படுகின்றன.
* அரச நிதி ஒதுக்கீடு பெரும்பாலும் நிவாரணம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் ஆகியவற்றிற்கு மட்டும் செய்யப்படுகின்றது எனலாம்.
* சர்வதேச அரச சாரா அமைப்புக்களிடமிருந்து கிடைக்கும் நிதி ஒதுக்கீடுகளும் பெரும்பாலும் நிவாரணம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் ஆகிய வாழ்வாதார செயற்பாடுகளுக்கே மையப்படுத்தப்படுகின்றன. ஆங்கிலத்தில் இவ் அணுகுமுறையை 3R அணுகுமுறை (Relief Rehabilitation, Reconstruction) என சுருக்கமாகக் குறிப்பிடுவார்கள்.
* மேற்காட்டப்பட்ட நிதி ஒதுக்கீட்டுப் பின்னணியில், நெருக்கடி நிலையில், எமது அரச அதிகாரம் பெற்ற நிர்வாகிகளின் செயற்பாடுகள் நிலையான அபிவிருத்திப் பாதையைத் தவிர்த்து அன்றாட வாழ்வியல் செயற்பாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டு வருவது தவிர்க்க முடியாதது என பலர் கருதுகின்றனர். இந்த மனப்போக்கு துர்அதிஷ்டவசமானது.
* இன்றைய பின்னணியிலும் நிலையான அபிவிருத்தி நோக்கிய செயற்பாட்டுப் பாதை திறந்திருக்க வேண்டும். பயணிப்பதற்கான எத்தனம் மேற்கொள்ளப் பட வேண்டும்.

எமக்குக் கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட நிதிவளம், ஆளணி வளத்தின் பின்னணியிலும், நெருக்கடி நிலை முகாமைத்துடன் நின்றுவிடாது நெருக்கடி நிலையில் அபிவிருத்தி (Development in Crisis) என்ற முனைப்புடன் பொருத்தமான துறைகளில் பொருத்தமான கொள்கைகள் வகுக்கப்பட்டு, திட்டங்கள் தீட்டப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

* இத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது, நாளடைவில், நெருக்கடி நிலை அற்றுப்போகும் சூழ்நிலை உருவாகும்போது, நிலைத்து நிற்கக் கூடிய (பேண்தகு) அபிவிருத்தியை நோக்கி நடைபோடுவதற்கு இடப்பட்ட படிக்கல்லாக அமையும் என்ற வாதம் வளர்ச்சி அடைந்த நாடுகளிலே முன்வைக்கப்படுகின்றது.
* இவ் ஆக்கத்தில் தொக்கி நிற்கின்ற கருத்து - நெருக்கடி நிலை முகாமைத்துவ அணுகுமுறையுடன் மட்டும் காலத்தைக் கடத்தாது 'நெருக்கடி நிலையும் அபிவிருத்தி நோக்கி' என்ற அணுகுமுறையும் சம காலத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதே.

### 'நெருக்கடி நிலையிலும் அபிவிருத்தி' அணுகுமுறை

எமது அரசமைப்பின் ஒழுங்கில் காணக் கூடிய 'இடம்சார்' அபிவிருத்திச் செயற்பாடுகளையும் 'துறைசார்' அபிவிருத்திச் செயற்பாடுகளையும் இணைத்து காலத்தின் தேவைக்கேற்ப பொருத்தமான துறைகளில் பொருத்தமான தந்திரோபாயத்துடன் நெருக்கடி நிலையில் கிடைக்கக்கூடிய மட்டுப்படுத்தப்பட்ட நிதி வளம், ஆளணி வளம், தொழில் நுட்ப வசதி போன்றவற்றை உச்சபயன்பாட்டிற்கு உட்படுத்தி நிலைத்து நிற்கக்கூடிய (பேண்தகு) அபிவிருத்திப் பாதையை நோக்கி எமது சமகால சமூக - பொருளாதார - அறிவியல் முன்னெடுப்புக்களை மேற்கொள்வதே இவ் அணுகுமுறையின் தார்ப்பரியமாகும். இன்றைய காலகட்டத்தின் தேவையும் அதுவே.

இவ் அணுகுமுறை வெற்றி அளிப்பதற்கு 'இடம்சார்' நிர்வாக அலகுக்கும் 'துறைசார்' நிர்வாக அலகுகளுக்கும் இடையே பிரதேச மட்டத்தில் இணைப்பு இருப்பது அவசியமாகும்.

இடம்சார் அபிவிருத்திக்கு உறுதுணையாக துறைசார் அபிவிருத்தி இலக்குகள் இருக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டு பிரதேச மட்டத்திற்கு துறைசார் அலகுகளின் அதிகாரப் பரவலாக்கம் இடம் பெற வேண்டும்.

அதேநேரம், எந்த ஓர் அபிவிருத்தி முயற்சியின் இறுதிப் பயனாளியாக இருக்கும் 'மக்கள்' இந்த அணுகுமுறைச் செயற்பாட்டிற்குள் கொண்டு வரப்படுவது மிக மிக அவசியமாகும். சுருங்கச் சொல்லின் நெருக்கடி நிலை அபிவிருத்தி முயற்சிகளைத் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு அரச, அரச சாரா நிர்வாக அலகுகளுடன் கிராம மட்ட மக்கள் அமைப்பு அலகுகளும் இணைக்கப்பட வேண்டும்.

'மக்கள் அமைப்பு அலகு' எனக் குறிப்பிடும்போது அரச நிர்வாக முறையில் கிராமங்களிலே உருவாக்கப்பட்டுள்ள அமைப்புக்கள் மட்டுமன்றி மக்களிடையே இயங்கும் தன்னார்வ அமைப்புகளும் (Community Based Organisation - CBO) உதாரணம் - நற்பணி மன்றங்கள், விளையாட்டுக் கழ கங்கள், ஆலய நிர்வாகங்கள், சமூக மேம்பாட்டு சங்கங்கள் / சபைகள் போன்றவற்றைக் குறிக்கும்.

கிராம மட்டத்தில் இயங்கும் தன்னார்வ அமைப்புக்கள் அமைப்பு ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும், நிதிவள ரீதியாகவும், தொழிற்பாடு ரீதியாகவும் பலப்படுத்தப்படுவது அவசியமாகும். அப்பொழுது, மக்கள் பயனாளிகளாக மட்டும் தங்களைக் கருதாது பங்காளிகளாகத் தங்களை மாற்றிச் செயற்படும் நிலைமை உருவாகும்.

எந்த ஒரு செயற்பாட்டின் அல்லது முயற்சியின் வெற்றிக்கும் அத்தகைய செயற்பாட்டில் அல்லது முயற்சியில் சம்பந்தப்படுபவர்கள் தெளிவுடன், ஈடுபாட்டுடன் தூரநோக்குடன் செயற்படுவது அவசியமாகும்.

நாம் மட்டுமல்ல எமது எதிர்கால சந்ததியினரும் மேற்கூறப்பட்ட வகையில் செயற்படுவதற்கான தடயங்களை நாம் உருவாக்க வேண்டும், ஆவணப்படுத்த வேண்டும், ஆயினும் கால சூழலுக்கேற்ப தேவைப்படும் மாற்றங்களை அவ்வப்போது ஏற்படுத்தி எமது நிலையான அபிவிருத்திப் பாதையில் நாம் பயணிக்க திட சங்கற்பத்துடன் செயற்படுவது இன்றியமையாதது.

மாற்றம் முன்னேற்றம் என்கின்றார்கள். அம்மாற்றம் விரும்பத்தக்க மாற்றமாக அமைவது அவசியமாகும்.

**S.T.பத்மநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு

திருமதி புவனேஸ்வரி செல்லப்பா - SPHM I

*சு.வை.அ.பணிமனை, சாவகச்சேரி*



குடும்பநல சேவைகளால்
குடும்பங்களில் விளக்கேற்றி
கடும் பிணிகள் காத்துநின்று
கர்ப்பிணிகள் நலம்பேணி
சேவைதனில் ஓய்வுபெறும்
சேவையின் தாய் நீர் வாழி
தேவை என்றும் வழிகாட்டல்
தந்து நீவிர் வாழி! வாழி!!

நேற்று (01.01.2009) வியாழக்கிழமை தமது சேவையில் இருந்து ஓய்வுபெறும் ***திருமதி புவனேஸ்வரி செல்லப்பா*** அவர்களை சகல செளபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

சு.வை.அ. பணிமனை, சாவகச்சேரி. (81360)

சுகாதார வைத்திய அதிகாரியும், உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.

# சிரேஷ்ட நிலை அலுவலர் கௌரவிப்பு

மானிப்பாய்,ஜன.2

வேலணை பிரதேச சபையில் நேற்று முன்தினம் இரு சிரேஷ்ட நிலை அலுவலர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

பணியாளர் நலன்புரிச் சங்கத் தலைவர் டாக்டர் க.செல்வநாதன் தலைமையில் இக்கௌரவிப்பு விழா இடம்பெற்றது.

சிரேஷ்ட நிலை முன்பள்ளி ஆசிரியராக 32 வருடங்கள் கடமையாற்றிய திருமதி சரோஜினிதேவி ஜெயகுணபாலன், சிரேஷ்ட நிலையில் தொழில்நுட்ப அலுவலராகக் கடமையாற்றி இடம்மாற்றம் பெற்றுச் சென்ற மணிவாசகம் குணானந்தசுதன் ஆகியோரே மலர்மாலை அணிவித்து, பரிசில்கள் மற்றும் அன்பளிப்பு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

மேற்படி நிகழ்வில் பிரதேச சபை செயலாளர், உள்ளூராட்சி உதவியாளர், பொறுப்பதிகாரிகள் வாழ்த்துரை வழங்கினர்.

(203-95)

# PATRICIAN INSTITUTES

## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

## தொழில்நுட்பப் பயிற்சிநெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

### ஆரம்பம்: 05.01.2009

| | |
|---|---|
| A. ADVANCED DIPLOMA COMPUTER PROGRAMMING | DURATION 1 YEAR |
| B. DIPLOMA IN MICROSOFT OFFICE | DURATION 6 MONTHS |
| C. DIPLOMA IN TYPE SETTING | DURATION 3 MONTHS |
| D. DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING | DURATION 4 MONTHS |
| E. DIPLOMA IN DESK TOP PUBLISHING | DURATION 6 MONTHS |
| F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L | DURATION 3 MONTHS |
| G. INTERNET & E-MAIL | DURATION 1 MONTH |
| H. DIPLOMA IN INTERNET TECHNOLOGY | DURATION 5 MONTHS |
| I. DIPLOMA IN MICRO MEDIA | DURATION 5 MONTHS |

### CERTIFICATE COURSES

1. MS WORD - 2000
2. MS EXCEL - 2000
3. MS ACCESS - 2000
4. MS POWER POINT
5. VISUAL BASIC VER 6.5
6. PASCAL
7. d BASE III+
8. PAGEMAKER
9. WINDOWS 95
10. COREL DRAW
11. D BASE FOR WINDOWS
12. PHOTOSHOP DELUX
13. ADOBE PHOTOSHOP
14. QUICK BOOK

**EACH 3 MONTHS**

| | |
|---|---|
| 1. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) (PITMAN LONDON EXAM PAPER மாதிரி வழங்கப்படும்) | காலம்: 6 மாதங்கள் |
| 2. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) | காலம்: 6 மாதங்கள் |
| 3. மோட்டார் வாகனம் திருத்துதல் (PETROL & DIESEL) (வாகனங்களின் செய்முறை மூலம் கற்பிக்கப்படும்) | காலம்: 6 மாதங்கள் |
| 4. ஜெனரல் எலெக்ரிஷன் (மின்சார இணைப்பு மோட்டார் றிவைண்டிங்) | காலம்: 6 மாதங்கள் |
| 5. வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் (Oscillocope) அசைவு காட்டியினை கையாள்வதுடன் கூடிய முழுமையான பயிற்சியும் செய்முறையும் | காலம்: 6 மாதங்கள் |
| 6. கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி வழங்கப்படும் (On the Job training) | காலம்: 6 மாதங்கள் |
| 7. மின் ஒட்டுநர் பயிற்சி வழங்கப்படும் (ARC WELDING & ON THE job TRAINING ) | காலம்: 6 மாதங்கள் |
| 8. மரவேலை (With use of machinery) வழங்கப்படும் (ON THE job TRAINING) | காலம்: 6 மாதங்கள் |
| 9. குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | காலம்: 6 மாதங்கள் |
| 10. PLUMBING | காலம்: 6 மாதங்கள் |
| 11. MASONARY | காலம்: 6 மாதங்கள் |

## வாகன உரிமையாளர்களுக்கான அறிவித்தல்

### வாகனத்தகுதிச் சான்றிதழ் - 2009

2009ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் தை மாதம் தொடக்கம் வழங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குறிப்பு:**

1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களுக்கு ஆதாரங்காட்டி பங்குக்குருவானவரின் (Parish priest) சிபாரிசின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெறலாம்.
3. பயிற்சிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விவரங்களுக்கு**

REGISTRAR,
PATRICIAN INSTITUTE,
61, (59)ST.PATRICK'S ROAD,
JAFFNA.
T.P.: 021 222 6148 FAX: 021 2226148
E.Mail: Spitte@Sltnet.lk

# சிறுவருக்கான அறிவியல் கண்காட்சி

காலம்: **03, 04.01.2009**

***(காலை 9.30 மணிமுதல் பி.ப. 4 மணிவரை)***

இடம்: **SOND நிறுவன அலுவலகம், 60, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.**

(சிறுவருக்கான இறுவெட்டுக்கள் (CD) விற்பனையும் நடைபெறும்)

(81340)

**அனுமதி இலவசம்!**

# யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின்

## வருடாந்த ஒன்றுகூடலும் தரம் 1 மாணவர்களின் பெற்றோர் சந்திப்பும்

★ *2009ஆம் ஆண்டு தரம் 1இல் கல்வி கற்க இருக்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடலும் அவ்வகுப்பு மாணவர்களின் சீருடை வழங்கலும் 03.01.2009 சனிக்கிழமை பி.ப. 3.15 மணிக்கு பாடசாலையில் நடைபெறும். அனைத்துப் பெற்றோர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

★ *பாடசாலை ஆசிரியர்கள், பா.அ.சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் இணைந்த வருடாந்த ஒன்றுகூடல் 03.01.2009 பி.ப. 4 மணிக்கு இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(சி/556432) **அதிபர்.**

# கூறுவிலை கோரல்

## *போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்*

கீழ்க் குறிப்பிடப்படும் பொருள்களுக்கான கூறுவிலைகள் பொருத்தமான நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கூறுவிலைகள் 15.01.2009 அன்று மு.ப. 10 மணிக்கு முன்பு அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக ***பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்*** என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது போதனா வைத்தியசாலை கணக்காளர் அறையிலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல்வேண்டும். கூறுவிலை கடித உறையின் இடதுபக்க மேல்முனையில் ''சலரோக நிலையத்திற்கு பொருள் கொள்வனவிற்கான கூறுவிலை'' என எழுதப்பட்டிருப்பதுடன் விவரக் கோவை உள்ள பொருள்களுக்குரிய விவரக் கோவைகள் (Catalog) உள்ளடக்கப்படல் வேண்டும்.

1. Consultation swivel chair - 08
2. Single chair (Steel) - 10
3. Steel cabinet (small) - 02
4. Steel cabinet (big) - 02
5. "TV 36" LCD - 01
6. DVD player - 01
7. Amplifier, Ceiling speaker & mic with installation.

**Dr.E.தேவநேசன்**
*பணிப்பாளர்,*
*போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.* (சி/556433)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## வெளிவாரிப் பட்டக் கற்கைகள் பதிவுகளுக்கான விண்ணப்பங்கள்

### *கல்வியாண்டு - 2007/2008*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டக் கற்கை நெறிகளை 2007/2008 கல்வியாண்டில் பயில விரும்பும் மாணவர்கள் பின்வரும் கற்கைநெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாக எதிர்வரும் 02.02.2009வரை பதிவுசெய்து கொள்ளலாம்.

**கற்கை நெறிகள்**

1. வர்த்தக முதற் கற்கை நெறி
2. கலைமுதற் கற்கை நெறி
3. பொது/சிறப்புக் கலைமாணி/ வணிகமாணி பகுதி - 1
4. நுண்கலைமாணி (சங்கீதம்/நடனம்) முதலாம் வருடம்

| *கட்டண விவரம்* | *ரூபா* |
|---|---|
| விண்ணப்பப் படிவம் | 100.00 |
| பதிவுக் கட்டணம் | 1000.00 |
| பாடத்திட்டமும் விதிமுறைகளும் | 250.00 |

(கலை/ வர்த்தக முதற் கற்கை நெறிக்கானது)

விண்ணப்பப் படிவத்தையும், பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் உரிய தொகைகளைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து எமது அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்ட ரூபா 40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன் உதவிப்பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

*முக்கிய குறிப்பு:*

1. மேற்படி விண்ணப்ப முடிவுதிகதிக்குப்பின் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. மேற்படி பதிவுகள் தொடர்பான சகல நடவடிக்கைகளும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

*பதில் பதிவாளர்.*
*01.01.2009* (சி/556436)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானத்தையும் விடச் சிறந்த சாதகம் சேவையே ஸ்ரீசத்யசாயி பாபாவின் புதுவருடச் செய்தி

இந்தப் புதிய வருடத்தில் ஒருவர் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஆன்மீக உறுதிப்பாடுகள், விலக்கிக்கொள்ள வேண்டிய பழக்க வழக்கங்கள், எடுக்கவேண்டிய தீர்மானங்கள் எவை? என்பதை சிந்தியுங்கள்! அதாவது புதிய ஆதர்ஸனங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும்; 'இறை' சிந்தனையுடன் செயலாற்ற வேண்டும்.

''என்னை உனது சாரதியாகக் கொண்டு செயல்களை ஆற்று'', இந்த ஒப்புயர்வற்ற நல்வாய்ப்பை நழுவ விடாதே. உனக்கு மீட்சி அளிக்கக்கூடிய சாதகம் எதுவென என்னிடம் கேள். காலங்கடந்தால் என்னை நெருங்க உன்னால் முடியாமல் போய் விடும். இந்த தெய்வீகத்துவம் விசுவவிருட்சமாக (உலகம் முழுவதற்கும், மனிதகுலம் முழுவதற்கும் நிழலும், இடமும், நல்கும் மரமாக) வளர்ந்து, பெருகி வருகிறது. இந்த உருவத்தை ஏற்று வந்ததும், அந்தக் காரணத்துக்காகத்தான். இந்த அவதாரத்துக்கு தயக்கமோ, தடங்கலோ இல்லை. என் பெயர் சத்யம்; என் போதனைகள் சத்யம்; என் பாதை சத்யம்; நானே சத்யம்; நானே சத்யநாராயணன்.

இன்றிலிருந்து மனிதன் தனக்கு சாந்தி கிடைக்க என்ன வேண்டுமோ, அதனைச் செயல்படுத்த வேண்டும். அமைதி, சாந்தி இல்லை எனில் ஆனந்தம் எங்கே? எது செய்தாலும் முழுமையான இதயத் துடன் செய்ய முயல வேண்டும். அப்ப டிப்பட்ட செயல்களே சத்யமானவை; நித்தியமானவை. இந்த புனித புத்தாண்டில் புதிய எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்; வேற்றுமையை விலக்கி, ஒற்றுமையை வளர்த்து, தெய்வீகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். இதயத்தில், அதன்மூலம் உருவாகும் ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டும். ''நான் நித்தியானந்தன்; நிரந்தரமான ஆனந்தத்தைத் தன்னகத்தே கொண்டவன்'' என்று முதலில் புரிந்து கொள்ளவேண்டும். எந்த வகையில் துன்பங்களோ, இடையூறுகளோ எழுந்த போதும்; நான் ஆனந்த வடிவம் கொண்டவன்'' என்ற நிச்சயமான எண்ணத்தால் அவற்றை வெல்ல முடியும்; எதிர்கொள்ள முடியும்.

இந்தப் புனிதமான புதுவருடத்தில் இறைவன் அனைவரிடமும் நிறைந்துள்ளான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

மனிதர்களுக்கு 'பிரசாந்தி' என்பது மிக முக்கியம். ஆனால் உலகில் எங்கும் இந்த பிரசாந்தி கிடைப்பதில்லை. எங்கு தேடினாலும் கிடைப்பதில்லை, எங்கு போனாலும்Pieces,Piecesதான். 'Peace' என்பது பிரசாந்தி நிலையத்தில் மட்டுமே கிடைக்கின்றது. ஒவ்வொருவர் இதயங்களையும் பிரசாந்தி நிலையங்களாக மாற்றுங்கள். உங்கள் உள்ளங்களை உத்தமமான எண்ணங்களால் நிரப்பிக் கொள்ளுங்கள். முதலில்தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். கஷ்டங்கள் வரும்; போகும், எல் லாமே,

Passing clouds,
Do not worry about that cloud
Think only about God.

நமக்கு முக்கியமான தேவை இதுவே; பகவானை நினை; பிரார்த்தனை செய்!

.நித்தியமான, சத்யமான, தெய்வத்துவத்தை எப்போதும் நாம் சிந்தித்து வரவேண்டும். தெய்வப் பிரேமையை அணுக வேண்டும்,வளர்க்க வேண்டும்.

Love is God
Live in Love

அதுவே உங்கள் வாழ்க்கையாக அமையட்டும். யாவரிடமும் அன்பு செலுத்து; அனைவரும் தெய்வ வடிவங்களே; ஆகவே, தெய்வத்தையே எண்ணி வாழ்ந்து வந்தால், மலை போன்ற துன்பமும், பனிபோல் நீங்கிவிடும்.

சகல சௌபாக்கியங்களுடன் கூடிய வாழ்க்கையும் ஆனந்தம் தருவதில்லை. உலகியல் சுகங்கள் பெருகப் பெருக அமைதியின்மையும் அதிகரிக்கின்றது. அன்பை வளர்த்துக்கொள்ளுங்கள். சத்யத்தைப் பேசுங்கள். தர்மத்தை கடைப்பிடியுங்கள்; சத்சங்கங்களை முதலில் உங்கள் வீடுகளில் ஆரம்பியுங்கள், உங்கள் குடும்பங்களில் மகிழ்ச்சியும் இசையும் நிறையட்டும். முரண்பாடு, வேறுபாடு, ஆடம்பரம், பகட்டு, அசூயை, துவேஷம் முதலியன மறையட்டும்; கல்வி அறிவு, அனுபவம், நல்லுணர்வு, பெற்றபேறு, கிடைத்த சம்பாத்தியம், கலையுணர்வு ஆகியவைகளோடு ஒருவருக்கொருவர் ஒற்றுமையோடு, நிறைவோடு, திருப்தியோடு, சகிப்புத்தன்மை, சாந்தி, பிரேமை ஆகிய நற்பண்புகள் நிறைந்து வாழும், தலைமுறைகள் உருவாகட்டும்.

உங்கள் ஒவ்வொருவருடைய வீடுகளிலும் ''சாயி சூழ்நிலை'' நிரம்பிய சத்சங்கத்தின் மணம் நிரம்பி, மணம் வீசட்டும். வேறுபட்ட கருத்துக்கள்; வேறுபட்ட குணநலன்கள் உள்ளவர்களோடு ஒற்றுமையாக வாழவும், அடுத்தவர்களைப் புரிந்துகொண்டு இரக்கம் காட்டவும், பிறரின் மகிழ்ச்சி கண்டு மகிழவும், அடுத்தவர் துன்பங்கண்டு இரக்கம் கொள்ளவும் நீங்கள் பழகிக் கொள்ள வேண்டும். உங்களால் முடிந்த வேலைகளைச் செய்வதில் ஈடுபட வேண்டும்; தியானத்தையும் விடச்சிறந்த சாதகம் சேவையே.

இப்பிரபஞ்சத்தை இயக்குவது ப்ரமையே. ப்ரமையே இறைவன், இறைவனின் அருளைப் பெற்றுத்தருவதும், ஐக்கியம் அடையச் செய்வதும், ப்ரேமையே. ப்ரேமையை வளருங்கள்; சாந்தமாகப் பேசுங்கள். அப்படிப் பேசும்போது உங்களுக்குள் நல்ல உணர்வுகள் உருவாகின்றன. சமுதாயத்தில் நல்லவராகத் திகழுங்கள். இதுவே இப்புதிய ஆண்டில் சுவாமியின் விஷேசமான ஆசீர்வாதங்கள்! (பாபா).

'புனித புத்தாண்டே வருக வருக' புதுவளம் பல தருக. எங்கும் சாந்தி நிலவுக! உள்ளத்தில் தெய்வீகம் பொங்குக! புத்தாண்டில் பெரு நன்மைகள் பெருகுக!



ஆர்.சுதாகரன்
இலங்கை வங்கி, கொழும்பு.

என பகவான் ஆசியை வேண்டுவோம். சாந்தியும், அமைதியும் சூழ! பகவான் பொழிந்த அருளமுதத்தில் ஊறி அதன் வழி செல்ல உறுதிபூணுவோம். 'ஜெய ஜெய சாயி, குரு சாயி' என பாடுவோம்.

பகவான் எமது சுயநலத்தைப் போக்கி பிறருக்குதவும் கருவிகளாக நம்மைத் தயார் செய்து வருகிறார். இருபத்தொன்றாம் நூற்றாண்டில் வாழும் எமக்கு இது மிகவும் தேவையானதே. 'பகவான்' நமக்கு ஆன்மீக சக்தியை ஊட்டுகிறார். பகவான் அருளாசியுடன் நமது பலவீனங்களையும், தவறுகளையும் கண்டறிந்து, புதிய திட்டங்க்ளை செயற்படுத்தி, உள்ளத்தில் புதிய மாற்றங்கொண்ட புனித வாழ்வை செவ்வனே இட்டுச்செல்ல திடசங்கற்பம் கொள்வோம். பகவான் 'அருளாசி வழிகாட்டட்டும்; எம்மை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லட்டும், பகவானின் உண்மைத் தொண்டர்களுள் ஒருவராக, சேவை செய்வதைப் பெரும் பேறாகக் கொள்வோம். பிறருக்குதவும் கருவிகளாகச் செயலாற்றுவோம்.

** **

## சாவகச்சேரி நகர்ப்பகுதியில் நுளம்பு ஒழிப்புப் பணிகள்

யாழ்ப்பாணம், ஜன.2

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நுளம்பு ஒழிப்பு புகையூட்டல் பணிகளை சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் புகையூட்டல் பணிக்கான எரிபொருள் செலவினை சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும், சாவகச்சேரி டச்சு வீதி அகிலாண்டம் சனசமூக நிலையத்தினரும் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

# இலங்கை வங்கியின் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு 54 பேர் தெரிவாகியுள்ளனர்

## 16, 18 ஆம் திகதிகளில் கொழும்பில் நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், ஜன.2

இலங்கை வங்கியின் முகாமைத்துவ பயிலுநர் பதவிக்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் 54 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 16, 18 ஆம் திகதிகளில் கொழும்பு தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என்று இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் அனைவருக்கும் அனுப்பிவைக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

ஆர்.அமல்ராஜ் - பருத்தித்துறை, ரி.அனோஜா - புலோலி, எஸ்.அரசலிங்கம் -மானிப்பாய், எஸ்.அருளானந்தம் - சுன்னாகம், வை.கணேசமூர்த்தி - கொக்குவில், ஜே.அய்யாத்துரை - கரவெட்டி, கே.ஏ.ஜெயகரன் - யாழ்ப்பாணம், வி.ஜெயந்தி - பருத்தித்துறை, கே.கஜீறன் - யாழ்ப்பாணம், ஜே.கஜீறன்- யாழ்ப்பாணம், எல்.கனகலிங்கம் - யாழ்ப்பாணம், எஸ்.கணநாதன்-அரியாலை, கே.காந்தராஜா - வட்டுக்கோட்டை, பி.கதிர்காமத்தம்பி - யாழ்ப்பாணம், என்.காயத்திரி - மிருசுவில், எஸ்.கிருஸ்ணா - யாழ்ப்பாணம், ஏ.குகரூபன் - கைதடி, று.மதனன் - அரியாலை, ஆர்.மோகனதாஸ் - யாழ்ப்பாணம், எஸ்.முரளிகரன் - பருத்தித்துறை, கே.முத்துலிங்கம் - நல்லூர், ஏ.நிதர்சன் -யாழ்ப்பாணம், ஆர்.பிரசாந்தன் - வட்டுக்கோட்டை, பி.ராமணகிருஸ்ணா - யாழ்ப்பாணம், ஆர்.ரதிதேவி- புத்தூர், வை.ரவீந்திரன் - யாழ்ப்பாணம், ஆர்.சாம்பசிவம் - யாழ்ப்பாணம், ஈ.சந்தானு - பாசையூர், பி.செல்வக்குமார் - நல்லூர், கே.செல்வராஜா - அல்வாய், எம்.செல்வரட்ணம் - நீர்வேலி, ஐ.செந்தீஸ்வரி - திருநெல்வேலி, எஸ்.சண்முகநாதன் - கோண்டாவில், எஸ்.சிவஞானம் - நல்லூர், என்.சிவமனோகர் - சுன்னாகம், ஆர்.சிவராஜா - மானிப்பாய், எஸ்.சிவராஜசிங்கம் - கோண்டாவில், பி.சோதிலிங்கம் - கோப்பாய், வி.சிறீகாந்தன் - வட்டுக்கோட்டை, பி.சுபராஜினி - யாழ்ப்பாணம், எஸ்.சுபாஸ்கர்- வல்வெட்டித்துறை, கே.சுஜித்தா - நல்லூர், கே.சுஜஸ்கா- அரியாலை, வி.சுகந்தி - கோண்டாவில் கிழக்கு, ரி.சுதாகரன் - கோப்பாய், எஸ்.தனரஞ்சிதராஜன் - யாழ்ப்பாணம், எஸ்.தர்சினி- அளவெட்டி, எஸ்.தவராசா - கோண்டாவில், எஸ்.தயாகரன் - கோப்பாய், எஸ்.தயானந்தன் - காரைநகர், பி.தினேஸ்குமார் - திருநெல்வேலி, ரி.வாசுகி - கரவெட்டி, ஆர்.வாசுகி - கொக்குவில் மேற்கு, எஸ்.வோல்வின் - யாழ்ப்பாணம்.



நல்லூர்–அரசடி வீதி–சிவன் புதுவீதி சந்தியில் பாரிய குழி ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த வீதியால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர் கொண்டுவருகின்றனர். வீதியில் குழி ஏற்பட்டிருப் [illegible] கவனம் [illegible]

(111)

# இயற்கைப் பேரழிவுகள் நிறைந்த ஆண்டு 2008 பற்றிய காப்பீட்டு நிறுவனம் ஒன்றின் கணிப்பு

முடிவடைந்த 2008 ஆம் ஆண்டானது இயற்கைச் சீற்றங்களைப் பொறுத்தவரையிலே மிக மோசமான ஆண்டுகளில் ஒன்றாக அமைந்திருந்தது என உலகின் மிகப்பெரிய மறுகாப்பீட்டு நிறுவனங்களில் ஒன்று தெரிவித்து இருக்கின்றது.

2007 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயிரிழப்பு, பொருள்சேதம் என்ற இருவகையிலுமே 2008 ஆம் ஆண்டிலேயே இயற்கைப் பேரழிவுகள் பெருமளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருப்பதாக யூனிக்றே என்ற நிறுவனம் கூறுகின்றது.

### புவி வெப்பமடைவதால் ஏற்படும் மாற்றங்கள்

புவி வெப்பமடைந்து வருவதால் ஏற்படுகின்ற காலநிலை மாற்றங்கள்தான் சூறாவளி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களின் உக்கிரத்தை தீவிரப்படுத்தி வருவதாக அந்த நிறுவனம் குறிப்பிடுகின்றது. காலநிலை கட்டு மீறிப் போவதனைத் தவிர்க்க மனித செயற்பாடுகளால் காற்று மண்டலத்தில் கலக்கும் கரியத்தின் அளவுகளைக் குறைப்பதில் கடுமையான கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட வேண்டும் என அது வாதித்திருக்கின்றது.

### எண்ணிக்கை குறைவுதான்

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் கடந்த வருடம் இயற்கை சீற்றங்களின் எண்ணிக்கை சற்றுக்குறைவுதான் என்று யூனிக்றே தனது வருடாந்த மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவித்து இருக்கின்றது. புயல், வெள்ளம், பூகம்பம் போன்ற சம்பவங்களினால் உலக அளவில் ஏற்பட்ட மனித உயிரிழப்புகள் 22,0000 இற்கும் அதிகம் என்று கணிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொருள் சேதங்கள் என்று பார்த்தாலும் இயற்கை அனர்த்தங்களால் உலகளாவில் ஏற்பட்ட மொத்த இழப்பு இரண்டு லட்சம் கோடி அமெரிக்க டொலர்கள் என்றும் இதிலே காப்பீடு செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பீடு 45 ஆயிரம் கோடி அமெ. டொலருக்கும் அதிகம் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பர்மாவில் தாக்கிய சூறாவளி 'நர்கிஸ்', சீனாவில் செஞ்சுவான் பிராந்தியத்தில் ஏற்பட்ட பூகம்பம், வட அத்திலாந்திக் கடற்பரப்பில் ஏற்பட்ட சூறாவளி ஆகியவை கடந்த வருடத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய பேரழிவுச் சம்பவங்களாகும்.

(119)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாடு தறிகெட்டு ஓடி, அராஜகம் தலைவிரித்தாடுவதற்கு வழி சமைக்கும் விதமாகவே இன்றைய அரசின் நடைமுறைப் போக்குத் தென்படுகிறது என்பதைப் புலப்படுத்தும் வகையில் அமைகிறது, கடந்த 21 ஆம் திகதிய 'இருதின' பத்திரிகையின் இந்த ஆசிரிய தலையங்கம்.**

**அதன் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.**

நாடொன்றில் நல்லாட்சியும், ஜனநாயகமும், சட்டத்தின் ஆதிக்கமும் நடைமுறையில் ஒழுங்காக நிலவவேண்டுமானால், அவற்றைக் கொண்டுசெல்லும் நிறுவனங்கள் ஒன்றையொன்று புரிந்துகொண்டு சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் செயற்படவேண்டியுள்ளது. அந்த வகையில் நாடொன்றின் நிறைவேற்று நடுநிசியிலிருந்து உலக எரிபொருள் விலைமட்டத்துக்குப் பொருந்தும் விதமாக - அரசு தனது வரி அறவீட்டு -இலாபத்தையும் ஈட்டிக் கொள்ளும் விதமாக ஒரு லீற்றர் பெற்றோல் நூறு ரூபாவுக்கு வழங்கப்பட வேண்டுமென நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது. ஆனாலும் இதுவரை அத்தீர்ப்புஅரசால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்த விவகாரம் சம்பந்தப்பட்ட வரையில் சிக்கல்கள் பலவற்றுக்கு விடைகாண வேண்டியுள்ளது.

அவற்றுள் முதலாவது, நாட்டின் அதிஉயர் நீதிமன்றமான உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பொன்றை மீளவும் பின்நோக்கித் திருப்பிவிட அல்லது அதை நடைமுறைப்படுத்தாதிருப்பதற்கு அமைச்சரவைக்கோ அல்லது வேறெந்தவொரு நிறுவனத்துக்கோ ஆற்றல் உள்ளதா என்ற வினாவேயாகும். உயர்நீதிமன்றமென்பது நாட்டின் சட்டம் சம்பந்தப்பட்ட வரையில் அதி உச்ச நிறுவனமாகும்.

ளால் அவற்றுக்கு எதிராகச் செயற்பட இயலாது. அது சாத்தியமற்றது என்பதால் அத்தீர்ப்புகளுக்குத் தலைவணங்காதிருப்பதற்கோ அல்லது அவற்றை அவமதிப்பதற்கோ எவரொருவராலும் இயலாது. கடந்த அரசுகளின் ஆட்சிக்காலத்துள்ளும் இன்றைய அரசின் ஆட்சிக்காலத்துள்ளும் அவ்வாறு அரசுக்குச் சாதகமற்ற பாரதூரமான தீர்ப்புகள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் நிறையவே இருந்துள்ளன. அந்த எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசுகள் நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிராக எழுந்ததில்லை, சவால் விடுத்து நின்றதில்லை.

எமது நாட்டில் மாத்திரமல்ல, உலக மட்ட ஜனநாயக வாதக் கட்டமைப் பினுள்ளும் அத்தகையதொரு இறுக்கமான நடைமுறையே காணப்படுகிறது. அதற்கு நல்லதொரு உதாரணமாகப் பாகிஸ்தான் உயர்நீதிமன்றத்தை இங்கு குறிப்பிட முடியும். அதாவது, பாகிஸ்தானின் பலம் பொருந்திய இராணுவத் தலைவரான - அந்நாட்டின் நிர்வாகியான - ஜெனரல் பர்வேஸ் முஷாரப், இறுதியாக மேற்கொண்ட பதவிப்பிர மாணம்

கூட்டல் கழித்தல் எண்கணக்கை அறிந்துள்ள எந்தவொரு சிறுபிள்ளைதானும் இந்நாட்டு எரிபொருள் விலை மட்டங்களை ஏற்க மாட்டாது. இதனைத் தெளிவாகப் புரிந்தும், வாய்திறக்காது மௌனம் சாதிக்கும் ஒட்டுமொத்த நாட்டு மக்களின் சார்பாகவே தினியாவல பாலித தேரரும், ஐ.தே.கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக் கவும் அவர்களுடன் தனியார் வர்த்த கரொருவரான வாகபிட்டிய ஆகிய பிரமுகர்கள், இதை உயர்நீதிமன்றம் முன்கொண்டு சென்றமைக்குக் காரணம் பொதுமக்களுக்கு நிவாரணமொன்றைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலானதேயாகும்.

நீதிமன்றமும் கூட குருட்டாம் போக்கில் தனது எண்ணத்துக்கு இசைவாக விலை நிர்ணயிக்கவில்லை. அரசுக்குச் சேரவேண்டிய வரி, இலாபம் குறித்து ஆழ்ந்து கவனம் செலுத்திய பின்னரே அதற்கமைவாக விலையை நிர்ணயித்தது.

நாட்டு மக்களும் கூட இத்தகையதொரு தீர்வையே உயர்நீதிமன்றத்திடமிருந்து எதிர்பார்த்திருந்தனர். அந்தவகையில், இன்றைய நிலையில் நாட்டு மக்கள் அனைவரும் அந்த நீதிமன்றத் தீர்ப்புடன் சார்ந்தே நிற்கின்றனர் என்பதை அரசு ஞாபகத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

# நீதிமன்றத்தை அவமதிக்கும் அரசின் தான்தோன்றித்தனம்

மேற்படி உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அனுகூலமாகச் செயற்படுவதே அரசின் கடப்பாடாகும். அவ்வாறு நடந்துகொண்டிராத அரசு, இன்றைய அளவில் தீது மிக்க - தவறானதொரு பாத்திரமாகவே நாட்டுமக்கள் முன்னிலையிலும் சர்வதேச சமூகத்தின் முன்னிலையிலும் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டுள்ளது. இந்நிலையில், அரசு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்குத் தலைவணங்காதிருப்பதைப் போன்று, சில வேளை நாட்டு மக்களும் கூட நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்குத் தலைவணங்காதிருக்கும் விதமாகச் செயற்பட எத்தனிப்பார்களானால், நாட்டில் எத்தகையதொரு நிலைப்பாடு உருவாகக் கூடுமென்பது இங்கு கேள்விக்குரியதாகிறது.

இலங்கை என்பது சட்ட ஆளுமையற்ற - சட்டத் தின் ஆதிக்கம்

**தமிழில்: சரா**

அற்ற அ ஜகம் நிலவுமொரு நாடு என சர்வதேச சமூகத்தால் முத்திரை குத்தப்படும் போது எதிர்காலத்தில் நிகழக் கூடியவை எவையாக இருக்க முடியும்?

எனவே, இந்த அனைத்து வினாக்களுக்கும் அரசு உடனடியாகப் பதிலளிக்க வேண்டியுள்ளது.

இது விடயத்தில் அரசு ஏற்கனவே பெரிதும் தாமதித்துள்ளது என்பதை நாம் பொறுப்புடன் சுட்டிக்காட்டி நிற்கிறோம்.

எனவே நீதிதேவதை மூலம் வழங்கப்படும் வழக்குத் தீர்ப்புகளின்போது அத் தேவதை கரத்தில் ஏந்திநிற்கும் தராசின் இரு புறங்களிலும் தாவி நின்று இன்றைய அரசினால் நடத்தப்படும் விவகாரம் மிக்க அபாயகரமான விளையாட்டு. எனவே இது உடன் நிறுத்தப்பட்டு நீதிமன்றத் தீர்ப்புக்கு மதிப்பும் கௌரவமும் வழங்கப்பட வேண்டுமென்பதை நாம் மிகுந்த அவசியத்துடன் இன்றைய அரசிடம் கோரி நிற்கிறோம்.

அதிகாரம், நீதிமன்றம், அரசமைப்பு என்ற இம்மூன்றும் கண்களுக்குப் புலப்படாதிருக்கும் மேற்குறிப்பிட்ட அச்சிறப்பியல்புகளைச் செயலுருவில் நடைமுறைப்படுத்துவதற்காக நிறுவப்பட்டிருப்பவை, கண்களுக்குப் புலப்படும் அரச கூட்டுத்தாபனங்களேயாகும்.

அரசமைப்பு நிறுவனத்தின் மூலம் சட்டங்கள் ஆக்கப்படுவதோடு, அச்சட்டங்கள் நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அச்சட்டங்களுக்கு உயிர் கொடுத்து அர்த்தப்படுத்தி நிற்பது நீதிமன்றமேயாகும். இந்த நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று முறைகேடாகத் தத்தமது பலத்தைப் பிரயோகித்துக் கொள்ளாது - தமது அதிகார பலத்துக்கு அப்பால் செல்லாது - ஒன்றையொன்று கௌரவித்துக்கொள்ளும் விதமாகச் செயற்படுமானால், உலகிலேயே போற்றத்தக்க நாடு என்ற முன்னுதாரண நிலைப்பாட்டை ஈட்டிக் கொள்ள இயலாது போனாலும்கூட, நாட்டு மக்களால் முறைமையொன்று நிலைநிறுத்தப்படுவதற்கு அது காரணமாக அமையும்.

ஆனால், ஒரு நிறுவனம் ஏனைய நிறுவனமொன்றைக் கௌரவிக்காது அதைக் கடந்து அதற்கு அப்பால் மீறிச் செல்வதற்கு எத்தனிக்குமானால், அங்கு நிர்வாகத்தைச் சீர்குலைத்து குழப்பத்தை ஏற்படுத்தி விடுமொரு நிலைப்பாடாகவே அது அமையும். அத்தகைய நிலையில், பலதரப்பட்ட மோதல்களும், சிக்கல்களும், பிரச்சினைகளும் தலைதூக்கக் கூடும். இறுதியில், கட்டுப்படுத்திக்கொள்ள இயலாததொரு நிலைப்பாடு உருவாகி நாடு அராஜக நிலைக்குள் தள்ளப்படலாம்.

இன்றைய [illegible]வில் எமது நாட்டில் உருவாகியிருப்[illegible] அத்தகையதொரு நிலைப்பாடேயாகும். உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கொன்று தொடர்பாக கடந்த 17 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு பின்னடைந்து நிற்பதும் இந்த நிலைப்பாட்டுக்கு உந்துதல் வழங்கியுள்ள அண்மைக்கால சம்பவம் எனலாம். எவ்வாறான போதிலும் கடந்த 17 ஆம் திகதி

அந்த வகையில் தமது உரிமைகள் மீறப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றின்போது - தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றின்போது, இறுதியாக நாட்டு மக்களுக்குக் கைகொடுத்துதவவும் ஆபத்பாந்தவர் உயர்நீதிமன்ற



மேயாகும். அதற்கமைய சட்டத்துக்கு மேலாக அல்லது சட்டத்தின் ஆதிக்கத்துக்கு மேலான ஆதிக்கம் செலுத்த எவரொருவருக்கும் இடமில்லையென்பதால் நாட்டின் எந்தவொரு நபரும் நீதிமன்றத் தீர்ப்புக்கு உட்பட்டவரேயாகிறார். அங்கு ஜனாதிபதியென்றாலும், எதிர்க்கட்சித் தலைவரென்றாலும், மத்திய வங்கியின் ஆளுநர் என்றாலும் கூட எந்தவொரு மாற்றத்துக்கும் இடமில்லை.

சில சந்தர்ப்பங்களில் இந்த நீதிமன்றத் தீர்ப்புகள் அதிகாரத்திலிருக்கும் [illegible] தொந்தரவாகிவிடக்கூடும். அவர்க

சர்ச்சைக் குரியது என அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதன் காரணமாக ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்புக்கும் நீதிமன்றத்துக்கும் இடையில் பெரும் மோதல் நிலை உருவாகியிருந்தது. அம்மோதலின் உச்சக்கட்டமாக ஜனாதிபதியினால் அந்நாட்டின் பிரதம நீதியரசர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இறுதியில் அப்பதவிநீக்கம் நீதித்துறை சார்ந்தோர் வீதியிலிறங்கிப் போராட்டம் மேற்கொள்ளும் அளவுக்குத் தீவிரமடைந்தது.

இறுதியில், இராணுவப் பலவானான ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் தமது பதவியைத் துறந்து வீடுசெல்ல வேண்டி நேர்ந்தது.

அந்த முன்னுதாரணச் சம்பவம் அதே விதமாகவே இலங்கையில் இடம்பெறுவதற்கு அமையும் வாய்ப்புகள் மிகச் சொற்பமே எனக் கருத முடிந்தாலும் கூட, அச்சம்பவத்தின் மூலம் இந்நாட்டின் அரசியல்வாதிகள் கற்றுத்தேற

## பெற்றோல் விலை குறைப்புக் குறித்த உயர் நீதிமன்றத் தீர்ப்பும் இத்தகையதே

வேண்டிய பாடங்கள் சொற்பமானவையல்ல.

மறுபுறத்தில் உலக வர்த்தகச் சந்தையில் நிலவும் எரிபொருள் விலைகளுடன் ஒப்பிடும்போது

அவ்வாறு நிகழாது போகுமானால், எதிர்காலத்தில் இந்த நாடு எத்திசை நோக்கிப் பயணிக்கக்கூடுமென்பதை எண்ணிப்பார்க்கவும் இயலாது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் போரை நிறுத்த நினைவூட்டி பிரதமருக்கு கடிதம் எழுதுகிறார் ராமதாஸ்



கும்பகோணம், ஜன. 02

இலங்கையில் போரை நிறுத்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கொழும்பு செல்வார் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரை போகவில்லை. எனவே, அவருக்கு நினைவூட்டும் விதமாக பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் பிரணாப் முகர்ஜிக்கு கடிதம் எழுதவுள்ளேன்.

- இவ்வாறு பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

குடந்தையில் நேற்று முன்தினம் புதன் கிழமை அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

தமிழர் பண்பாடு, கலாசாரம் நாளுக்கு நாள் சீரழிந்து வருகின்றமை கவலை அளிக்கிறது. மேலை நாட்டு கலாசாரத்தை தமிழக மக்கள் கடைப்பிடித்து வருகின்றனர். ஆனால், மேலை நாட்டு மக்கள் நமது கலாசாரத்தை விரும்பி ஏற்றுள்ளனர்.

சென்னையில் உள்ள நட்சத்திர விடுதியில் புத்தாண்டுக் கொண்டாட்டம் குறித்து கொடுக்கப்பட்டுள்ள விளம்பரத்தில் அழகிகளுடன் மது அருந்திக் கொண்டு நடனமாடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சமூகச் சீரழிவுக் கொண்டாட்டத்தை சென்னை மாநகரக் காவல் ஆணையர் தடை செய்ய வேண்டும். தமிழருக்கும், தமிழ் கலாசாரத்திற்கும் எதிரான சீரழிவுகளைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. அதைச் சுட்டிக் காட்டத் தயங்க மாட்டேன்.

திருமங்கலத்தில் நடைபெற உள்ள இடைத்தேர்தல் நிகழ்வுகள் கவலை அளிக்கக் கூடிய வகையில் இருக்கின்றன. முன்பெல்லாம் ஓர் ஆட்சியைப் பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கணிக்க இடைத்தேர்தல் நடைபெற்றது. ஆனால், இப்போது யாருக்கு செல்வாக்கு, பணம், ஆட்பலம், அதிகார பலம் உள்ளன என்று பார்க்க இடைத்தேர்தல்கள் நடைபெறுகின்றன - என்றார்.

இதேவேளை, அரியலூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 31ஆவது மது ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்க வந்தபோது ராமதாஸ் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு-

இதுவரையில் மக்களின் எண்ணமாக இருந்த முழு மது விலக்கு, தற்போது மக்கள் இயக்கமாக மாறியுள்ளது.

மது விலக்கு தொடர்பாக நான் முதலில் பேசியபோது, கேலிகளும், கிண்டல்களும் எழுந்தன. இதைத் தாங்கிக்கொண்டு நான் செயற்பட்டதாலேயே, இன்று மது விலக்கு தானாக வந்து சேர்கிறது.

கடந்த ஓராண்டில் 30 மாவட்டங்களில் மது ஒழிப்பு மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. இதுபோன்ற மாநாடுகள் மூலம் மக்களின் எண்ணமாக இருந்த முழு மது விலக்கு, தற்போது மக்கள் இயக்கமாக மாறியுள்ளது.

தற்போதைய தி.மு.க. ஆட்சியில்தான் கடந்த ஆட்சியைவிட இரு மடங்காக மதுக் கடைகள் அதிகரித்துள்ளன.

மதுக் கடைகளை ஒரு மணி நேரம் முன்னதாக மூட உத்தரவிட்டதன் மூலம், ஒட்டகத்தின் சுமையில் இருந்து ஒரு சிறு துரும்பை மட்டுமே எடுத்துப் போட்டிருக்கிறார் முதல்வர். எனவே, வரும் பொங்கல் முதல் முழு மது விலக்கை அவர் அமுல்படுத்த வேண்டும் - என்றார்.







நேற்றுப் பிறந்த புத்தாண்டை குஜராத் மாநில மாணவிகள் முகத்தில் வண்ணம் தீட்டி புதுமையாக வரவேற்றதை முதல் படத்திலும், அடுத்த படத்தில் பெண்ணின் முதுகில் எழுதப்பட்ட வாசகத்துக்கு ஒப்பனைக் கலைஞர் வண்ணம் தீட்டுவதையும் காணலாம்.

# சீமானின் பிணை மனு தள்ளுபடி 11ஆம் திகதிவரை தடுப்புக்காவல்

## ஈரோடு நீதிமன்று உத்தரவு



புலிகளுக்கு ஆதரவாகப் பேசினர் எனக் கூறி சிறையிலடைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் ஆதரவு அக்கினிப் புயல் சீமான், கொளத்தூர் மணி மற்றும் மணியரசன் ஆகியோரின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டு, அவர்களை 11ஆம் திகதி வரை காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோதே ஈரோடு நீதிவான் இந்த உத்தரவை விடுத்தார்.

இதுகுறித்த முழுவிவரம் வருமாறு-

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பொதுக் கூட்டமொன்றில் பேசினர் என ஈழத் தமிழ் ஆதரவு அக்கினிப் புயல் சீமான், பெரியார் திராவிட கழக தலைவர் கொளத்தூர் மணி மற்றும் அந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த தமிழ்த் தேச பொதுவுடைமைக் கட்சி பொதுச்செயலாளர் மணியரசன் ஆகியோரை பொலிஸார் கைது செய்தார்கள்.

கடந்த 19 ஆம் திகதி இரவு இயக்குநர் சீமான், கொளத்தூர் மணி ஆகியோர் ஈரோடு மாஜிஸ்திரேட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். மணியரசன் 20 ஆம் திகதி ஆஜர்படுத்தப்பட்டார். 3 பேரையும் வருகின்ற 31 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்க மாஜிஸ்திரேட்டு அசோகன் உத்தரவிட்டார். பின்னர் அவர்கள் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

இந்தநிலையில் சீமான், கொளத்தூர் மணி, மணியரசன் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி பா.பா.மோகன் ஈரோடு மாஜிஸ்திரேட்டு முதலாவது நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார். அதில் சீமான், கொளத்தூர் மணி, மணியரசன் ஆகியோருக்கு பிணை கேட்டிருந்தார்.

இந்நிலையில் மனுவை விசாரித்த நீதிபதிகள் பிணை கோரிய மனுவைத் தள்ளுபடி செய்தனர். 31.12.2008 அன்று இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரித்த ஈரோடு நீதிவான், சீமான் மற்றும் கொளத்தூர் மணியை 11ஆம் திகதி வரை காவலில் வைக்க உத்தரவிட்டார்.

# தனித்தன்மையை இழந்துவரும் தமிழர்

தமிழர்களுக்கென்று இருந்து வரும் தனித்தன்மையை அரசியல்வாதிகளும், ஆட்சியாளர்களும் சீர்குலைத்து வருகின்றனர் என்ற கருத்துப்பட 'தினமணி' நாளேட்டில் கட்டுரை ஒன்று வெளியானது. அதை இங்கு தருகிறோம்.

தமிழர்களுக்கென்று ஆண்டாண்டு கால மாக இருந்து வரும் தனித்தன்மையை அரசியல்வாதிகளும், ஆட்சியாளர்களும் கொஞ்சம், கொஞ்சமாக குலைத்து வருகின்றனரோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டு வருகிறது.

உழைப்பதற்கு எப்போதும் அஞ்சாதவர்கள் தமிழர்கள். தன்மானத்தைக் கட்டிக் காத்து வருபவர்கள். சுய மரியாதையைக் காப்பாற்றுவதற்காக பல்வேறு பதவிகளை விட்டு துச்சமெனக் கருதி வெளியேறும் தன்மை உடையவர்கள்.

அப்படிப்பட்ட தமிழனை இப்போது அரசியல்வாதிகளும், ஆட்சியாளர்களும் மெல்ல, மெல்ல மாற்றுப் பாதையை நோக்கி திசை திருப்பி வருகிறார்கள் என்பதுதான் வேதனை.

பசி எடுப்பவருக்கு சோறு கொடுக்காதே

அதற்குப் பதிலாக நெல் விதைகளைக் கொடு

அந்த விதைகளைக் கொண்டு அவன் உழைத்துச் சோறாக்கிச் சாப்பிடட்டும் என்பது தான் முன்னோர் மொழி.

ஆனால், இன்றோ நிலைமை தலைகீழ். பசி எடுப்பதற்கு முன்பே அவருக்குச் சாப்பாடு கொடு என்பதுதான் இன்றைய சூழல். அதன் விளைவு உழைக்காமல் வாழலாம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிறான் தமிழன்.

தமிழக அரசின் இலவச அறிவிப்புகள் இது போன்ற நிலைக்கு இன்றைய தமிழனைத் தள்ளி வருகின்றன. ஒரு ரூபா அரிசித் திட்டம் மக்களில் பலரை சோம்பேறியாக்கி வருகிறது என்றால் அது பொய்யில்லை.

மாதத்திற்கு பல நாள்கள் வேலைக்கு சென்று வந்த அடித்தட்டு பொதுமக்கள் தற்போது சில நாள்கள் மட்டுமே வேலைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் 20 கிலோ அரிசியை 20 ரூபாவுக்கு வாங்க முடிகிறது.

பலசரக்கு, காய்கறிகளை மனைவியின் உழைப்பில் வாங்கிக் கொள்ளலாம் என்ற எண்ணம் தோன்றுகிறது.

விளைவு, சோம்பேறித்தனம் தொற்றிக் கொள்கிறது. இதனால் ஏற்படும் மிகப் பெரிய பிரச்சினை விவசாயம் உள்ளிட்ட கூலி வேலைகளுக்கு ஆள் கிடைக்காதமைதான்.

இதுவே இப்படி என்றால் அடுத்து அரசு அறிவித்துள்ள பொங்கலுக்கு இலவசப் பொருள்கள் திட்டம். இது மேலும் தமிழனின் தனித்தன்மையைக் குலைக்கும் மற்றொரு திட்டம் என்பதுதான் வேதனை.

நெற்றி வியர்வை நிலத்தில் விழ இரவு பகல் பாராது பாடுபட்டு உழைத்து, அந்த உழைப்பில் வந்த நெல்மணிகளை மகிழ்ச்சியுடன் வீடு சேர்க்கும் விவசாயி அதனை கொண்டாடும் வகையிலும், தனக்கு விவசாயப் பணிகளில் துணையாக இருந்த கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும் கொண்டாடப்படுவதே பொங்கல் பண்டிகை.

இப்படி தனது உழைப்பின் மூலம் வந்த சந்தோஷத்தை பகிர்ந்து கொள்வதற்காக உருவான பொங்கலில் கூட இலவசத் திட்டத்தை அரசு அறிவித்துள்ளமை எதற்காக? இன்றும் கூட கிராமப்புற விவசாயிகள் தமது நிலத்தில் விளைந்த நெல், மஞ்சள், கரும்பு, வாழையைக் கொண்டுதான் பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

எனவே, வாக்குகளை மட்டும் எண்ணி அரசு இலவசத் திட்டங்களை அறிவிக்காமல் அதனையும் தாண்டி தமிழருக்கு என்று தரணியிலுள்ள மாண்பினையும் காப்பாற்ற ஆட்சியாளர்கள் முயலவேண்டும் என்பதே தமிழர்களின் எண்ணம்.

# தீயிலிட்ட கம்பியால் தமிழக மீனவர்களை சுட்டு சித்திரவதைப்படுத்தியது இலங்கைக் கடற்படை

## மீனவர் தெரிவிப்பு

இராமேஸ்வரம், ஜன. 02

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற நாட்டுப் படகு மீனவர்களை இலங்கைக் கடற்படையினர், நிர்வாணப்படுத்தி தடிகளால் தாக்கி, தீயிலிட்ட இரும்புக் கம்பியால் சூடு போட்டனர் என்றும், பின்னர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி மீனவர்களிடமிருந்த கையடக்கத் தொலைபேசிகள், ஆறு ஜி.பி.எஸ். கருவிகள் மற்றும் ஐந்து லட்சம் ரூபா மதிப்புள்ள மீன்களையும் பறித்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கப்பட்டிருப்பவை வருமாறு-

சங்குமால் கடற்கரையிலிருந்து கடந்த 100க்கும் மேற்பட்ட நாட்டுப் படகுகள் மீன்பிடிக்கச் சென்றன. மாலை 6 மணிக்கு கச்சத்தீவுக் கடற் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, எட்டு விரைவுப் படகில் வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை நிர்வாணமாக்கி, தடிகளால் தாக்கினர். தீயிலிட்ட இரும்புக் கம்பியால் சூடு போட்டனர்.



துப்பாக்கியைக் காட்டி மிரட்டி மீனவர்களிடமிருந்த கையடக்கத் தொலைபேசிகள், ஆறு ஜி.பி.எஸ். கருவிகள் மற்றும் ஐந்து லட்சம் ரூபா மதிப்புள்ள மீன்களையும் பறித்துச் சென்றனர். உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் மீனவர்கள் அனைவரும் நேற்றுமுன்தினம் அதிகாலையில் கரை திரும்பினர்.

மீனவர் பெனிட்டோ என்பவர் கூறுகையில்,

"துப்பாக்கியை நெஞ்சில் வைத்து தலையைத் துணியினால் மூடி நிர்வாணப்படுத்திய கடற்படையினர், தீக் கம்பியால் தொடர்ந்தும் சூடு வைத்தனர்" - என்றார்.

தேவசகாயம் என்பவர் கூறுகையில்,

"படகில் ஏறிய இலங்கைக் கடற்படையினர் எதுவும் விசாரிக்காமல் கயிற்றால் தாக்கினர். மீனவர் ஒருவரின் சட்டைப் பையில் இருந்த பல ஆயிரம் ரூபா, படகில் இருந்த சட்டை, லுங்கி, பாத்திரங்கள் உட்பட அனைத்தையும் எடுத்துச் சென்றனர். நாட்டுப் படகு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் இதுபோன்ற [illegible] நடத்தியமை இதுதான் [illegible]" - என்றார்.

# சென்னையில் உலகத் தமிழர் மாநாடு எதிர்வரும் 6ஆம் திகதி தொடக்கம்

சென்னை, ஜன. 02

சென்னை வளர்ச்சிக் கழகம் சார்பில் உலகத் தமிழர் பொருளாதார மாநாடு மற்றும் புலம் பெயர்ந்த தமிழர் சந்திப்பு ஜனவரி 6ஆம் திகதி சென்னையில் தொடங்குகிறது.

இதுகுறித்து சென்னை வளர்ச்சிக் கழக தலைவர் சம்பத் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் விவரம் வருமாறு-

உலகம் முழுவதும் வாழும் தமிழர்களை ஒன்றுசேர்த்து பொருளாதார விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதே மாநாட்டின் நோக்கம். 2006இல் ஆஸ்திரேலியாவில் மாநாட்டை நடத்த முடியாமல் போனது. தற்போது வெளிநாட்டு இந்தியர் சந்திப்புக் கூட்டத்தை சென்னையில் ஜனவரி 8, 9ஆம் திகதியில் மத்திய அரசு நடத்துகிறது. அதற்காக வரும் வெளிநாட்டு தமிழர்கள் கலந்து கொள்வதற்கு வசதியாக ஜனவரி 6, 7ஆம் திகதிகளில் மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

முதன்முதலாக நடத்தப்படும் மாநாட்டை நிதி அமைச்சர் அன்பழகன் தொடங்கி வைக்கிறார். பல துறைகளில் சாதனை படைத்த வெளிநாட்டுத் தமிழர்கள் 15 பேருக்கு விருது வழங்கப்படுகிறது - என்றார்.

வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழக வேந்தர் விஸ்வநாதன் கூறுகையில்:-

இங்கிருந்து வெளிநாடு சென்ற தமிழர்கள் பல வெற்றிகளைப் பெற்றுள்ளனர். அவர்களை ஒருங்கிணைத்து தமிழக முன்னேற்றத்துக்காக என்ன செய்யப் போகிறீர்கள் என்பது குறித்து கலந்து பேசப்படும். இந்திய பொருளாதாரம் வளர்ந்து வருகிறது. அதில் முன்னணி மாவட்டமாக தமிழகம் [illegible] வளர்ச்சியடையச் செய்ய வணிகர்களுடன் அவர்கள் இணைந்து [illegible] - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009இல் அசத்தப்போவது யார்?

மும்பை, ஜன. 02

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஏப்ரல், மே மாதங்களில் நடக்கிறது. இதற்கான புதிய வீரர்களின் ஏலமும், ஒரு அணியில் இருந்து வேறு அணிக்கு வீரர்களை எடுக்கும் ஏலமும் பெப்ரவரியில் நடக்கிறது.

கர்நாடகாவை சேர்ந்த ரொபின் உத்தப்பா மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். அவரை சொந்த ஊர் அணியான பெங்களூர் ரோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணிக்கு ஏலம் எடுக்க அதன் உரிமையாளர் விஜய் மல்லையா முடிவு செய்துள்ளார்.

உத்தப்பா கடந்த ஐ.பி.எல். போட்டியில் 14 ஆட்டங்களில் 320 ஓட்டங்களை எடுத்தார். இதே போல பெங்களூர் அணியில் இடம் பெற்று இருக்கும் சகீர்கான், மற்றும் ஐதராபாத் அணியை சேர்ந்த ரோகித் சர்மா ஆகியோரை எடுக்க மும்பை அணி முடிவு செய்துள்ளது.

கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக உலக கிரிக்கெட்டில் அசைக்கமுடியாமல் தன்னிகரற்று விளங்கிவந்த அவுஸ்திரேலியா தொடர் தோல்விகளைச் சந்தித்து வருகிறது. 2008இல் அவுஸ்திரேலியா தான் விளையாடிய 14 ஆட்டங்களில் 5இல் வெற்றியையும், 5இல் தோல்வியையும் சந்தித்துள்ளது.

அதேசமயம், 2008இல் தென்னாபிரிக்கா தான் விளையாடிய 15 ஆட்டங்களில் 11இல் வெற்றியையும், 2இல் மட்டுமே தோல்வியையும் பெற்றுள்ளது. இந்தியா 2008இல் தான் விளையாடிய 15 ஆட்டங்களில் 6இல் வெற்றியையும், 4இல் தோல்வியையும் தழுவியுள்ளது.

இந்நிலையில், 2009இல் உலக கிரிக்கெட்டில் ஆதிக்கம் செலுத்தப் போவது யார் என்ற ஆர்வம் கிரிக்கெட் ரசிகர்களிடையே எழுந்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் தூணாக விளங்கி வந்த மெக்ராத், ஷேன் வோர்ண், லாங்கர், அடம் கில்கிறிஸ்ட் ஆகியோர் அடுத்தடுத்து ஓய்வுபெறவே அவுஸ்திரேலியா ஆட்டம் கண்டுவிட்டது. அனுபவ வீரர்களில் ரிக்கி பொண்டிங் மட்டுமே சிறப்பாக விளையாடி வருகிறார். பந்துவீச்சு முன்னர் போல எதிரணியை சாய்க்கும் அளவுக்கு இல்லாமல் போனதே அவுஸ்திரேலியாவுக்கு பலவீனமாகியுள்ளது.

அதேசமயம், இந்த ஆண்டில் தென்னாபிரிக்காவின் கிரேம் ஸ்மித் (1656 ஓட்டங்கள்), ஹஷிம் ஆம்லா (1,161), நீல் மெக்கென்சி (1,073), ஆபிரஹாம் டி வில்லியர்ஸ் (1,061) ஆகியோர் அபாரமாக விளையாடி வருகின்றனர். அதேபோல, இந்தியாவின் ஷேவாக் (1462), கம்பீர் (1,134), லட்சுமண் (1,086), டெண்டுல்கர் (1,063) ஆகியோரும் ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்துள்ளனர்.

எனினும், பந்துவீச்சில் தென்னாபிரிக்காவின் கையே ஓங்கியுள்ளது. ஸ்ரெய்ன் (2008இல் 74 விக்கெட்) முதலிடத்திலும், மக்காயா நிற்னி 6ஆவது இடத்திலும் (54 விக்.), மோர்கெல் 9ஆவது இடத்திலும் (43) உள்ளனர்.

இந்தியத் தரப்பில் ஹர்பஜன் 3ஆவது இடத்தில் (63 விக்.) உள்ளார். சாகீர்கான் 27ஆவது இடத்திலும், இஷாந்த் 38ஆவது இடத்திலும் உள்ளனர். 2008இல் உள்ளூரில் இந்தியா 66.67 சதவீத வெற்றியையும் (9:4), தென்னாபிரிக்கா 100 சதவீத (4:4) வெற்றியையும் பதிவு செய்துள்ளன. வெளிநாட்டில் இந்தியா 41.67 சதவீத வெற்றியையும் (6:2), தென்னாபிரிக்கா 72.73 சதவீத வெற்றியையும் (11:7) பதிவுசெய்துள்ளன. 2009இல் தென்னாபிரிக்காவை இந்தியா முந்த வேண்டுமானால் வெளிநாட்டு வெற்றிகளை அதிகப் படுத்தவேண்டும்.

துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை, தென்னாபிரிக்காவை விட இந்தியா சற்று வலுவானதாகவே இருக்கிறது. தென்னாபிரிக்காவின் கலிஸ் தவிர கிரேம் ஸ்மித், நீல் மெக்கென்சி, ஹஷிம் அம்லா, டுமினி ஆகியோர் அனுபவம் குறைவானவர்களாகவே உள்ளனர்.

அதேசமயம், இந்தியத் தரப்பில் சச்சின், டிராவிட், லட்சுமண், கம்பீர், ஷேவாக், டோனி உட்பட அனைவருமே சிறப்பாக விளையாடக் கூடியவர்கள்.

# ஒய்வாக இருந்த காலப்பகுதியில் பொறுமையை கற்றுக்கொண்டேன்

## சானியா சொல்கிறார்



ஐதராபாத், ஜன. 02

காயத்தால் அவதிப்பட்டு ஓய்வெடுத்த காலங்களில் பொறுமையாக இருக்க கற்றுக்கொண்டேன் என்று இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா கூறினார்.

இந்திய நட்சத்திர டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சாவுக்கு 2008ஆம் ஆண்டு மகிழ்ச்சியாக அமையவில்லை. ஆண்டு தொடக்கத்தில் தரவரிசையில் 32ஆவது இடத்தில் இருந்த சானியா இறுதியில் 101ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

பீஜிங்கில் ஓகஸ்ட் மாதம் நடந்த ஒலிம்பிக் போட்டியில் மணிக்கட்டு காயத்தால் அவர் பாதியிலேயே விலக நேரிட்டது. அதன் பிறகு எந்த சர்வதேச போட்டியிலும் அவர் பங்கேற்கவில்லை.

சில மாதங்கள் ஓய்வுக்கு பிறகு மீண்டும் கடும் பயிற்சியை தொடங்கிய சானியா, புதிய ஆண்டில் சாதிக்கும் கனவுடன் சர்வதேச போட்டிகளை எதிர்நோக்கியுள்ளார். இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

இப்போது நான் நல்ல உடல்தகுதியுடன் இருக்கிறேன். களத்தில் 2 அல்லது 3 மணிவரை என்னால் எளிதாக நிலைத்து நின்று ஆட முடியும். எனவே மீண்டும் களம் திரும்ப ஆர்வமாக இருக்கிறேன். என் மீது மிகுந்த எதிர்பார்ப்பு இல்லாததால் நெருக்கடியின்றி விளையாட முடியும் என்று நினைக்கிறேன்.

பொதுவாக நான் பொறுமையற்றவள். ஆனால் இப்போது நான் பொறுமையாக இருக்கக் கற்றுக்கொண்டேன். மணிக்கட்டு காயத்துக்கு பிறகு எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. தகுந்த டாக்டரை தேடுவது சிரமமாக இருந்தது. இது போன்ற சந்தர்ப்பங்களில் பொறுமையாக இருக்க கற்றுக் கொண்டேன். அந்த சமயத்தில் எனக்கு பிடித்தமான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியை கூட என்னால் பார்க்க முடியவில்லை. ஒலிம்பிக் போட்டிக்கு பிறகு யாரையும் பார்க்க விரும்பாததால் சுமார் 3 மாதங்கள் நான் வீட்டை விட்டு வெளியே செல்லவே இல்லை. வீட்டை விட்டு வெளியே செல்வதற்கு மனக்கஷ்டமாக இருந்தது.

ஆனால் இந்தச் சமயத்தில் கடந்த சில ஆண்டுகளாக செய்ய முடியாததை செய்ய முடிந்தது. 2 மாதங்கள் எனது படுக்கையில் நீண்ட நேரம் தூங்குவது, குடும்பத்தினருடன் அதிக நேரம் செலவழிப்பது, நண்பர்களுடன் அதிகாலை 4 மணிவரை அரட்டை அடிப்பது, போன்ற விடயங்களை செய்ய முடிந்தது. இதன் மூலம் மிகுந்த தன்னம்பிக்கை பெற்றவளாக மாறி இருக்கிறேன்.

தற்போது கடின பயிற்சியின் மூலம் உடல் தகுதியுடன் இருக்கிறேன். போட்டிக்கு திரும்ப ஆவலாக உள்ளேன். ஆனால் புத்தாண்டில் மீண்டும் காயமடைந்து விடக்கூடாது என்பதே எனது முதல் விருப்பமாகும். புதிய ஆட்டத்தை வெற்றியுடன் தொடங்க ஆசைப்படுகிறேன். - இவ்வாறு சானியா கூறியுள்ளார்.

உலக அரங்கில்

# ஆஸியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தியமை உலகக் கிண்ணத்தை வெல்வதற்குச் சமம்

## கலிஸ் கூறுகிறார்



மெல்போர்ன், ஜன.02

தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலிய மண்ணில் முதல் முறையாக டெஸ்ட் தொடரை கைப்பற்றி புதிய வரலாறு படைத்தது.


பெர்த்தில் நடந்த முதல் டெஸ்டில் 6 விக்கெட் வித்தியாசத்திலும் மெல்போர்னில் நடந்த 2ஆவது டெஸ்டில் 9 விக்கெட் வித்தியாசத்திலும் வென்றது. இரு அணிகள் மோதும் 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் சிட்னியில் வருகின்ற 3ஆம் திகதி தொடங்குகிறது.

அவுஸ்திரேலியாவை அதன் மண்ணில் வீழ்த்தியது உலக கோப்பையை வென்றதற்கு சமம் என்று தென்னாபிரிக்க சகலதுறை ஆட்டக்காரரான கலிஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியதை உலக கிண்ணத்தை வென்றது போல் உணருகிறேன். எனது கிரிக்கெட் வாழ்க்கையில் இது மிகவும் முக்கியமானது. தற்போதுள்ள இளம் வீரர்களுக்கு அவுஸ்திரேலிய ஆடுகளங்கள் சவாலாக இல்லை - இவ்வாறு அவர் கூறினார்.

# டோனிக்குக் கொலை மிரட்டல்!



புதுடில்லி, ஜன. 02

இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் டோனிக்கு தாவூத் இப்ராஹிம் கும்பலிடம் இருந்து மிரட்டல் வந்துள்ளது. ரூ.50 லட்சம் தராவிட்டால் அவரது வீடு தகர்க்கப்படும், என்று எச்சரித்து உள்ளனர். மூன்று நாளில் இரண்டு முறை மிரட்டல் கடிதம் வந்துள்ளதால் டோனிக்கு 'இசட்' பிரிவு பாதுகாப்பு அளிக்கப் பட்டுள்ளது. இவரது பாதுகாப்பு சம்பந்தமாக அவ்வப்போது பிரச்னைகள் ஏற்படுவதுண்டு. முதன் முதலாக நக்சலைட்டுகளிடம் இருந்து மிரட்டல் வந்தது. இதையடுத்து அவருக்கு கொமாண்டோ பாதுகாப்பு அளிக்கப்படும் என அரசு அறிவித்தது.

சமீபத்தில் சென்னை தேர்வுக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ராஞ்சி விமானநிலையத்திற்குப் பாதுகாப்புப் படைவீரர் ஒருவர் கூட இல்லாமல் டோனி வந்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்நிலையில் தனது பாதுகாப்புக்காக, டோனி தனிப்பட்ட முறையில் 0.9 மி.மீ., துப்பாக்கி வைத்துக்கொள்ள அனுமதி கேட்டு விண்ணப்பித்தார். இந்த விண்ணப்பம் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

இந்தச் சூழலில் ராஞ்சியில் இருக்கும் டோனியின் வீட்டிற்கு கடந்த 29ஆம் திகதி ஒரு மிரட்டல் கடிதம் வந்துள்ளது. அதில் ரூ.50 லட்சம் பணம் கொடுக்காவிட்டால் வீட்டை குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாக எழுதப்பட்டிருந்தது. இந்தக் கடிதத்தை டோனியின் குடும்பத்தினர் ராஞ்சி பொலிஸாரிடம் அளித்தனர். இதையடுத்து டோனியின் வீட்டிற்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. நேற்றுமுன்தினம் இரண்டாவது முறையாக மிரட்டல் கடிதம் டோனியின் வீட்டிற்கு வந்துள்ளது.


டோனிக்கு மிரட்டல் கடிதம் அனுப்பி இருக்கும் முகமது தஸ்லீம், என்பவர் தாவூத் இப்ராஹிமின் மும்பை கூட்டாளி எனச் சந்தேகிக்கப்படுகிறது. இது குறித்து பொலிஸ் அதிகாரி சம்பத் மீனா கூறுகையில், ''முகமது தஸ்லீமிடம் இருந்து மிரட்டல் கடிதம் வந்துள்ளது. தஸ்லீம் உள்ளூர் குற்றவாளி தான். கடந்த சில வாரங்களாக தஸ்லீம் இங்கு காணப்படவில்லை. தாவூத்துடன் தஸ்லீமுக்கு தொடர்பு இருக்கிறதா என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது,'' என்றார்.

ஜார்க்கண்ட் மாநிலத்தின் துணை முதல்வர் சுதிர் மகாத்தோ கூறுகையில், ''தற்போது டோனியைக் காப்பாற்ற வேண்டும். இதற்கு தஸ்லீமை கைதுசெய்வது தான் ஒரே வழி,'' என்றார். மத்திய அமைச்சர் ஸ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வால், டோனியின் பாதுகாப்பை ஜார்க்கண்ட் பொலிசார் உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

டோனியை மிரட்டி பணம் பறிக்க திட்டமிட்டுள்ளதைத் தொடர்ந்து அவருக்கு 'இசட்' பிரிவு பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. இதுவரை 'வை' பிரிவு பாதுகாப்பில் தான் இருந்தார். 'இசட்' பிரிவுக்கு மாறி யுள்ளதைத் தொடர்ந்து 45 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

இது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதான் கூறுகையில், ''பயங்கரவாத மிரட்டல் உள்ளவர்களுக்கு 'இசட்' பிரிவு பாதுகாப்பு வழங்கப்படும். இதற்கு இணையாக டோனிக்கும் பாதுகாப்பு கொடுத்து [illegible] பெண் பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருக்கிறது,'' என்றார்.

# பாக். சுற்றுப்பயணத்தில் பங்கேற்பதா? ஆலோசிக்கிறார் அன்ட்ரூ சைமண்ட்ஸ்



மெல்போர்ன், ஜன. 02

அடுத்த ஆண்டு பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தில் பங்கேற்பது குறித்து தாம் தீவிரமாக ஆலோசித்து வருகிறார் என அவுஸ்திரேலிய அணியின் சலகதுறை ஆட்டக்காரரான ஆண்ட்ரூ சைமண்ட்ஸ் தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய அணிக்கும் இந்திய அணிக்கும் இடையே தற்போது நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடந்து வருகிறது. இரு அணிகளுக்கு இடையே நடைபெற்ற முதல் டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

அடுத்ததாக சிட்னி, பிரிஸ்பேன் மற்றும் பெர்த் ஆகிய நகரங்களில் மற்ற மூன்று போட்டிகள் நடக்கவிருக்கின்றன. இதனைத் தொடர்ந்து முத்தரப்பு ஒரு நாள் தொடர் நடக்கவிருக்கின்றன. இதில் மூன்றாவது அணியாக நியூஸிலாந்து அணி கலந்துகொள்கிறது. இந்தத் தொடர் முடிந்ததும் அவுஸ்திரேலிய அணி அடுத்த ஆண்டு மார்ச் மாதம் அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் தலைமையில் பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து அந்த அணிக்கு எதிராக விளையாடவிருக்கிறது.

அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தானுக்கு எதிராக மூன்று டெஸ்ட்டுகள், ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் கலந்து கொள்ள திட்டமிடப்பட்டது. பின்னர் ருவெண்ரி 20 போட்டி ஒன்றிலும் விளையாடவிருக்கிறது.

பாகிஸ்தான் சுற்றுப் பயணம் குறித்து அவுஸ்திரேலிய சகலதுறை வீரர் ஆண்ட்ரூ சைமண்ட்சிடம் கேட்டபோது, அந்நாட்டு சுற்றுப் பயணம் குறித்து தீவிரமாக பரிசீலித்து வருகிறேன் என்றார். அங்கு அபாயகரமான சூழ்நிலை நிலவுகிறது. மக்கள் கொல்லப்படுகிறார்கள். காயப்படுத்தப்படுகிறார்கள். எனவே அங்கு செல்ல எனக்கு ஆர்வம் ஏற்படவில்லை. இது குறித்து தீவிரமாக பரிசீலித்து வருகிறேன் என்றும் அவர் கூறினார்.

அவுஸ்திரேலியாவின் முன்னணி சகலதுறை ஆட்டக்காரர் அன்ட்ரூ சைமன்ஸ் முக்கிய நகரமான மெல்போர்னிலிருந்து வெளிவரும் 'டெய்லி டெலிகிராப்' என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்து இருக்கிறார்.

''ஒரு நாள் இந்தப் பயணம் குறித்து நான் நன்றாக ஆலோசித்தேன், கிரிக்கெட் விளையாடுவது எனக்கு பிடித்தமானது. அவுஸ்திரேலியாவுக்கு நான் விளையாட விரும்புகிறேன். ஆனால் கிரிக்கெட் என்ற பெயரால் ஆபத்தை விலைகொடுத்து வாங்க நான் தயாராக இல்லை'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த ஆண்டில் போர் முடிவுக்கு வரும் சாத்தியமில்லை; புலிகளின் வல்லமைகள் இரண்டினை அரசால் முறியடிக்க முடியாது

## சமாதானப் பேரவையின் ஜெகான் பெரேரா சொல்கிறார்



கொழும்பு, ஜன.2

இந்த வருடத்தை அரசாங்கம், போர்வெற்றி ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ள போதிலும் அது சாத்தியம் இல்லை என்றே நான் கருதுகிறேன்.

அரசாங்கம் மரபுவழிப் போரில் விடுதலைப் புலிகளை ஒடுக்கினாலும், கெரில்லா கரந்தடிப் போர் வல்லமை மற்றும் பயங்கரவாதத் தாக்குதல் வல்லமை ஆகிய இரண்டு பரிமாணங்களிலும் அவர்களை முறியடிக்க இயலாது.

இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார் சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா.

இணையத் தளம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

இந்த ஆண்டில்-2009 ஆம் ஆண்டில்-யுத்தம் முடிவிற்கு வரும் என நிச்சயமாக நான் கருதவில்லை. இதற்கு காரணமாக விடுதலைப்புலிகளின் முப்பரிமாணங்களை என்னால் எடுத்துரைக்கமுடியும். விடுதலைப் புலிகளுக்கு மரபுப்போரை முன்னெடுக்கின்ற பரிமாணம் இருப்பது அதிலொன்றாகும். அதிலே தரை, கடல், ஆகாயப் படைப்பிரிவுகள் உள்ளடங்கியுள்ளன. இரண்டாவதாக அவர்களிடம் கெரில்லா கரந்தடிப்பரிமாணம் உள்ளது. மூன்றாவதாக அவர்களிடம் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தும் பரிமாணம் காணப்படுகின்றது. தற்போதைய நிலையில் இலங்கை அர சாங்கம் அதிஉச்சபட்ச விலையைக் கொடுத்து இராணுவத்தை உள்ளே அனுப்பி விடுதலைப் புலிகளுடைய மரபுபடை பரிமாணத்தின் மீதே கவனத்தைச்செலுத்தி செயற்பட்டு வருகின்றது.

அரசதரப்பு செய்திகளின் படி அரச படைகள் முன்னேறி நிலப்பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து கொண்டிருப்பதாகவும் விடுதலைப்புலிகள் இயக்கத்தவர்களை கணிசமான அளவு கொன்று குவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அண்மைய மோதல்களில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்களை விடவும் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் மிகவும் அதிகமாகும் என எனக்கு கிடைத்த தகவல்கள் மூலம் அறிந்து கொண்டேன். இருந்தபோதிலும் எமக்கு காணக்கிடைப்பவை மற்றும் வாசிக்க கிடைப்பவை மூலம் அன்றேல் கூறப்படுபவையை எடுத்துப்பார்க்கின்றபோது இராணுவம் உண்மையிலேயே முன்னேறிச்செல்வதாகவே அறியமுடிகின்றது.

**ஆயுதபலம் இன்னும் உறுதியாகவே இருக்கிறது**

விடுதலைப்புலிகளின் மரபுபோர்ப்பரிமாணத்தைப்பார்க்கின்றபோது அதன் ஆயுத பலம் இன்னமும் உறுதியாக இருப்பது உண்மைதான். இதுவரையில் விடுதலைப் புலிகளது விமானங்கள் ஏதும் அழிக்கப்பட்டது தொடர்பாக நாம் எதையும் கேட்கவில்லை. அன்றேல் அவர்களது ஆட்டிலறி ஏவுகுழல் கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டமை தொடர்பாக நாம் அறியவுமில்லை. அதைப் பார்க்கவு மில்லை. எமக்கு அவ் வாறான அழிப்பு புகைப் படங்கள் காண்பிக் கப்படவுமில்லை.

அந்த வகையில் விடுதலைப் புலிக ளின் ஆயுதபலம் தொடர்ந்துமிருக்கின்ற போதிலும் இராணு வத்தினர் முன்னோக்கிச் செல்லுகின்றபோது விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டிலுள்ள நிலப்பகுதி குறைவடைந்து செல்கின்ற போது விடுதலைப்புலிகள் வசமுள்ள ஏனைய பகுதிகளும் இராணுவத்தினரின் சூட்டெல்லைக்குள் வந்துவிடக் கூடிய அபாயநிலை காணப்படுகின்றது. இதன் பின்னர் இராணுவத்தினர் விடுத லைப் புலிகளிலும் அதிக சூட்டாதரவுப்பலத்தை கொண்டுள்ள இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் மீது முழுவீச்சுத்தாக்குதலால் அவர்படி யான கட்டத்தில் பொதுமக்களுக்கு அதிகப்படியான இழப்புக்கள் ஏற்படக் கூடும். தற்போதைய நிலையில் பொதுமக்களுக்கு இழப்புக்கள் ஏற்படுகின்றபோதும் அது குறைவாகக் காணப்படுகின்றது.

**புலிகளின் கெரில்லாத் தாக்குதல் வல்லமையை அரசினால் முறியடிக்க முடியாது**

ஆனால் அது எதிர்காலத்தில் மாற்றமடையலாம். ஆனால் அரசாங்கத்திற்கு உள்ள பிரச்சினையாதென்றால் விடுதலைப் புலிகளது மரபுப்படைப்பலத்தை முறியடிக்க முடிந்தாலும் விடுதலைப்புலிகளின் கெரில்லா மற்றும் பயங்கரவாத தாக்குதல் வல்லமையை முறியடிக்கும் சாத்தியம் காணப்படவில்லை. கொழும்பு போன்ற பகுதிகளுக்கு வந்து குண்டுத்தாக்குதல்களை நடத்துவது அன்றேல் அநுராதபுர வான்படைத்தளத்திற்குள் நுழைந்து அழித்தொழிப்பு தாக்குதலை நடத்தியது போன்ற புலிகளின் வல்லமையை அரசாங்கத்தினால் ஒழித்துவிடமுடியாது. விடுதலைப் புலிகள் மரபுபடைப்பலத்தை முறியடித்துவிட்டால் அவர்களது ஏனைய வல்லமைகள் சீர்குலைந்து வீழ்ச்சிகாணும் என அரசாங்கம் கணக்குப்போட்டுள்ளது. ஆனால் அது நடைபெறும் சாத்தியம்காணப்படவில்லை. 1988-89 காலப்பகுதியில் ஜே.வி.பி. கிளர்ச்சியை முன்னுதாரணமாக கொள்ள அரசாங்கம் விழைகின்றது. ஜே.வி.பியின் தலைமைத்துவத்தை இல்லாமல் செய்ததன் மூலமாக ஜே.வி.பியின் கிளர்ச்சிக் கட்டமைப்பு துரிதகதியில் வீழ்ச்சி கண்டது. ஆனால் விடுதலைப் புலிகளுக்கும் அதற்கும் பாரிய வித்தியாசம் காணப்படுகின்றது. விடுதலைப் புலிகளுக்கு நீண்ட வரலாறு காணப்படுகின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பு என்ற வகையில் முப்பது ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாறு உள்ளது. அதனைத் தவிர மிகவும் பலம் வாய்ந்த நிர்வாகக் கட்டமைப்பை அது ஏற்படுத்திச் செயற்பட்டு வருகின்றது.

அதற்குப் பின்னணியில் தேசாப்தங்களுக்கும் மேலான தமிழ் இன உணர்வு சிந்தனைகள் தேசியவாதம் என்பன விடுதலைப் புலிகளுக்கு பலம் சேர்த்துநிற்கின்றன. இது ஓர் இனத்தின் பிரச்சினை என்ற வகையில் அடி முதல் நுனிவரை அனைத்துத்தரப்பு தமிழ் சமூகமும் விடுதலைப் புலிக ளின் தேசிய வாதத்திற்கும் உரிமைப் போராட்டத்திற்கும் ஆதரவாக உள்ளன. அந்த வகையில் ஜே.வி.பிக்கு ஏற்பட்ட கதி விடுதலைப் புலிகளுக்கும் ஏற்படும் என நான் கருதவில்லை. விடுதலைப் புலிகள் கெரில்லா அமைப்பு என்ற வகையில் சின்னாபின்னமாகிவிடும் சாத்தியம் இல்லை என்றே கூறவேண்டும். வெறுமனே நிலப் பிரதேசங்களை கைப்பற்றுவதனூடாக விடுதலைப் புலிகளை முழுமையாக தோற்கடித்துவிடமுடியாது. அந்த வகையில் யுத்தம் தொடர்ந்தும் முன் செல்லப் போகின்றது என்றே நான் கருதுகின்றேன். புதுவருடத்தில் அதற்கு ஒரு முடிவு வரும் என நான் கருதவில்லை -என்றார்.

(அ)

## மரக்கறி வகைகளின் சந்தை விலைகள் (நேற்றையது)

| மரக்கறி வகைகள் 1-கி.கிராம் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | குடாநாட்டின் பிரதான சந்தைகள் | | | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 550 | 450 | 350 | 500 |
| உருளைக்கிழங்கு | 350 | 250 | 260 | 300 |
| ப.மிளகாய் | 1200 | 1000 | 1000 | 1000 |
| தக்காளி | 600 | 500 | 300 | 400 |
| அவரை | - | - | - | - |
| மரவள்ளி | 90 | 70 | 80 | 70 |
| கோவா | 150 | 130 | 180 | 150 |
| கரட் | 200 | 160 | 180 | 180 |
| பூசணி | 120 | 80 | 90 | 100 |
| புடோல் | 200 | 180 | 140 | 200 |
| வாழைக்காய் | 150 | 120 | 140 | 140 |
| பீற்றூட் | - | - | - | - |
| சி.வெங்காயம் | 150 | 100 | 120 | 140 |
| பெ. வெங்காயம் | - | - | - | - |
| பாகற்காய் | 300 | 250 | 250 | 350 |
| வெண்டிக்காய் | 150 | 100 | 160 | 200 |
| கருணைக்கிழங்கு | 80 | 40 | 60 | 80 |
| பயிற்றங்காய் | 300 | 270 | 280 | 260 |
| லீட்ஸ் | 300 | 280 | 240 | 320 |
| தேங்காய் (ஒன்று) | 30-40 | 25-40 | 30-40 | 25-40 |

(உதவி: HNB ASSURANCE)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்கள் வெளிக்கொணர்ந்துள்ளன.

ஆனால், இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, இந்த தாக்குதல்கள் நடைபெறவில்லையென முற்றாக மறுத்திருக்கின்றார். இந்த மறுப்பு வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது போன்றது ஆகும். இலங்கை விமானப் படை குண்டு வீசவில்லையென்றால் இந்த விமானக் குண்டு வீச்சுத்தாக்குதல்களை நடத்தியது யார்? வேறு ஏதாவது கிரகத்திலிருந்து வந்த மனிதர்களா? என்ற கேள்வி எழுகின்றது.

**அரசு மூடிமறைக்க முயல்கிறது**

பொது மக்களுக்கு பாதகம் இல்லாமல் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுப்பதனால் தான் எமது படைகள் கிளிநொச்சி நோக்கி மெதுவாக ஊர்ந்து செல்ல வேண்டியிருக்கின்றது என்று அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தமது வழக்கமான பாணியில் சில நாள்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

அத்துடன், பொதுமக்களுக்கு எந்தவித தீங்கும் ஏற்படாமல் இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கண்டிப்பான உத்தரவினை வழங்கியிருப்பதாகவும் அமைச்சர் மேலும் கூறியிருந்தார். இந்த சூழ்நிலையில் தான் தொடரும் குண்டு வீச்சுக்களாலும் எறிகணை தாக்குதல்களினாலும் தினமும் வன்னியில் உள்ள தமிழ் மக்கள் பாதிக்கப்படுவதை அரசாங்கம் மூடிமறைக்கப்பார்க்கின்றது.

தனது சொந்த நாட்டின் மக்களின் மீது விமானக் குண்டுத் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருக்கும் அரசாங்கம் எதுவித வெட்கமுமின்றி பலஸ்தீனத்தின் காஸா பிரதேசத் தின் மீது இஸ்ரேலிய அரசாங்கம் கடந்த சில தினங்களாக நடத்தி வந்திருக்கும் விமானக் குண்டு வீச்சுக்களை கடுமையாக கண்டித்திருக்கின்றது. இந்த நிலையில் இஸ்ரேலிய அரசாங்கத்தை கண்டிப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு என்ன அருகதை இருக்கின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசாங்கப் படைகள் மோதுவது என்பது ஒருவிடயம். ஆனால், அந்த மோதலில் அரசாங்கப் படைகளினால் போரில் சம்பந்தப்பட்டிருக்காத தமிழ் மக்கள் எவ்வித தயவு தாட்சண்யமுமின்றி கொல்லப்படுவது என்பது வேறுவிடயம். இதுவொரு மனித உரிமை பிரச்சினை.

பலஸ்தீனத்தின் காஸா பிரதேசத்தில் இஸ்ரேலின் விமான குண்டு வீச்சுகளினால் கொல்லப்பட்டிருக்கும் பலஸ்தீனியருக்காக குரல் எழுப்பியுள்ள நாடுகளின் கண்களுக்கு இலங்கையின் வன்னிப் பிரதேசத்தில் அப்பாவி தமிழ் மக்களுக்கு நடப்பது தெரியவில்லையா? - என்று கேட்டார்.

(அ)

## பாகிஸ்தான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லையை அறிவித்துள்ளது. எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்கு முன்னதாக கிளிநொச்சியை கைப்பற்றப்போவதாகவும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கைது செய்யப் போவதாகவும் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஆனால், பொருளாதார தளம்பல் அரசாங்கம் நடத்தும் புலிகளுக்கு எதிரான போரில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. முக்கியமான உற்பத்தி நிறுவனங்கள் பல வீழ்ச்சியடையும் கட்டத்தை அடைந்துவிட்டன. தனியார் வங்கிகளும் பாரிய நெருக்கடிகளை சந்தித்துள்ளன.

வைப்பில் இடப்பட்ட பணத்தை வாடிக்கையாளர்கள் பெருமளவில் மீள எடுத்து வருவதும், கடன் மற்றும் கடன் அட்டைகளுக்கான மீள செலுத்தும் தொகைகளை வாடிக்கையாளர்கள் செலுத்த தவறுவதும் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. இதனால் நாட்டின் பொருளாதார கட்டமைப்பு தகர்ந்து போகும் அச்சம் ஏற்பட்டுள்ளது. பங்குச்சந்தையும் இந்த வருடத்தில் 41.1 வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மகிந்த தலைமையில் கூடிய அவசர கூட்டத்தில் நிதி நெருக்கடிகளை சமாளிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. நிதி நெருக்கடி அடுத்த சில மாதங்களில் அரசின் கைகளை மீறிவிடும் என தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய பெரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வன்னியில் மகிந்த அரசாங்கம் மேற்கொண்டு வரும் படை நடவடிக்கை பாகிஸ்தானின் ஆயுத உதவியில் தங்கியுள்ளது. பாகிஸ்தான் வன்னி நடவடிக்கைகளுக்கு தேவையான ஆயுதங்களையும் ஏனைய படைத்துறை உபகரணங்களையும் வழங்கி வருகின்றது.

**விடுதலைப்புலிகள் போரை கைவிடமாட்டார்கள்**

அரசாங்கத்துக்கு தேவையான ஏனைய உதவிகளை இந்தியா வழங்கி வருகின்றது. கிளிநொச்சி நகர் வீழ்ச்சி கண்டாலும் தொடர்ந்து போராடுவோம் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். எனவே அவர்கள் போராட்டத்தை கைவிடப் போவதில்லை.

ஆனால், உலகம் பாரிய பொருளாதார அழுத்தங்களை சந்திக்கும் போது சிறிலங்கா அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் மறைந்து போகலாம்.

அரசாங்கத்திற்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதில் ஆர்வம் இல்லை. அது விடுதலைப் புலிகளை தடை செய்வதற்கு முயற்சித்து வருகின்றது. ஆனால், தடை செய்தாலோ அல்லது செய்யா விட்டாலோ போர் தொடரும் என்பது நிச்சயம். ஆனால் போர் தொடரும் சந்தர்ப்பத்தில் மகிந்தவிற்கும் அவரது சகோதரர்களுக்கும் அதிக நிதி தேவை.

சுயாதீன ஊடகங்களில் பல, அரசாங்கத்தின் அழுத்தங்களுக்கு உட்படுவதால் புதிய வருடத்தில் சிறிலங்கா மக்கள் முற்று முழுதாகவே பேச்சு உரிமைகளை இழந்தவர்களாகி விடுவார்கள்- என்று தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம்

(இளைப்பாறிய தபால் ஊழியர்)

நாவற்காடு, வரணியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம் நேற்று(01.01.2009)வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் தேவராணி, தேவதாஸ், தேவகுமாரி(ஆசிரியை, குடமியன் அ.மி.த.க. பாடசாலை), தேவரதி(ஆசிரியை, வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை), தேவகுமார் ஆகியோரின் தந்தையும் நித்தியானந்தன், நவரத்தினம், தஜிதா, நாகேந்திரராசா, ஜெயகலா(ஆசிரியை, கிளிநொச்சி கண்டாவளை ம.வி.) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.01.2009)வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குடமியன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாவற்காடு, வரணி. ம.தேவதாஸ்(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலித்தடை குறித்து அரசு இதுவரை முடிவு இல்லை

கொழும்பு, ஜன. 02

புலிகளைத் தடை செய்வது தொடர்பாக இலங்கை அரசு இன்னும் எந்தவித தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்று மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்றுக் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் அது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

புலிகளைத் தடைசெய்வது தொடர்பாக நாடு முழுவதும் பரவலாகப் பேசப்படுகின்றது.மக்களிடமிருந்தும் இது தொடர்பாகப் பல்வேறு கருத்துகள் வெளியிடப்படுகின்றன.

ஆனால் புலிகளைத் தடை செய்வது தொடர்பாக அரசு எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை. இது தொடர்பாக அரசின் உயர் மட்டம்தான் இறுதி முடிவை எடுக்கும், என்னால் இது தொடர்பாக எதுவும் கூற முடியாது.


இன்று புலிகள் தமிழ் மக்களையே கொடுமைப்படுத்தி வருகின்றனர். வன்னியில் யுத்தம் நடைபெறுகின்றபோது மக்கள் அங்கிருந்து வெளியேறினால்தான் அவர்களுக்குப் பாதுகாப்பாக அமையும்.

ஆனால் புலிகள் அம்மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்திக்கொண்டு யுத்தத்தில் ஈடுபடுகின்றனர். புலிகளால்தான் அந்த மக்களுக்கு ஆபத்து. அரசால் அல்ல.

அம்மக்களை விரும்பிய இடங்களுக்குச் செல்லவிடாது அவர்களைப் பலவந்தமாகத் தடுத்து வைத்திருக்கின்றனர். இது பாரிய மனித உரிமை மீறலாகும். அம்மக்கள் எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தால் அவர்களை நாம் நன்றாக நடத்துவோம்.

ஆனால் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வரும் தமிழ் மக்களை அரசு கொடுமைப் படுத்துகிறது என்று புலிகள் கூறுகின்றனர்.

நாம் வன்னி மக்களுக்கு இப்போது உதவிகளைச் செய்து வருகிறோம். அவர்களும் இந்நாட்டு மக்கள் என்பதை நாம் மறக்கவில்லை. புலிகள் எம்மீது பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்திக்கொண்டு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றனர். - என்றார். (சி)



வன்னியில் படையினரின் விமானத்தாக்குதலால் கையில் அகப்பட்டவற்றை எடுத்துக்கொண்டு இடம்பெயர்ந்துபோகும் மக்களில் சிறு சாரார்...

## கண்மூடித்தனமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக விமானத்தாக்குதலில் சிக்கிக் காயமடைந்த மக்களை மீட்பதிலும் மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்வதிலும் பலத்த சிரமங்கள் எதிர்கொள்ளப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

முரசுமோட்டைப் பகுதியில் 48 மணித்தியாலங்களில் இடம்பெற்ற விமான, எறிகணைத் தாக்குதல்களில் 10 பொது மக்கள் கொல்லப்பட்டதுடன் 43 பேர் காயமடைந்துள்ளனர். நேற்றுமாலையிலும்வன்னியில் பல இடங்களில் விமானங்கள் தாக்குதலை நடத்தின என்று தகவல்கள் வந்தவண்ணமிருந்தன. எனினும் அதன்போது ஏற்பட்ட சேத விவரங்கள் பற்றித் தெரியவரவில்லை.

அதேவேளை, கிளிநொச்சிக்கு மேற்கே ஒன்றரைக் கிலோமீற்றர் தொலைவில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீதும் பரந்தனுக்கு கிழக்கே ஒன்றரைக் கிலோமீற்றர் தொலைவில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீதே தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று படைத்தரப்பில் கூறப்பட்டது.

(அ-சி)

## அம்பாறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் விடுதலைப் புலிகள் கிளைமோர்த் தாக்குதலை நடத்தினர்.

அதில் பொலிஸார் ஒருவரும் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவரும் உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் எஸ்.டபிள்யூ. திஸ்ஸ புண்ணியசிறி (வயது - 38) என்ற கான்ஸ்டபிளும் முஹம்மது அபுஸாலி அன்ஸார் (வயது - 35) என்ற ஊர்காவலருமே இவ்வாறு உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதல்களை நடத்தினர். (அ-சி)

## 2 நாள்களுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளதைத் தொடர்ந்தே, அவரின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது. இதேவேளை, கிளிநொச்சி கைப்பற்றப்படும் செய்தியை வெளியிடுவதற்காக செய்தியாளர் குழுவொன்றை அங்கு கூட்டிச்செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியா கியுள்ளன.

(அ-சி)

## மரண அறிவித்தல்

### சின்னையா வல்லிபுரம்

(பிரபல புகையிலை வியாபாரி)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா வல்லிபுரம் நேற்று (01.01.2009) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2009) வெள்ளிக்கிழமை கைதடியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தம்பு செல்வராசா
(பேறாமகன்)

# நீதியான சமாதானத்தை ஏற்படுத்த இருதரப்பும் முன்வரவேண்டும்

## புதுவருடச் செய்தியில் மன்னார் ஆயர் கோரிக்கை

மன்னார், ஜன. 02

''போரில் ஈடுபட்டு அற்புதமான மனித உயிர்களைக் கொன்றுகுவிக்கும் அநாகரிகமான செயல்கள் நிறுத்தப்பட்டு, மக்கள் எதிர்பார்க்கும் நீதியுடன் கூடிய சமாதரனம் விரைவில் ஏற்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு புதிய ஆண்டில் விடுதலைப் புலிகளும் அரசும் முன்வரவேண்டும்.

- இவ்வாறு மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தனது புதுவருடச் செய்தியில் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

அவர் தமது செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

உலகு முழுவதும் சமாதானம் எனும் தொனிப்பொருளை கத்தோலிக்க திருச்சபை கொண்டாடுகின்ற வேளையில் மக்களை வாட்டி எடுக்கும் பசி, பஞ்சம், பட்டினி ஆகியவை தீரவேண்டும்.

தற்போது அழிவு ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்பட்டு மக்களைக் கொன்று குவிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இது நிறுத்தப்படவேண்டும். குறிப்பாக வன்னிப்பிரதேசத்தில் மக்கள் உணவு இன்றி மிக வறுமையில் வாடுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

போர் என்ற சூழல் மாறி சமாதானம் பிறக்க வேண்டும். போரில் ஈடுபடுகின்ற அனைவரும் தமது தனிப்பட்ட சிந்தனைகளையும் எண்ணக்கருக்களையும் கருத்தில் கொள்ளாது மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு செயற்படுகின்ற நிலைப்பாட்டினைப்புரிந்துகொள்ளவேண்டும் - என்றுள்ளது.

## கொழும்பில் மீண்டும் பொலிஸ் பதிவு

2003 ஆண்டுக்கு பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாவட்டங்களில் இருந்து வந்து மேல் மாகாணத்தில் தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் வசிக்கும் மக்களை மீண்டும் பொலிஸில் பதியும் நடவடிக்கை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

## கண்காட்சிமூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் நடந்த நிகழ்வில் இந்த நிதியை யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கினார்.

பதினான்கு சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு தலா 50ஆயிரம் ரூபா வீதம் நிதி வழங்கப்பட்டது.

இந்தக் கண்காட்சிக்கு தெற்கு நிறுவனங்கள் வழங்கிய நிதியில் 7லட்சம் ரூபா மிகுதியாக கிடைத்தது என்றும்-

அந்த நிதியே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்றும்- படைத்தரப்புத் தெரிவித்தது.

இந்த நிகழ்வில் படை அதிகாரிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

(மற்றொரு செய்தி மூன்றாம் பக்கத்தில்)

## ஊடகத்துறை ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அமைச்சரவையில் திடீர் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டவேளை, ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேவேளை, பொது நிர்வாக அமைச்சராக சரத் அனுமுகம நியமிக்கப்பட்டுள்ளரார்.

பொதுநிர்வாகத்துறை அமைச்சராக பதவி வகித்த கருஜெயசூரிய மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்ட பின்னரே இந்த அமைச்சரவை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# செலிங்கோ நிறுவனத் தலைவர் நாட்டைவிட்டு வெளியேறத் தடை

இலங்கையின் முன்னணி தொழில் அதிபர்களில் ஒருவரும் செலிங்கோ குழும நிறுவனத்தின் தலைவருமான லலித் கொத்தலாவல மற்றும் அவரது பாரியார் ஆகிய இருவரும் நாட்டை விட்டு வெளியேறக் கூடாதென தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கல்கிசை பிரதான நீதிவான் ஹர்ஷ சேதுங்க இந்தத் தடையுத்தரவை பிறப்பித்துள்ளார்.

அத்துடன் செலிங்கோ குழும நிறுவனத்தின் பிரதித் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையின் 12 பேர் நீதிமன்றில் ஆஜராக வேண்டுமெனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனத்தில் 570 கோடி ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், அதனைவிட அதிகமான தொகை வைப்புச் செய்யப்பட்டிருக்கலாம் என நீதிவான் சுட்டிக் காட்டியுள்ளார்.

## பரந்தனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் முக்கிய நகரங்களில் ஒன்றான பரந்தன் கைப்பற்றப்பட்டுள்ளது'' - எனப் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பரந்தனைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கை செவ்வாய்க்கிழமை அதிகாலை ஆரம்பமானது. பரந்தனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலைகொண்டிருந்த படையினர் விடுதலைப் புலிகளின் பலம் வாய்ந்த நிலைகளின் மீது கடுமையான தாக்குதலைத் தொடுத்தனர் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

படையினர் பரந்தனிலிருந்து ஏ- 9 வீதிக்கு வடக்காகவும் தெற்காகவும் செல்லும் இரு முக்கிய பாதைகளையும் துண்டித்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் படையணிகள் பரந்தனை மீளக் கைப்பற்றுவதற்காக பல தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டன. பல மணி நேரமாகக் கடுமையான மோதல்கள் இடம்பெற்றன. இராணுவத்தினர் தாம் புதிதாகக் கைப்பற்றிய நிலைகளைப் பலப்படுத்தி வருவதுடன் பரந்தன் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கி முன்னேறத் தொடங்கியுள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, வியாழக்கிழமை இரணைமடுச் சந்தியையும் இராணுவத்தின் 57 ஆவது படைப்பிரிவு கைப்பற்றியுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி முன்னரங்குகளில் கடந்த பல வாரங்களாக இடம்பெற்ற கடுமையான மோதலின் பின்னர் இந்தப் பகுதியைக் கைப்பற்றியுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கிளிநொச்சிக்குத் தெற்கே 6 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்தப் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டு வந்தனர். எனினும், விமானப்படையினரினதும் ஆட்டிலறி மற்றும் பீரங்கிப் படையணிகளினதும் உதவியுடன் இராணுவத்தின் 57 ஆவது படைப்பிரிவு இப்பகுதியைக் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரணைமடுச் சந்தியில் தாம் கைப்பற்றியுள்ள நிலைகளைப் பலப்படுத்தி வரும் இராணுவத்தினர் அப்பகுதியிலிருந்து கிழக்காக முன்னேற்ற நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளனர் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. எனினும் படைத்தரப்பின் இந்த அறிவிப்புகள் தொடர்பாக விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை.

DMI
A/L 2011
ஜனவரி - 10
காலை 9.00 மணி
நாவலர் வீதி, யாழ். ஸ்ரான்லி வீதி, யாழ்.

இணைந்த கணிதம்
A/L 2011
பிறவுண் றோட்
மணிக்கல்வி நிறுவனம்
K.வேலாயுதம்
S.V.மகேந்திரம்
சனிக்கிழமை 03.01.2009
பி.ப 1.00 மணிக்கு ஆரம்பம்

PHYSICS A/L 2009
சடமும் கதிர்ப்பும் -> ஆரம்பம்: 03.01.09 (Sat, Sun- 9.30-11)
மின்னியல் -> ஆரம்பம்: 06.01.09 (Tue, Thur- 6.30-7.30)
சடப் பொருளியல் -> ஆரம்பம்: 05.01.09 (Mon, Fri- 4.30-5.30)
அனைத்தும் ஒரே கட்டணத்தில்
K.Selvan
NEC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.